படைப்பு

ஊற்று-4 | நதி-10 | பிப்ரவரி-2022 | திங்களிதழ்
ISSN : 2582-4015

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

படைப்பு இலக்கிய விருதாளர்களுடனான நேர்காணல்..

படைப்பு
தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-10 | பிப்ரவரி 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
ஸ்டெல்லா தமிழரசி
கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **படைப்பு இலக்கிய விருதாளர்களுடனான நேர்காணல்..** -பக். 05
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** – மு.முருகேஷ் -பக். 15
- **மானுட விளையாட்டு** – கவிஜி -பக். 23
- **கும்பகோணம்னா கொம்பா?** – கோ.லீலா -பக். 31
- **மனநிலைக் குறிப்புகள் 17** – ஆதிரன் -பக். 35
- **தவறவிடக்கூடாத ஒரு தரிசனம்** – நிலாகண்ணன் -பக். 39
- **நூலகமும் இடுகாடும்** – கலிங்கப்பட்டி க.கருப்பசாமி -பக். 41
- **“தமிழில் நவீன இலக்கியப் படைப்புகளின் வடிவங்கள் மொழிபெயர்ப்புப் படைப்புகளின் தாக்கத்தினால் உருவானவை..”** – திறனாய்வாளர் ந.முருகேசபாண்டியனுடனான நேர்காணல் -பக். 44
- **தேநீர் சாலை** – கரிகாலன் -பக். 49
- **சீரழிந்த சமுதாயத்தின் சாட்சி** – சு. சிவனேஸ்வரன் -பக். 54
- **பெண்ணியத்தை உயர்த்திப்பிடிக்கும் எழுத்து** – முனைவர் மு.சாஹிரா பானு -பக். 61

சிறுகதை

- கடைசி மனிதன்
  - ப.தனஞ்ஜெயன் -பக். 26

- சிற்பியின் நரகம்
  - புதுமைப்பித்தன் -பக். 56

கவிதைகள்

- ப்ரியா பாஸ்கரன் -பக். 20

- லக்ஷ்மி -பக். 21

- ராம் பெரியசாமி -பக். 21

- கா வெங்கடேஸ்வரன் -பக். 22

- ஆனந்த குமார் -பக். 22

- பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 18
  - ஜின்னா அஸ்மி -பக். 53

- ஜெ.பிரான்சிஸ் கிருபா -பக். 63

தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' நாற்பத்தாறாம் இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

போர் என்ற சொல்லே மனித மனத்தில் ஒருவிதப் பதட்டத்தை உருவாக்கப் போதுமானதாய் இருக்கிறது. அச்சொல்லின் பின் புதைந்திருக்கும் அழிவுகள் மற்றும் இழப்புகள் குறித்த சிந்தனை ஏற்படுத்துகிற உணர்வு இது. தமிழின் ஆதி இலக்கியங்கள் போர்ச் சூழலை இயல்பாய்ப் பதிவாக்கியிருப்பதன் பின்னுள்ள சமூகம் கற்பனைக்குள் விரியும்போது உடல் உதறுகிறது. போரில் ஈடுபடாதோரைக் கூட மார்பில் கீறிப் புதைக்குமளவிற்குப் போரும் வீரமும் உயிருக்குள் கலந்திருந்திருக்கின்றன.

படைபலமும் வீரமும் ஒருங்கு கொண்ட தலைமையைப் பகைத்த நாடுகள் போருக்குப் பின் என்னவாயின என்று பட்டினப்பாலை ஒரு சித்திரத்தை வழங்குகிறது. செழிப்பான இயற்கை வளம் நிரம்பிய பகுதிகள் போருக்குப் பின் வறண்டு காட்டு நிலமாயின. பலரும் தொழக்கூடிய இடம் போர்க்காலத்தில் யானைகளால் இடிக்கப்படுகின்றது. விழா நிகழ்ந்து கொண்டாட்டம் நிறைந்த இடங்கள் போருக்குப் பின் நரி ஊளையிட, பேய் விரித்தாடும் இடங்களாயின. உணவு வளம் நிறைந்து எப்போதும் விருந்து செழிக்கும் அழகு மிக்க ஊர்கள் போருக்குப் பின் பகலிலும் கூகைகள் கூவும் இடங்களாயின.

இரு அரசின் கொள்கை முடிவுகளுக்கு இடையே எதுவும் அறியா எளிய மக்கள் சிக்கிச் சிதைவது என்பது போர்ச் சமூகத்தில் இயல்பாகிப்போகிறது. போர் முடிவுற்ற பின்னான ஒரு சமூகத்தின் சிந்தனையாக எழுந்த ஒரு பாலஸ்தீனக் கவிதையில் 'எங்கள் மண்ணை யார் விற்றார்கள் என்பது எனக்குத் தெரியாது – ஆனால் அதற்கான விலையை யார் தருகிறார்கள் என்பதற்கு சாட்சி நான்' என வரும் வரி மக்களின் குரலாகிறது.

போரே அறமாக இருந்த சமூகம் இலக்கியங்களில் மட்டும் வாழ்ந்துவிட்டுப் போகட்டும். போரின் அற மீறலை ஏற்றுக்கொள்ள இயலாத நடுநிலை மனங்கள் நிறைந்திருக்கும் இவ்வுலகில் போரைத் தவிர்க்கும் சாத்தியங்களை அவ்அறிவுக் குரல்கள் உரத்து ஒலிக்கவிடட்டும்.

படைப்பின் விருதுகள் பெற்ற படைப்பாளர்களின் நேர்காணல்கள் இந்த இதழில் வெளியாகியுள்ளன.

தகவில் வெளியாகியுள்ள கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– ஆசிரியர் ■

சோலைமாயவன், தீபிகா நடராஜன், அருணன், அம்மு ராகவ்

படைப்பு இலக்கிய விருதாளர்களுடனான நேர்காணல்..

தமிழ் எழுத்துலகின் மதிப்புமிக்க **'படைப்பு இலக்கிய விருது 2021'** பெற்ற எழுத்தாளர்கள் தம் தகுதியால் தம்மை நிலைநிறுத்திக்கொண்டவர்கள். உலகியல் அறிவு, கற்பனை வளம், ஈர்த்துவிடும் எழுத்து வல்லமை எனப் படைப்புத்திறன்களை ஒருங்கு பெற்றவர்கள். தமிழின் மிக முக்கியமான படைப்பாளர்களாக உருவாகியுள்ள அவர்களுடன் அவர்தம் படைப்பு குறித்தான **நேர்காணல்..**

எழுத்தாளர் ராம் தங்கம்

பிரிவு : குறுநாவல்
விருது பெற்ற நூல் : ராஜ வனம்
வெளியீடு : வம்சி புக்ஸ், திருவண்ணாமலை.

ராஜவனம் எனும் நாவல் எழுதக் காரணமாக இருந்தது..

இயற்கை சார்ந்த ரசனைதான் முக்கியக் காரணம். அடிக்கடி காடு சார்ந்த இடங்களுக்குப் பயணம் செல்வது ராஜவனம் எழுத ரொம்ப தூண்டுதலாக இருந்தது. வேறு எல்லா வாழ்க்கை முறையையும் நம்முடைய கற்பனையில் இருந்து நிறைய எழுத முடியும். ஆனால் காடு சார்ந்து அப்படி எழுத முடியாது. காடு சார்ந்து வந்த பதிவுகள் மிகக் குறைவாகத்தான் தமிழில் இருக்கிறது. அது தவிர கன்னியாகுமரி மாவட்டம் ஒரு இயற்கை வளம் சார்ந்த காடு, மலை, அருவி, விலங்குகள் எனச் சேர்ந்து இருக்கக்கூடிய நிலப்பரப்பு என்பதால் அதை எழுதுவதற்கு ஆர்வமும் தூண்டுதலும் இயல்பாக வந்தன.

ராஜவனம் எல்லாத் தரப்பு மக்களிடமும் சென்று போய்ச் சேர்ந்த நூல். அதில் உங்களுக்கு வாசகர்களிடம் அல்லது எழுத்தாளர்களிடம் இருந்து வந்த மறக்க முடியாத பாராட்டு பற்றிக் கூறுங்கள்..

சிங்கப்பூர் மாயா இலக்கிய வட்டம் குறுநாவல் போட்டிக்கு ராஜவனத்தை அனுப்பி இருந்தேன். அதன் நடுவர் எழுத்தாளர் சாரு நிவேதிதா இதனை முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுத்திருந்தார். அதன்பிறகு அவர் என்னிடம் பேசும்போது புத்தகத்தின் சிறப்புகளைப் பற்றிச் சொல்லும்போது ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. அதன்பின் சாகித்ய அகாதமி விருது பெற்ற மொழிபெயர்ப்பாளர் கே.வி.ஜெயஸ்ரீ அவர்களின் வீட்டில் இருந்த ராஜவனம் பிரதியை அவரது அம்மா மாதவி அவர்கள் வாசித்துவிட்டு அவருடைய மகளும் மொழிபெயர்ப்பாளரும் பதிப்பாளருமான கே.வி.ஷைலஜா அவர்களிடம் `இந்தப் புத்தகத்தை நான் படித்துவிட்டேன், ரொம்ப நல்லா இருக்கு. நீ வம்சி புக்ஸ் மூலம் கொண்டு வா` என்று சொல்லி இருக்கிறார்.

அச்சுப் புத்தகமாக வெளிவந்தபின் எழுத்தாளர் வண்ணதாசன் அவர்கள் வாசித்துக் கொண்டிருக்கும்போது அது பற்றி முகநூலில் பதிவு செய்து வாழ்த்தினார். அதன்பின் அவர் அவருடைய நண்பர்களான எழுத்தாளர் எம்.எம்.தீன் போன்ற பலருக்கும் புத்தகத்தைப் பற்றிச் சொல்லி அவர்களும் வாழ்த்தினார்கள். கோத்தகிரியில் வசிக்கும் இரண்டாம் வகுப்பு மாணவி ஸ்ரீயக்ஷா, தன் அம்மா மூலம் ராஜவனம் நாவல் கதையைத் தெரிந்துகொண்டு என்னிடம் முழுக்கதையையும் சொல்லி ஆச்சரியப்படுத்தினார்.

எழுத்தாளர் பொன்னீலன் அவர்கள், நாஞ்சில் நாடன் அவர்கள், பவா செல்லதுரை அவர்கள், கரூரைச் சேர்ந்த பாட்டி லட்சுமி அம்மாள், விஜயா பதிப்பகம் வேலாயுதம் அண்ணாச்சி அவர்கள் எனப் பலரும் ராஜவனம் வாசிப்பு அனுபவத்தைச் சொல்லி எனக்கு ஆச்சரியப்படுத்தினார்கள். அதிகாலையில் தூங்கிக் கொண்டிருக்கும்போது எழுத்தாளர்

எஸ் ராமகிருஷ்ணன் அவர்கள் போனில் தொடர்பு கொண்டு ராஜவனம் புத்தகம் குறித்துப் பேசியது மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. புத்தகம் குறித்து இப்போதும் தினசரி ஒருவர் பேசுகிறார்.

ராஜவனம் எழுத எவ்வளவு நாட்கள் எடுத்துக் கொண்டீர்கள்? இதற்காக உங்கள் தயாரிப்பு என்னவாக இருந்தது?

ராஜவனம் எழுதுவதற்கு மிகக் குறைந்த நாட்கள்தான் எடுத்துக்கொண்டேன். ஆனால் அதற்கான தயாரிப்புப் பணிக்குச் சுமார் ஒன்றரை வருடத்தில் இருந்து இரண்டு வருடங்கள் தேவைப்பட்டன. 2020ஆம் ஆண்டு போடப்பட்ட ஊரடங்குக் காலத்தில் எழுதினேன். அந்த ஊரடங்குக் காலம் இல்லாமல் இருந்திருந்தால் நான் எழுதி இருப்பேனா/ புத்தகம் இப்போது வந்து இருக்குமா என்று தெரியவில்லை.

ராஜவனம் எழுதி முடித்ததும் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

ராஜவனம் எழுதி முடித்தபின் என்பதைவிட எழுதும்போது இருந்த மனநிலைதான் முக்கியம். எழுதும்போது நடுக்காட்டில் இருப்பது போன்ற உணர்வு எனக்குள் இருந்தது. இரவும் பகலும் காட்டுக்குள்ளேயே அலைந்துகொண்டிருப்பதாக மனம் உணர்த்தும். தூக்கத்தில் கூட தலையில் மரம் முளைத்தது போலவும், யானை, புலிகள் துரத்துவது போலவும் கனவுகள் வந்தன. எல்லாவற்றையும் எழுதி முடித்ததும் காட்டிலிருந்து ஒட்டுமொத்தமாக என்னைத் தூக்கி வெளியே வீசியதுபோன்ற ஒரு மனநிலை இருந்தது.

ராஜவனம் நாவலின் அடுத்த பகுதி எழுதும் எண்ணம் உள்ளதா?

முதலில் எனக்கு அந்த எண்ணம் இல்லை. ஆனால் புத்தகத்தை வாசித்த எல்லா வாசகர்களும் அந்தக் கதை சீக்கிரம் முடிந்துவிட்டதாகவே உணர்ந்து பேசுவார்கள். ஏன் சீக்கிரம் முடித்தீர்கள் என்று கேட்பார்கள். நிறைய பேர் இதில் இரண்டாம் பாகம் வருமா என்று கூட கேட்டிருந்தார்கள். அதன்பிறகுதான் அந்தக் கதையின் தொடர்ச்சி எழுதுவதற்கான எண்ணம் எழுந்தது. தற்போது ராஜவனம் இரண்டாம் பகுதி எழுதுவதற்கான தயாரிப்புப் பணிகளில் தேடுதலில் இருக்கிறேன்.

கவிஞர் ஆண்டன் பெனி

பிரிவு : கவிதை – வட்டார வழக்கு
விருது பெற்ற நூல் : தட்டான்குழி
வெளியீடு : தமிழ் அலை, சென்னை

தட்டான் குழி முழுக்க உங்கள் மண்ணும், மக்களுமே நிறைந்து இருக்கிறார்கள். அவர்களுடனான உங்கள் பால்யகாலத்தைப் பற்றி எங்களுக்குச் சொல்லுங்கள்.

எனது பால்யம் அப்படியொன்றும் மகிழ்ச்சியானது இல்லை. விளம்பர இடைவேளைக்கும் குறைவான அளவிலே நான் எனக்கான வாழ்க்கையினை வாழவேண்டியிருந்தது. அந்த நாட்களில் வறுமைக்கும் சாதிய ரீதியான பாகுபாட்டிற்கும் என் வாழ்க்கை வாக்கப்பட்டிருந்தது.

வெக்கைக்கும் இன்னல்களுக்கும் மத்தியிலும் கொஞ்சமாகக் கிடைத்த சந்தோசங்களே இன்றளவுக்கும் நினைத்துப் பார்க்க மகிழ்ச்சியாக இருப்பது ஆச்சர்யமே.

காட்டுப்பேச்சி, ராணி, மதினி போன்ற பெண்களைப் பற்றிய கவிதைகளைப் படித்தேன். கிராமப்புறங்களில் பெண்களின் கல்வி, பொருளாதாரம், அவர்களுக்கான தனிமனிதச் சுதந்திரம் எந்த நிலையில் உள்ளன?

நான் அங்கு இருந்தவரைக்கும் காட்டுப்பேச்சி, ராணி அக்கா, மதினி எல்லோரும் அப்படியேதான் இருந்தார்கள். எந்தவித முன்னேற்றமும் இல்லை. உடலளவிலும் மனதளவிலும் செத்துப்போயிருந்தார்கள். மதினி என்று யாரையும் இப்போது கூப்பிடமுடியவில்லை. உறவுகளை அழைப்பதில் இருந்த சுகம் மறந்துபோய்விட்டது. மனமும் வேறொரு வாழ்க்கை முறைக்குப் பழகிவிட்டது. அவர்களைப் பதிவுசெய்த வகையில் அவர்களுக்கு நன்றியுடையவனாக எனது கடமையைச் செய்திருக்கிறேன். மற்றப்படி இன்றளவிலும் எதுவுமே மாறவில்லை.

தென் மாவட்டங்களில் சாதிரீதியான ஒடுக்குமுறைகள் மிக அதிகம். அங்கிருந்து வந்து இன்று குறிப்பிடத்தக்க நிலைக்கு உயர்ந்திருக்கிறீர்கள். ஆனால் இன்னும் அங்கு அதே மாதிரியான வன்முறைகள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. இதற்கு என்ன தீர்வு?

முன்புக்கு இப்போது பரவாயில்லை என்று தோன்றுகிறது. ஆனாலும் சமூக வலைத்தளங்கள் முன்பைவிடவும் சாதியரீதியான ஒருங்கிணைப்பை முன்னெடுத்து வலிமையாக்குகின்றன. பொதுவெளியில் சாதியரீதியான மனநிலையை மறந்துவிட்ட நண்பர்களுக்கும் முகநூல் வாட்ஸ்அப் குழுக்கள் நினைவுபடுத்திக்கொண்டே இருக்கின்றன. இப்படியான சாதியக் குழுக்கள் இணையவெளியைக் கற்காலத்திற்குக் கொண்டு சென்றுவிடுமோ என்று கவலையாக இருக்கிறது.

உங்களைப் போன்று ஆட்சிப்பணியில் இருக்கும் ஒரு தனிநபர் இலக்கியம் படிக்க வேண்டியதின் அவசியம் என்ன? அது என்ன மாதிரியான மாற்றங்களை ஏற்படுத்தும்?

நிர்வாகச் சூழலால் ஏற்படும் இறுக்கத்தினைக் குறைக்க இலக்கியமே பெரிதும் உதவுகின்றது. மக்களை அணுகுவதை எளிமையாக்கி, அவர்களுக்கும் எனக்குமான இடைவெளி எதுவும் இல்லாமல் பார்த்துக்கொள்கிறது. இலக்கியம் மட்டுமே நிர்வாகத்தில் எனக்கு நல்லதொரு இயங்குதளத்தினை உருவாக்கித் தருகிறது என்று உறுதியாக நம்புகிறேன்.

கவிஞர் இரா.பூபாலன்

பிரிவு : சிறப்புப் பரிசு – கவிதை
விருது பெற்ற நூல் : அரூபத்தின் வாசனை
வெளியீடு : பொள்ளாச்சி இலக்கிய வட்டம்.



தங்கள் அரூபத்தின் வாசனை படைப்பு விருது பெற்றபொழுது தங்கள் மனநிலை எப்படி இருந்தது?

விருது எந்த ஒரு படைப்புக்கும் ஊக்கம் தரும் அங்கீகாரம். படைப்பு அமைப்பு தற்போது தமிழ் இலக்கிய அமைப்புகளில் குறுகிய காலத்தில் மிகப்பெரிய வளர்ச்சியும், அதீத செயல்பாடுகளும் கண்ட அமைப்பு. படைப்பு விருது அரூபத்தின் வாசனையை நுகர்ந்திருக்கிறது. அதன் நறுமணத்தை உணர்ந்திருக்கிறது என்பதே மகிழ்ச்சி.

மகாகவி சிற்பி அவர்கள் வானத்தில் மிதக்கும் பரிதி என்று தங்கள் கவிதை குறித்து வாழ்த்துரை வழங்கியுள்ளார் - அது படைப்புச் சார்ந்த செயல்பாடுகளில் எந்தளவு உதவியாக இருக்கிறது..

கவிஞர் சிற்பி அவர்களின் அணிந்துரை இந்தத் தொகுப்புக்குக் கிடைத்திருப்பது ஓர் ஆசிர்வாதம் என்றே கருதுகிறேன். தமிழின் தலைசிறந்த படைப்பாளுமை, அற்புதமான வாசகர், என் கவிதைகளைப் படித்து அதற்கான அணிந்துரை எழுதிக்கொடுத்திருப்பது என்னைப் பெருமையாக உணரச் செய்தது. ஐயாவின் எழுத்துத் திட்டங்களையும், சூழ்ந்திருக்கும் பணிச் சுமையையும் அறிந்தே மிகுந்த தயக்கத்துடன் தொகுப்பைத் தந்துவிட்டு முடிந்தால் அணிந்துரை அல்லது பின்னட்டைக் குறிப்பு மட்டும் தந்தாலும் போதும் என விண்ணப்பித்திருந்தேன். நீண்ட அழகான அணிந்துரையைத் தந்து என்னை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டார். அவரது கைப்பட எழுதிக்கொடுத்த அணிந்துரையின் அசல் தாள்கள் என் வாழ்நாளெல்லாம் நான் போற்றிப் பாதுகாக்கப்போகும் ஒரு செல்வம்.

தனிமை, துயரம், மரணம், இயலாமை என வாழ்ந்து கெட்டவர்களின் வீட்டில் எழும் விசும்பலின் சாயல் தொகுப்பு முழுக்க இழையோடி இருந்ததைக் காண முடிகிறது. கவிதைத் தொகுப்பு வெளிவந்த பிறகு அந்த வலியிலிருந்து ஆசுவாசம் அடைந்தீர்களா?

இந்தத் தொகுப்பு எழுதப்பட்ட காலம் முழுதும் நான் சந்தித்தவற்றைத்தான் எழுதியிருந்தேன். தனிமையும் துயரும் மிகுந்த நாட்கள்தாம் அவை. ஒரு வகையில் நான் அவற்றைக் கவிதைகளால் எதிர்கொண்டேன். எழுத்தின் மூலமே கடந்திருக்கிறேன் என்பதற்கான சாட்சிதான் இந்தக் கவிதைத் தொகுப்பு.

உங்களுடைய ஒவ்வொரு கவிதையையும் வாசிக்கும் மனதில் ஒரு காட்சியை உருவாக்கிக் கவிதையோடு இன்னும் நெருக்கமாக வாசகனை இணைத்துவிடுகிறீர்கள். இந்த மொழிநடையை எவ்வாறு கற்றுக்கொண்டீர்கள்?

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவிமொழி இருக்கும். எனக்கிருக்கும் கவிமொழியில் ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டீர்கள். காட்சிகளாகக் கவிதைகளைச் சொல்வது கவிதையில் ஓர் உத்தி. அது நமது கற்பனையிலிருக்கும் ஒரு காட்சியை அல்லது சம்பவத்தை வாசக மனதுக்குக் கடத்த எளிமையான வழியாக இருக்கிறது. படிமங்களின் வழியாகக் கவிதையைச் சொல்வது புதிய முறையன்று.

அரூபத்தின் வாசனை தொகுப்பில் எட்டுவழிச்சாலை குறித்த இரண்டு கவிதைகள் இருக்கின்றன. அவற்றைக் கருத்த நீண்ட மலைப்பாம்பு என வர்ணித்த விதம் அருமை. அது குறித்து?

அந்தக் கவிதை புது தில்லியில் நடந்த சாகித்ய அகாதமியின் இளம் கவிஞர்களின் மாநாட்டில் வாசிக்கப்பட்ட கவிதை. கருத்த நீண்ட மலைப்பாம்பு எப்படி குறியீடோ அதே போல எட்டுவழிச்சாலை என்பதும் குறியீடுதான். அது எட்டுவழிச்சாலையை மட்டுமன்றி விவசாய நிலங்களை அழித்து, மனித மற்றும் பல்லுயிர்களின் வாழ்வாதாரங்களை அழித்து முன்னெடுக்கப்படும் அறிவியல் வளர்ச்சியின் பாதகங்களைப் பேசும் கவிதை. நவீன வாழ்வின் அசுர வேகத்தில் அழிவின் பாதையை மனித இனம் தேடிக்கொண்டிருக்கிறதோ என்கிற பதைபதைப்பு இந்தக் கவிதை. எதிர்க் கேள்விகள் கேட்கத் திராணியற்ற அல்லது ஒடுங்கிப்போன எதிர்க்கேள்விக் குரல்களின் பிரதிநிதிக் குரல்தான் இந்தக் கவிதை.

ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்த குழந்தையின் மரணம் குறித்த கவிதைகள் கல்மனதையும் கரைத்துவிடுகின்றன. குழந்தைகளின் பாதுகாப்பில் அரசாங்கம் எடுக்க வேண்டிய முன்னெடுப்புகள் எவ்வாறு இருக்க வேண்டும்?

ஒவ்வொரு ஆண்டும் ஆழ்துளைக் கிணறுகளில் சிக்கி ஒரு சின்னஞ்சிறிய உயிராவது போய்விடுகிறது என்பது இவ்வளவு அறிவியல் வளர்ச்சியடைந்துவிட்ட நவீன யுகத்தில் வேதனையும் அவமானமும் கொள்ள வேண்டிய ஒன்று. ஆழ்துளைக் கிணறு தோண்ட அங்கீகாரம் வழங்குவது முதற்கொண்டு நீரற்ற குழிகளை முறையாக மூடுவது வரைக்குமான ஒரு முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அரசால் ஒரு புதிய திட்டமாகவே கொண்டுவரப்பட வேண்டும். செயல்படுத்தப்படவும் வேண்டும். மேலும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இந்தத் தார்மீகப் பொறுப்பு இருக்கிறது. அலட்சியமாக விடப்படும் குழிகள் ஆவென வாய்பிளந்து காத்திருக்கின்றன என்கிற எச்சரிக்கையையும் சேர்த்தே கவிதையில் சொல்லியிருக்கிறேன்.

கவிஞர் தேவசீமா

பிரிவு : சிறப்புப் பரிசு – கவிதை
விருது பெற்ற நூல் : வைன் என்பது குறியீடல்ல
வெளியீடு : தேநீர் பதிப்பகம், சென்னை.

ஏன் நீங்கள் கவிதையைத் தேர்வு செய்தீர்கள்? அதற்கான பிரத்யேகமான காரணம் என்ன?

என்னைப் பாதித்த ஒரு விசயத்தை எளிதாகச் சொல்லும் முறையாக மற்றும் ஒரு படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வழியாக கவிதை எனக்குப் பட்டது. அப்படிப்பட்ட நேரத்தில் நான் கவிதையைத் தேர்வு செய்தேன். பிரத்யேகமான காரணம் என்று எதுவுமில்லை. அந்த நேரத்தில் சிறுகதை எனக்கு ஏற்புடையதாகத் தோன்றியிருந்தால் சிறுகதை எழுதியிருப்பேன்.

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு, மேல்மட்ட உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குச் சராசரி மக்களுடைய வாழ்வனுபவம் அவ்வளவாகக் கிடைக்காது. எனவே அவர்களுடைய எழுத்தில் எளியவர்களின் வலியைப் பதிவு செய்வதை விட தனிமனித வலி, மனஇறுக்கம், பிரச்சினைகள் என்றுதான் எழுதுகிறார்கள் என்று ஒரு பரவலான பேச்சு உள்ளது. அதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

பிறந்தவுடன் யாரும் அதிகாரத்தில் அமர்ந்து விடுவதில்லை. அதற்காக அவர்கள் கடக்க வேண்டியது மிக நீண்ட வலியுடன் கூடிய ஒரு பயணம். அதுவும் ஒரு பெண்ணாக மிகக் கடினமான ஒரு பயணம் காத்திருக்கிறது. அதற்குப் பிறகே அவர்கள் அவ்விடத்திற்கு நகர முடியும். அவ்விடமும் நிரந்தரமல்ல, அது ஒரு தொடக்கப்புள்ளிதான். நீங்கள் அங்கு அமர்ந்த பிறகு எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் பரந்துபட்டதாக இருக்கும்.

அப்படியிருக்கையில் அவர்களுக்குச் சராசரி மக்களுடைய வாழ்வனுபவம் அவ்வளவாகக் கிடைக்காது என்பது மிகப்பெரிய தவறான நம்பிக்கை. ஏனென்றால் உங்களைவிட சராசரி மனிதர்களின் பிரச்சினைகள் அவர்களிடம்தான் வந்து முறையிடப்படுகின்றன. தொடர்ந்து கேட்கக்கூடிய இடத்தில் அவர்கள் இருக்கிறார்கள். எளியவர்களின் வலியைப் புரிந்து கொண்டவராகத்தான் மேல்மட்டத்திலிருப்பவர்கள் இருக்க முடியும்.

அதை அவர் உங்களிடம் காண்பிக்கவில்லை என்பதற்காக அவருக்கு அவ்வனுபவம் இல்லையென்று எடுத்துக்கொள்ள முடியாது.

மேலும் தனிமனித வலி, மனஇறுக்கம், பிரச்சினைகள் இவைகள் சொல்லத் தேவைப்படாத விசயங்களா என்ன?

முதல் தொகுப்பிலேயே நான்கு விருதுகள், பரவலான விமர்சனம் என்று கிடைத்ததற்கு எது காரணம் என்று நீங்கள் நம்புகிறீர்கள்?

‘வைன் என்பது குறியீடல்ல’ நூலுக்கு முதலிலிருந்தே தெளிவாக அளிக்கப்பட்டு வரும் விமர்சனம் என்பது இது முதல் தொகுப்பு போலவேயில்லை... இரண்டு மூன்று தொகுப்புகளுக்குப் பின்பு ஒரு கவிஞர் கொடுக்கும் தொகுப்பாகவே இது இருக்கிறது என்ற விமர்சனம்தான் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. எனவே கவிதைகளே காரணம் என்று நான் நம்புகிறேன்.

எல்லோரும் ஆரம்பத்தில் காதல் கவிதை எழுதி, பிறகு இறுக்கமான விஸ்தாரமான கவிதை எழுதுவதற்கு நகர்வார்கள். நீங்கள் ஆரம்பத்திலேயே காத்திரமான கவிதைகளைப் படைத்துவிட்டு தற்போது காதல் கவிதைக்கு நகர்வது ஏன்?

வைன் என்பது குறியீடல்ல இறுக்கமான விஸ்தாரமான காத்திரமான கவிதைகளைக் கொண்ட தொகுப்பு என்று நீங்கள் ஒப்புக்கொண்டமைக்கும் அதைக் குறிப்பிட்டுக் கூறியமைக்கும் முதலில் நன்றி. காதல் கவிதைகள் எளிய உணர்வுகளை மிக அழகாகச் சொல்லும் விசயமாகவே எப்போதும் இருக்கின்றன. ஆனால் என்னுடைய நிதானன் கவிதைகள் அப்படிப்பட்டவை அல்ல. உங்களை அதில் சிந்திக்கத் தூண்டும் விசயங்கள் இருக்கின்றன. அதில் அரிகண்டம் வரும், யூதாஸ் வருவார். தொடர்ந்து நீங்கள் கேட்டுக் கொண்டேயிருப்பீர்கள்.. அவர்கள் யாரென அல்லது அரிகண்டம் எதுவென... அப்படிப்பட்ட கவிதைகளைத்தான் நிதானன் உங்களுக்குத் தருவார் என்று நம்புகிறேன்.

❋

எழுத்தாளர் சீனிவாசன் நடராஜன்

பிரிவு : நாவல்
விருது பெற்ற நூல் : 1967 தாளடி
வெளியீடு : தேநீர் பதிப்பகம், ஜோலார்பேட்டை.

உங்களுடைய ‘தாளடி’ நாவல் பரவலான கவனத்தைத் தமிழ்ச்சூழலில் பெற்றிருக்கிறது. பல பரிசுகளையும் பெற்றிருக்கிறது. ‘தாளடி’ நாவல் சொல்முறையில் பல கதைகளைத் தொகுத்துச் சொல்லக்கூடிய கதைத் தொகுதி மாதிரியான ஒரு வடிவத்தைக் கைக்கொண்டு இருக்கிறீர்களா?

பல உண்மைகள் 1967 காலகட்டத்தில் கீழத் தஞ்சையில் நடந்தேறி இருக்கின்றன. பல உண்மைகளை ஒரு கதையாகச் சொல்வது மிகப்பெரிய சவால். ஒரு உண்மையை எடுத்து

விரிவான கதையாகச் சொல்ல முடியும். சுலபமான, நேர்கோட்டுக் கதையாடலில், எதார்த்தவாத நடையில் பேச முடியும். ஆனால் பல உண்மைகளை ஒரு கதையாகத் தொகுத்துச் சொல்வதென்பது மிகப்பெரிய சவால். ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்க வேண்டும், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலும் இருக்க வேண்டும். இப்படியான ஒரு வடிவம்தான் தாளடி நாவல்.

தாளடி எதைப் பேசுகிறது என்றால், ஒடுக்கப்பட்ட மக்களின் மீது ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடந்துவிடுகிறது, அந்தச் சம்பவத்திற்குப் பின்புலமாக என்னவெல்லாம் நடந்திருக்கும், எப்படியெல்லாம் அது நிகழ்த்தப்பட்டிருக்கும், அதற்குப் பின்னால் பொருளாதாரரீதியாக யார்யாரெல்லாம் உதவி செய்திருப்பார்கள், அதற்கு ஆள் திரட்டுவதற்கு யாரெல்லாம் உதவி செய்தார்கள், அவர்கள் அந்தக் காலகட்டத்தில் எப்படி இருந்தார்கள் என்பதைச் சித்தரிக்கக்கூடிய ஒரு வடிவமாக இந்நாவல் அமைக்கப்பட்டிருக்கும்.

அதில் இரண்டு வெவ்வேறுவிதமான கருத்தியல் கொண்ட குழுக்கள், இரண்டும் ஒன்றை ஒன்று எப்படி ஊடுருவி வேவு பார்த்து ஒன்றுக்குள் ஒன்றாக இருவருமே மக்களுக்காக என்ன நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பதைத்தான் இந்நாவல் விரிவாகப் பேசுகிறது.

ஒரு சம்பவத்தை நீங்கள் சொல்லும்போது அதில் வரக்கூடிய கதாபாத்திரங்கள், அவர்களுடைய பேச்சு மொழி, கீழத்தஞ்சை வட்டாரத்தில் உள்ள மக்களுடைய மொழி, இவை எல்லாவற்றையுமே எப்படி அந்த நாவலில் கொண்டு வந்திருக்கிறீர்கள்?

பாலிபோனிக் என்று சொல்லலாம். பறவைகளைப் பார்க்க காலை ஐந்து மணிக்கு எழுந்து போனால், ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு மாதிரியான ஒலியை ஒலிக்கக் கூடியது. நான் ஒரு Birdwatcher என்கிற இடத்தில் இருந்து கிரகித்து வைத்திருக்கிறேன். மக்கள் பேசக்கூடிய மொழி ஒரே மாதிரியாகத் தோன்றினாலும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான குரல்.. கருத்துமே வெவ்வேறு விதமாக இருக்கக்கூடியதை நாம் பார்க்கிறோம்.

ஒருவருக்கு எம்ஜிஆர் படம் பிடிக்கும், வேறு ஒருவருக்கு சிவாஜி பிடிக்கும், சிலருக்கு இளையராஜா பிடிக்கும், சி.எஸ். சுப்புராமன் பிடிக்கும். ஜெயச்சந்திரன், ஜென்சி, சி.எஸ்.ஜெயராமன் இப்படி ரசனையும் வேறுபடும். வெவ்வேறான கருத்தியல்கள் தனிமனிதரிடம் இருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. அதனால்தான் தாளடி முழுவதும் ஒவ்வொரு தனிநபரும் வெவ்வேறு விதமான பார்வையைப் பதிவு செய்திருப்பார்கள். மேலும் மக்கள் மீதான அன்பும், தனிநபர் மீதான அன்பும், ஒத்திசைவாக இந்த நாவலில் இருக்கிறது. ஆனால் ஒவ்வொருவருக்கும் அதன்மீது வெவ்வேறு பார்வையும் வெவ்வேறு கருத்தும் இருப்பதை இந்நாவல் பதிவு செய்கிறது.

ஒரு கொடுமையான சம்பவம் நடந்து கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்டது. இந்த நேரத்தில் படைப்பிலக்கியமாக அதை மறுபடியும் நீங்கள் ஒரு வாசிப்பு செய்கிறீர்கள். அதன் மூலமாக வாசகர்களுக்கு என்ன சொல்ல வேண்டும் என்று நினைத்தீர்கள்?

எல்லாமே ஒரு கலை வடிவமாக இருக்க வேண்டும், அதற்குள் எல்லாவற்றையும் பேச வேண்டும், பேச முயற்சி செய்ய வேண்டும். ஒரு இலக்கியப்பூர்வமாக அதைப் பேசிப் பார்க்க வேண்டும். நிறைய பேர், எனக்கு முன்னோடிகள் இதே விஷயத்தை எழுதும்போது, பொதுச் சமூகம் அவற்றையெல்லாம் பிரச்சாரம் என்று ஒதுக்கிவிடுவதை நான் பார்த்திருக்கிறேன். அவ்வாறு ஒதுக்கிவிட்ட பொதுச் சமூகத்திற்குள் இந்த வேதனையை, வலியை இந்த ஒரு பெரிய அவலத்தை, மனிதன் மேல் இருக்கக்கூடிய அவமானத்தைக் கலை வடிவத்திற்குள் எடுத்துச்சென்று பொதுச் சமூகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கம்தான் எனக்கு இருந்தது. கலை வடிவமாக அதனை எடுத்துப் போகும்போது பொதுச் சமூகத்தால் நிராகரிக்க முடியாது என்று நான் நம்பினேன். அந்த அடிப்படையில்தான் இதனை ஒரு கலை வடிவமாகச் செய்துபார்க்க நினைத்தேன்.

ஓரளவுக்கு ஒரு நல்ல பரந்த கவனத்தைத் தாளடி நாவல் பெற்றிருப்பதால் உங்களுடைய

நோக்கம் ஓரளவிற்கு நிறைவேறியிருக்கிறது என்று சொல்லலாம் இல்லையா?

எந்த ஒரு கலை வடிவத்திற்கும் நோக்கம் என்று ஒரு படைப்பாளனிடம் பெரிதாக இருப்பதில்லை. ஆனால், அவன் வளர்ந்த விதம், வாழ்ந்த சூழல், அவனை ஒரு கருத்தியலுடன் உடன்படச் செய்வதும், அதே கருத்தியலை விவாதித்துப் பார்க்கச் செய்வதும், அதே கருத்தியலை மறுபரிசீலனைக்காக அவனே ஒரு கலை வடிவத்திற்குள் செய்து பார்ப்பதும்தான் அதன் நோக்கம். அது வெளிப்பட்ட அடுத்த நிமிடமே அவனுக்கு அந்த நிறைவைக் கொடுத்துவிடுகிறது. அதற்குப் பிறகு நடப்பவை எல்லாமே நுகர்வோரினுடைய அல்லது ரசிப்பவர்களுடைய அல்லது படிப்பவர்கள் அல்லது தீவிரமாக வாசிக்கக் கூடியவர்கள், கலை இலக்கியத்திற்குள் இருப்பவர்கள், விற்பனையாளர்கள், இப்படியானவர்களுடைய வெவ்வேறான பார்வையை அது கோரும்.

ஒரு கலை வடிவம் ஒரே மாதிரியாகப் புரிந்துகொள்ளப்பட்டால் அது செயற்கையாக செய்யப்பட்டதாக (Craft) இருக்கும். வெவ்வேறு விதமாகப் புரிந்துகொள்வதற்கான இடத்தைக் கொடுத்தால் மட்டும்தான் அது கலை வடிவமாக இருக்கும். அந்த விதத்தில் வாசிப்பவர்களோ அல்லது ரசிப்பவர்களோ அல்லது வெறுப்பவர்களோ, தங்களுடைய உணர்வை வெளிப்படுத்தியதால், என்னுடைய கலை வெளிப்பாடான அந்த நாவல் கலைப் படைப்பாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

உங்களுடைய இளமைக் காலத்தில், பள்ளிப் பருவத்தில், இலக்கியம் அறிமுகமான பொழுதுகளில், யாருடைய எழுத்துக்களை அதிகமாக வாசித்தீர்கள்?

நான் பிறந்தது ராஜ மன்னார்குடியில், வளர்ந்தது லைப்ரரி சயின்ஸ் ரங்கநாதன் பிறந்த சீர்காழியில். அங்கு நூலகத்திற்கென்று தனி கட்டிடம் கிடையாது, ஒரு வாடகைக் கட்டிடத்தில்தான் இயங்கியது. இன்றளவும் அப்படித்தான் இயங்குகிறது. வாடகைக் கட்டிடம் பார்த்து நூலகம் மாறிக்கொண்டே இருக்கும், அந்த நூலகத்தினுடனேயே நாங்களும் பயணம் செய்தோம். நூலகத்தில் இருந்த நிறைய புத்தகங்களை வாசிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எங்கள் ஊரில் பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் என இரண்டு இருக்கிறது. பழைய பேருந்து நிலையத்தில் பெரிய புத்தக விற்பனையாளர்கள் பேருந்தில் புத்தகங்களைக் கொண்டுவந்து பள்ளி மாணவர்கள் பேருந்தில் ஒரு புறம் ஏறி புத்தகங்களை படித்துக்கொண்டே மறுபுறம் இறங்குவது போன்ற நிகழ்வினை வருடா வருடம் நடத்திவந்தார்கள்.

அதேசமயம் சிறிய துணித் திரை ஒன்றினைக் கட்டி அங்கேயே இருந்து வாசிக்கக்கூடிய பழக்கமும் இருந்தது. முதன்முதலாக ரஷ்யப் புத்தகங்கள், குறிப்பாக மொழிபெயர்ப்பு புத்தகங்களை வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவைகளில் கெட்டியான அட்டைகளில் வரக்கூடிய, 25 பைசா 30 பைசாவிற்கு விற்பனையாகக்கூடிய புத்தகங்களை என்னுடைய அப்பா எனக்கு நிறைய வாங்கிக் கொடுத்திருக்கிறார். அப்படித்தான் நான் வாசிக்கும் பழக்கத்திற்கு வந்தேன். எல்லாருக்கும் தெரிந்த பல ரஷ்ய மொழிபெயர்ப்புப் புத்தகங்களைத்தான் நான் சிறுவயதில் வாசிக்க ஆரம்பித்தேன்.

எங்கள் ஊரில் வாசகசாலை, வாசகர் வட்டம், மருதம் வாசகர் வட்டம் என்றெல்லாம் பிரபலமான அமைப்புகள் இருந்தன. என்னுடைய ஊரிலிருந்து அண்ணன்மார்கள் நிறையபேர் அவைகளை நடத்திக்கொண்டிருந்தார்கள். அப்பொழுதெல்லாம் பெல்பாட்டமும் பெரிய காலர் வைத்த சட்டைகளையும் போடும் அண்ணன்மார்கள் மீது எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரு மிகப் பெரிய ஈர்ப்பு இருக்கும். அதுபோலத்தான் எனக்கும் இருந்தது. அந்த வாசகர் வட்டங்கள் அறிமுகப்படுத்திய எல்லா நூல்களையும் வாசிக்கும் பழக்கம் எனக்கு இருந்தது. வீட்டில் ஆனந்த விகடன், தினமணி, குமுதம் போன்ற பத்திரிகைகளும் பாலமித்ரா, ரத்னபாலா, கோகுலம் போன்ற குழந்தைகள் பத்திரிகைகளும் எண்கள், என் கணிதம் போன்ற ஜோதிடப் புத்தகங்கள் என எல்லா வகையான புத்தகங்களும் வரும்.

இதில் மிக முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்றால் காந்திஜியின் நூற்றாண்டு நினைவுப் பூங்கா என்ற பெயரில் நகராட்சியில் இருந்து ஒரு பெரிய பூங்கா ஒன்றினை எங்கள் வீட்டிற்கு எதிராக அமைத்திருந்தார்கள். அங்கு ஒரு படிப்பகம் இருந்தது. கிட்டத்தட்ட 25 வகையான செய்தித்தாள்கள் அங்கு வரும். விடுதலை, முஸ்லிம் முரசு, முரசொலி என எல்லாவற்றையும் வாசிக்கக்கூடிய ஒரு பழக்கம் இருந்தது.

எங்கள் ஊரில் சில தொழிற்சாலைகள் இருந்தன. மிட்டாய் மில், காப்பர் தொழிற்சாலை என ஆங்கிலேயர்கள் காலத்தில் அந்தத் தொழிற்சாலைகளுக்கு வைக்கப்பட்ட மின்சார சங்கு காலை 5 மணிக்கு ஒலிக்கும். நடந்துபோகும் தூரத்தில்தான் பள்ளிக்கூடம் இருந்தது. காலை 9 மணிக்கு மேல்தான் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும். எனவே தினமும் காலை 5 மணிக்கு எழுவதால், 4 மணி நேரம், அதாவது காலை 9 மணி வரை வாசிக்கும் பழக்கம் எங்களுக்கு இருந்தது. மாலை பள்ளியில் இருந்து வீடு திரும்பிய பின் படிப்பு என்பதைத் தாண்டி வாசிப்பு என்பதுதான் முக்கியமாக இருந்தது. அதுபோல இரவு 9 மணிக்கு ஒரு சங்கு ஊதுவார்கள். அதற்குப் பிறகுதான் படுக்கச் செல்வோம். இப்படித்தான் வாசிப்புப் பழக்கத்திற்குள் வந்தேன்.

இந்த வாசிப்புப் பயணத்தில் எனக்கொரு மிகப்பெரிய மாற்றத்தைக் கொடுத்தது என எடுத்துக்கொண்டால் சுந்தர ராமசாமி அவர்களின் புத்தகங்கள்தான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், (ஜெயமோகனின் 'விஷ்ணுபுரம்' நாவலை நான் வாசித்திருந்தாலும்) 'ஜே ஜே சில குறிப்புகள்'தான் எனக்குள் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அதே சமயம் நான் தொடர்ந்து வாசித்த முக்கியமான எழுத்து, ஜெயகாந்தன்.

அம்மாவும் பாட்டியும் லட்சுமியைத் தொடர்ந்து வாசிப்பார்கள், நானும் அவ்வப்போது வாசிப்பேன். சாவியின் வாஷிங்டனில் திருமணம், தேவனுடைய துப்பறியும் சாம்பு, இதுபோல பல படைப்புகளை வாசித்த பழக்கம் எனக்கு உண்டு. குறிப்பாக தமிழைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது 'ஜே ஜே சில குறிப்புகள்'தான். அச்சமயம் நான் பள்ளியிலிருந்து கல்லூரிக்குப் போகக்கூடிய ஒரு நேரம். அப்போதுதான் தமிழ் இந்தியா டுடே வந்தது. இந்தியா டுடே அறிமுகப்படுத்திய கடைசி பக்கச் சிறுகதைகள், அதில் அறிமுகமான ஓவியர்கள் என அவை மறக்கமுடியாதவை. இந்தியா டுடேவிற்கு முன்னதாகவே கோமல் சுவாமிநாதன் அவர்களின் 'சுபமங்களா' மிக முக்கியமான பங்களித்தது.

சா. கந்தசாமி, முத்துசாமி, வெங்கட்சாமிநாதன், கலைஞர், தி. ஜானகிராமன் எல்லாரும் எங்கள் ஊரைச் சுற்றியிருந்த எழுத்தாளர்கள், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஜானகிராமனின் மோகமுள், அம்மா வந்தாள், மரப்பசு, செம்பருத்தி, சிறுகதைகளில் பாயாசம் என அனைத்தும் நூலகத்தில் வாசித்தவைகள்தான்.

● மு.முருகேஷ்

கவிதைக்குள் கலந்திருக்கும் கதை



சிறுவயதில் என் மனதில் இப்படியொரு எண்ணம் ஆழமாகப் பதிந்துகிடந்தது. 'தமிழாசிரியர்கள் என்றாலே அவர்களின் குரல் கரகரப்பாகவும் கம்பீரமாகவும் இருக்கும்'. எனது பள்ளிக்காலத்தில் தமிழ் வகுப்பெடுத்த தமிழாசிரியர்களின் குரல் எல்லாமே கரகரப்பும் கம்பீரமும் நிறைந்தது.

தமிழய்யா அன்பு.கணபதி, மு.க.முத்தையா, வள்ளிநாயகம், வெங்கடசுப்பிரமணியன் என்று அனைவரின் குரலிலும் ஒலித்த தமிழ் மொழியின் கம்பீரம், மொழிப் பாடத்தின்மீது என்னைக் காதல் கொள்ளச் செய்தது.

மாவட்டத் தமிழாசிரியர் கழகம் நடத்திய அனைத்துப் பள்ளிகளுக்கான தமிழ்த் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று, அதற்கான பாராட்டுச் சான்றிதழையும் பெற்றிருக்கின்றேன்.

பேரறிஞர் அண்ணா இறந்த ஆண்டின் இறுதியில் பிறந்தவன் நான். பள்ளித் தலைமையாசிரியராக இருந்த எனது மாமா மெய்யப்பன், அண்ணாவின் தீவிர பக்தர். வீட்டிலிருந்த டேப்ரெக்கார்டரில் அண்ணாவின் உரைகளை ஒலிநாடாக்களில் கேட்பது அவரது வழக்கம். சில நேரங்களில் என்னையும் அழைத்து, கேட்கச் சொல்வார்.

தொண்டையிலிருந்து பிரவாகமெடுத்து வரும் வார்த்தைகள், சற்றே மேலேறி, மூக்கில் போட்டுள்ள பொடியை உரசிவிட்டு, பின்னர் வாய் வழியே வார்த்தைகளாக வருவது போலக் கரகரப்பாகவும், கேட்பதற்கு மிகுந்த ஈர்ப்பாகவும் அண்ணாவின் குரல் இருந்தது. புதுக்கோட்டை தி.மு.க நகரச் செயலாளராக இருந்த மாமா செழியனின் குரல், எழுச்சிமிக்க உரையாளர் அய்யா இரா.பாவாணன் குரல், அருகிருந்து ரசித்த கவிஞர் கந்தர்வனின் குரல்,

திலகர் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்ட மேடையில் முதன்முதலாக நேரில் கேட்ட கலைஞர் மு.கருணாநிதியின் குரல்... என நான் வியந்துகேட்ட பல தமிழ்க் குரல்களிலும் கம்பீரமும் கரகரப்பும் கலந்தேயிருந்தன. பிறகுதான் நானொரு முடிவுக்கு வந்தேன். தமிழுக்கும் கம்பீரத்துக்கும் கரகரப்புக்கும் நெருக்கமான தொடர்பு உண்டென்று உணர்ந்து கொண்டேன்.

திராவிட இயக்கம், பகுத்தறிவுச் சிந்தனை, மொழிப் போராட்டம் என்பது குறித்தெல்லாம் தெளிவான புரிதலில்லாத பள்ளிக்கூட நாட்களிலேயே கலைஞரின் தமிழ் மேல் எனக்கு அப்படியொரு ஈர்ப்பு உண்டாகிவிட்டது. கலைஞர் பொதுக்கூட்டம் புதுக்கோட்டையில் எங்கு நடைபெற்றாலும் பல மைல் தூரம் நடந்தே சென்று கேட்டு வருவேன். கூடவே நண்பர்களையும் அழைத்துச் செல்வேன். பல வெளியூர்களுக்கும் சென்று, கலைஞர் உரையைக் கேட்டிருக்கிறேன். எம் தமிழ்; உயிர்த் தமிழ். தாய்மொழியாம் தமிழைக் கலைஞரின் குரலில் கேட்கையிலும், அவரது படைப்புகளை வாசிக்கையிலும் எனக்குள் எழும் பெருமிதத்தை எப்படிச் சொல்வதென இன்னமும் புரியாமல் தவிக்கின்றேன்.

முத்துவேல் கருணாநிதி எனும் கலைஞர் மு.க., தமிழகத்தை அரை நூற்றாண்டுக்காலம் தன் ஆளுமைக்குள் வைத்திருந்த கம்பீரத்தின் மறுபெயர். இயற்பெயர் தட்சிணாமூர்த்தி என்பதைத் தமிழகம் மறந்தேவிட்டது. 1924ஆம் ஆண்டில் ஜூன் 3ஆம் தேதி நாகப்பட்டிணம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை எனும் ஊரில் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர் கருணாநிதி.

பள்ளியில் படிக்கிற காலத்திலேயே இலக்கியத்தின் மீதான ஆர்வம் உண்டானது. கவிதைகள் எழுதுவதும், நாடகங்களைப் பார்ப்பதும் பிடித்தமான செயல்பாடுகளாயின. அன்றைய காலத்தில் நீதிக்கட்சியின் தூணாக விளங்கிய ‘அஞ்சா நெஞ்சன்’ அழகிரியின் உரைகளால் கவரப்பட்ட கருணாநிதி, தனது 14ஆவது வயதிலேயே சமூக இயக்கங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

மாணவப் பருவத்திலேயே தன் நண்பர்களோடு சேர்ந்து ‘மாணவ நேசன்’ எனும் கையெழுத்திலான துண்டுப் பிரசுரங்களைக் கொடுத்தார். பின்னர், ‘இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்’ எனும் அமைப்பினை உருவாக்கினார். இளைஞர்களின் பேச்சாற்றல், எழுத்தாற்றலை

வளர்க்கும் பணியில் இம்மன்றம் செயல்பட்டது. பிறகு, இம்மன்றம் மாநில அளவில் 'தமிழ்நாடு மாணவர் மன்ற'மாக மாறியது. இதுவே திராவிடர் கழகத்தின் முதல் மாணவர் பிரிவாக மாறியது.

தமிழின் மீது தீராத பற்று கொண்டதோடு, இந்தி மொழித் திணிப்பின் மீதும் கோபம் கொண்டவர் கருணாநிதி. 'அணிவகுப்புப் பாடல்' எனும் தலைப்பில் கவிதையொன்றை எழுதினார். இதனை எழுதியபோது கருணாநிதிக்கு வயது 14.

'வாருங்கள்... எல்லோரும் இந்திப்

போருக்குச் சென்றிடுவோம். வந்திருக்கும்

இந்திப் பேயை விரட்டித் திரும்பிடுவோம்.

ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ

தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே!

வீரத் தமிழ் கொஞ்சும் நாட்டிலே – நாங்கள்

சார மில்லாச் சொற்கள் ஏற்க மாட்டோம் ஏட்டிலே!' (1938)

கல்லக்குடியில் நடைபெற்ற இரயில் மறியல் போராட்டமும், இந்தி எதிர்ப்புப் போராட்டமும் கருணாநிதியை அரசியலில் முன்னணி படைவீரராகக் களத்தில் நிறுத்தின.

அரசியல் களப் பணிகளுக்கு இடையிலும் தனது இலக்கியப் பணிகளைத் தொய்வின்றிச் செய்துவந்தார் கருணாநிதி. 1944இல் தனது 20ஆவது வயதில் ஜூபிடர் பிக்சர்ஸின் திரைக்கதை எழுத்தாளராகப் பணியாற்றினார். 1947இல் 'ராஜகுமாரி' எனும் திரைப்படத்திற்குக் கதை, வசனம் எழுதினார். படம் வெற்றியடைந்தது. கருணாநிதியின் திரைக்கதைக்கும் வசனத்திற்கும் நல்ல வரவேற்பு கிட்டியதோடு, தனி ரசிகர் வட்டமும் உருவானது. எந்தப் பணிச்சூழலிலும் எழுதுவதையும் வாசிப்பதையும் தனது இறுதிக்காலம் வரை விடாமல் செயல்படுத்தியவர் கருணாநிதி. 'தூக்குமேடை' நாடகத்தின்போது மு.கருணாநிதிக்கு, 'கலைஞர்' எனும் பட்டத்தை அளித்தார் 'நடிகவேள்' எம்.ஆர்.ராதா. அந்தப் பட்டமே தமிழ்ச் சமுதாயம் உச்சரிக்கும் மந்திரச் சொல்லாகிப்போனது.

தமிழகத்தின் முதல்வராக 5 முறை இருந்தபோதிலும், 70க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்குக் கதை, திரைக்கதை, வசனமெழுதியிருக்கிறார். 14 நாவல்கள், 24 நாடகங்கள், 29 கட்டுரை நூல்கள், 39 சிறுகதைகள், 210 கவிதைகளையும் படைத்தளித்திருக்கிறார். இதுமட்டுமா... 'நண்பனுக்கு', 'உடன்பிறப்பே' ஆகிய தலைப்புகளில் எழுதிய 7000க்கும் மேற்பட்ட கடிதங்கள் 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. கலைஞரின் படைப்புகள் 170க்கும் மேற்பட்ட நூல்களாகியுள்ளன.

திராவிடர் கழகத்திலிருந்து பேரறிஞர் அண்ணா பிரிந்து, 1949இல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது அதன் முன்னணித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார் கலைஞர். 1957இல் மத்திய அரசின் இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான 'இந்தி மொழி எதிர்ப்பு மாநாட்டை' தி.மு.க நடத்தியது. பெருந்திரளான மக்கள் பங்கேற்ற இப்போராட்டத்திற்குக் கலைஞர் தலைமையேற்றார்.

"இந்த மொழிப்போராட்டம், எங்கள் பண்பாட்டைப் பாதுகாக்க. இது எமது மக்களின்

தன்மானம் மற்றும் எங்களது கட்சியின் அரசியல் கொள்கை. மேலும், இந்தி என்பது





உணவு விடுதியிலிருந்து எடுத்துச் செல்லும் உணவு (எடுப்புச் சாப்பாடு), ஆங்கிலம் என்பது ஒருவர் சொல்ல அதன்படி சமைக்கப்பட்ட உணவு, தமிழ் என்பது குடும்பத் தேவையறிந்து, விருப்பமறிந்து, ஊட்டமளிக்கும் தாயிடமிருந்து பெறப்பட்ட உணவு" என்று உரையாற்றினார்.

1957இல் தி.மு.க தேர்தல் களத்தைச் சந்தித்தது. குளித்தலையில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட கலைஞர், வெற்றி வாகை சூடினார். இந்த முதல் வெற்றி தொடங்கி, தேர்தல் வரலாற்றில் தான் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிகளை மட்டுமே கண்டவர் எனும் தனிப்பெருமை கலைஞருக்கு உண்டு.

1960ஆம் ஆண்டில் தி.மு.க-வின் பொருளாளராகப் பொறுப்பேற்றார். 1967இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அண்ணா தலைமையினாலான தி.மு.க. மகத்தான வெற்றி பெற்றது. தமிழகத்தின் முதல்வராக அண்ணா பொறுப்பேற்றார். உடல்நலக் குறைவினால் அண்ணா காலமானதைத் தொடர்ந்து, 1969இல் தி.மு.க.வின் தலைவராகவும், தமிழகத்தின் முதல்வராகவும் தலைமைப் பொறுப்பினை ஏற்றார் கலைஞர். 1969இல் முதல்முறையாக முதல்வரானார். 1971ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்தார். பின்னர், இரண்டாவது முறையாக 1971 முதல் 1976 வரையும், மூன்றாவது முறையாக 1989 முதல் 1991 வரையும், நான்காவது முறையாக 1996 முதல் 2001 வரையும், ஐந்தாவது முறையாக 2006 முதல் 2011 வரையும் தமிழகத்தின் முதல்வராக இருந்து எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களைத் தீட்டினார்.

கலைஞர் தனது வரலாற்றை 'நெஞ்சுக்கு நீதி' எனும் தலைப்பில் தினமணி கதிர், முரசொலி நாளேட்டிலும், பின்னர் 'குங்குமம்' வார இதழிலும் தொடராக எழுதினார். இவை 6 தொகுதிகளாக வெளியாகியுள்ளன. தன் படைப்புகளுக்காகக் கலைஞர் பெற்ற விருதுகளும் பரிசுகளும் எண்ணிலடங்காதவை.

அரைநூற்றாண்டிற்கும் மேலாகத் தமிழ் மக்களின் மகத்தான தலைவராக, தமிழ் மொழியின் தேர்ந்த படைப்பாளராக விளங்கியவர் கலைஞர். தமிழ்நாட்டின் நிரந்தரத் தலைப்புச் செய்தியாகக் கலைஞரே என்றுமிருந்தார். முதல்வராக ஆட்சியில் இருந்தாலும் எதிரணியில் தொடர்ந்தாலும் கலைஞரின் மக்கள் பணிகள் தொடர்ந்துகொண்டே இருந்தன.

சிறுகதை, நாவல், நாடகங்கள், கவிதைகள், திரைக்கதை, வசனங்கள், பாடல்கள், கார்ட்டூன் என அனைத்து வடிவங்களிலும் தனது ஆளுமையை நிலைநிறுத்தியவர் கலைஞர். 'ஆளும் திறமை இடது மூளை, காவியமும் கற்பனையும் வலது மூளை. பரவலாக மனிதனுக்கு இரண்டில் ஒன்றுதான் சிறப்பாக வேலை செய்யும். இவை இரண்டுமே சிறப்பாகச் செயல்படுவது கலைஞருக்குத்தான்' என்றார் பிரபல நரம்பியல் நிபுணர் இராமமூர்த்தி.

கலைஞர் எழுதிய கவிதைகள் அனைத்தும் 2004இல் ஒரே நூலாகத் தொகுக்கப்பட்டு, சீதைப் பதிப்பகத்தின் வெளியீட்டில் 'கவிதை மழை'யாகத் தமிழ் நிலத்தில் பாய்ந்தோடின. 1108 பக்கங்கள் கொண்ட பெருந்தொகுப்பில் 1938இல் கலைஞர் எழுதிய முதல் கவிதைத் தொடங்கி,

17.04.2004 வரை எழுதிய 210 கவிதைகளும் கால வரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளன. பொதுவாகவே, கலைஞரின் பேச்சில் கவிதை நயமிருக்கும். மெல்லிய நகைச்சுவை இழைந்தோடும். கலைஞரது எழுத்திலும் இவற்றைக் காண முடியும். அத்தோடு கலைஞரின் எழுத்தானாலும், பேச்சானாலும் அதற்குள்ளொரு கதையிருக்கும். புகழ்பெற்ற கதாசிரியராகவும், திரைக்கதையாசிரியராகவும் விளங்கிய கலைஞரின் எழுத்தில் கதையிருப்பதில் என்ன வியப்பு..!

'கவிதை மழை'யில் ஏராளமான கதைக் கவிதைகளும் உள்ளன. பல கதைக் கவிதைகள் வாசிப்பில் ஏதோவொரு நிகழ்வை நினைவூட்டிப்போவதாக உள்ளன. 'பழமொழி படும் பாடு' *(01.01.2004)* என்றொரு கவிதை.

வண்டி வண்டியாகக் கல் கொண்டுவந்து வீடு கட்டுகிறான் ஒருவன். ஏனென்று கேட்பவர்களுக்கு அவன் சொல்லும் பதில் இதுதான்:

உடம்பு சரியில்லையென்று மருத்துவரிடம் செல்ல, ஓய்வெடுக்கச் சொல்கிறார் மருத்துவர். வேலையின்றி இருக்க முடியாதே என்கிறான். உடல் நலம் காக்கவே சொல்கிறேன் என்ற மருத்துவர், 'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்' என்கிறார். உடனே, சித்திரம் வரைய சுவர் வேண்டுமல்லவா, அதனால் வீடு கட்டத் தொடங்குகிறான். எப்படியிருக்கு கதை..?

'மண்டூகம் உன் போல் எவருண்டு தம்பி?

மாற்றி விட்டாய் மருத்துவர் சொன்ன
அறிவுரையை!'

'ஊரார் கைகொட்டிச் சிரித்தார்கள் அந்த

ஒருவன் மட்டும் ஒன்றும் புரியாமல்
விழித்துக் கொண்டிருந்தான்'

- என்று கவிதைக்குள் கதை வைத்து முடிக்கிறார் கலைஞர். அதேபோல், 'கனவில் வந்த கணையாழி' *(03.09.2003)* என்றொரு கதைக் கவிதை.

இந்தக் கவிதையில், உடல் இளைத்த பெண்ணொருத்தி, உடல் பெருக்கக் கடவுளிடம் வேண்டுகிறாள். கவலையுடன் இருக்கும் அவளைச் சந்திக்கும் மந்திரவாதி, ஒரு மாய மோதிரத்தைத் தருகிறான். 'மாய மோதிரத்தை ஒரு நாளைக்கு ஒருமுறை மட்டுமே அணிய வேண்டும்' என்று மந்திரவாதி சொல்லிச் செல்கிறான். அவளோ மோதிரத்தைக் கழற்றாமலேயே அணிந்துகொள்கிறாள். உடல் பருத்துக்கொண்டே செல்கிறது. மாய மோதிரத்தை மந்திரவாதி திரும்பக் கேட்க, 'நீ யார்?' என்கிறாள் அந்தப் பெண்.

'மோதிரத்தின் முகத்தில் கரி பூசிவிட்டாய்;

கழற்றிக்கொடு உடனடியாக;
இல்லையேல்

கழன்றுவிடும் அது தானாக! உன் தலை

கழன்றுவிடும் கிரீடம் கீழே விழுவதாலே!'

- என்று மந்திரவாதி சாபம் விட, திடீர் திருப்பத்தோடு கவிதையைக் கலைஞர் முடித்திருப்பார்.

'எழுந்துவிட்டாள் ஏந்திழையாள்

எல்லாமே கனவென்று புரிந்துகொண்டு!'

வெறும் கனவுதான் கதைக்கவிதையாகியுள்ளது என்றாலும் பேராசை கொள்ளும் மனிதருக்கு வைத்துள்ள சூடாகவே இந்தக் க(வி)தை அமைந்துள்ளது.

ஓய்வறியாச் சூரியனாய்த் தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் பணியாற்றிய கலைஞர், 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 அன்று இந்த மண்ணுலக வாழ்விலிருந்து விடைபெற்றார். அவர் விரும்பியதைப் போலவே, 'ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வுகொண்டிருக்கிறான்' எனும் வரிகள் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் எப்போதும் ஒளிர்ந்துகொண்டேயிருக்கிறது.

- இன்னும் சொல்வேன் ■

புதிரான பீனிக்ஸ் பறவை

சுரணையிழந்து
ஓடிக்கொண்டிருக்கின்றன
நாள்கள்

முற்றிப் பழுப்பெறிந்து
இலையுதிர்த்த காலத்தில்
தவிக்கிறாய் சிக்குண்டு

வாழ்க்கை இலகல்ல
எப்பொழுதும்

நேற்றைய சொல்லாடலிலும்
நாளைய எதிர்பார்ப்பிலும்
வெறுமையாய்க் கரைகிறது
இன்று

ஒவ்வொரு நொடியும்
கிடக்கையின் மைல்கல்லாய்
நீள்கிறது

உந்தன் நினைவுகளை
கொல்லாமல் கொன்று
புதைக்கிறேன்
வித்தாய் என்னுள்

உன்னிடம் திருப்பித் தர
என்னிடம் ஏதுமில்லை
உன்னால்
பெரும் பிரவாகமாய்ப்
பெருக்கெடுக்கின்ற
கவிதைகளைவிட

நான் நானாகயிருக்க
நீ நீயாக மீண்டெழுந்திரு
பீனிக்ஸ் பறவையாய்

ஏனெனில்
நாளையுங் கூட
நானாகயிருக்கவே அவாவுகிறது
உள்ளம்.

– ப்ரியா பாஸ்கரன்

சுயம் வெறுத்த நாளின்
இறுதியில்
உடைந்து சிதறுகின்றன
மனத்துண்டுகள்!

இறப்பு மட்டும்
வாழும் பூமியைத்
தேடி அலையும்
பிம்பத்தின்
முகத்தில்
மௌன அழுகையின்
ரேகைகள்!

எந்தச் சமாதானங்களும்
ஆறுதல்களுமின்றி
காற்றுவெளியில்
உயிர் உருகும் சத்தம்
எனக்கு மட்டுமே கேட்கிறது!

அது நான் இல்லை!
என் ஆன்மா என்பது
யாருக்குத் தெரியும்!

– **லக்ஷ்மி**

••

அவனுக்கென்று ஒரு பெயர் இருக்கிறது
அவனை நான் பெயர் சொல்லி அழைத்ததில்லை
விசிலடித்தோ கைத்தட்டியோ
அழைத்ததும் இல்லை
கண்களால் நூறு முறையாவது
அழைத்திருக்கிறேன்...

என் பெயரைச் சொல்லி
அவன் அழைக்கையில்
நான் புன்னகையோடு திரும்புவேன்
சட்டெனப் புன்னகைத்துப் பூத்துவிடுவான்

அவன் புன்னகையின் சப்தம்
எனக்குக் கேட்கிறது
அவனுக்குள்ளும் கேட்கிறது

பிரபஞ்சக் காதுகளின் வழியாக ஒரு இசை
எங்கள் இருவரையும் கேட்கச் செய்கிறது

நீங்கள் எந்த ரகசியத்தையும்
அவனை வைத்துக்கொண்டே பேசலாம்

ஏனென்றால் உலகில் ரகசியம் இல்லாத ஒருவன்
அவனே

– **ராம் பெரியசாமி**

••

அவ்வப்போது எழும்
நினைவுகளின் பெருங்கூச்சலுக்குள்
சமாதானம் பேசிக்கொண்டிருக்கிறது
கவிதை.
கவிதை எழுதுவதில்கூட
கடன்காரனாய்த்தான் நான்
பாதி எழுதி முடிக்கப்படாத பக்கங்கள்
பார்த்துச் சிரிக்கிறது
என்னை.
என்னை
எனக்குத் தெரியும் என்கிறேன்
நீங்கள் சிரிக்கிறீர்கள்
உங்களுக்குத் தெரிவிக்க
ஒவ்வொன்றாய்ச் செய்கிறேன்
என்னைத் தொலைத்தது தெரியாமல்.
தெரியாமல் போவதில்லை
சில சாதனையும் சங்கடமும்
சாதனை முகம்காட்டிக் கர்வமுறும்போது
சங்கடம் சத்தமின்றி...
செத்துப்போகும்.
செத்துப்போகும்
வேளையில்தான்
சிறப்புறுகிறது நிறைய...
மனிதங்கள்.

– கா வெங்கடேஸ்வரன்

**

கம்மல் வாங்குவதற்கு
கடையையே
புரட்டிப் போடுவேன்..

புடவை தேர்வு செய்ய
நான்கைந்து கடைகளாவது
ஏறி இறங்குவது வழக்கம்..

பொருத்தமான
நகைகளுக்கு அலைவது
பிடித்தமான
பொழுதுபோக்கு..

படிப்பும் என் முடிவுப்படி..

சம்பந்தம் மட்டும்
பேசி முடிவு செய்து
புகைப்படம் காட்டி
மாப்பிள்ளை என்றார்கள்..

இப்போதும்..
திருமணத் துணிகள்
தேர்வு செய்ய
எனக்கு
முழுச்சுதந்திரம்
உண்டென்கிறார் அப்பா..

– ஆனந்த குமார்

**

● கவிஜி

மானுட விளையாட்டு

*`Escape from Alcatraz` 1979*இல் *Don Siegel* இயக்கத்தில் ஆங்கிலத்தில் வெளிவந்த திரைப்படம். *Clint Eastwood* எனும் சினிமாக்காரன் வழக்கம் போல ஏற்படுத்திய ஒரு வழக்கத்தின் சாகசம்.

Alcatraz... உலகத்தின் மிகச் சாதுர்யமான சிறை. அதற்கு ஒரே வழிதான். உள்ளே தள்ளவும் வெளியே செல்லவும். யாரும் தப்பிக்க முடியாத.. தப்பித்தவறி உள்ளே சென்றுவிட்டால் அது துக்கத்தின் கம்பிகள் என.. அது ஒரு தீவின் தனித்த மானுடக் கிடங்கு.

இந்தப் படம் வெளிவந்த ஆண்டு *1979.* உலகையே அந்தச் சிறைச்சாலைக்குள் எட்டிப் பார்க்கவைத்த படம். நிஜ சம்பவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட இந்தப் படத்தில்... அடித்தளம் விடுதலை என்பதுதான். இந்த மானுடம் எப்போதும் தெரிந்தோ தெரியாமலோ எதை நோக்கி நடைபோடுகிறது என்றால்.. எதன் அடிப்படையில் இயங்குகிறது என்றால்.. அது விடுதலை எனும் ஒற்றைச் சொல் மந்திரத்தில்தான். சுதந்திரத்துக்கு எதிராக நடப்பவையில் இருந்துதான் இங்கே நடக்கும் அனைத்து எதிர்வினைகளும் அரங்கேறுகின்றன நமது அன்றாடங்களாக.

Alcatraz என்பது சான்பிரான்சிஸ்கோ பக்கத்தில் இருக்கும் தீவு. உலகிலேயே பாதுகாப்பான சிறைச்சாலை. யாருக்குப் பாதுகாப்பு என்பது சக முரண். சமூக முரண். இந்த உலகின் இன்னொரு கோணத்தில் இருப்போரெல்லாம் அங்கே கைதிகளாக இருக்கிறார்கள். *2* கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கும் இந்தத் தீவில் கம்பிகளால் ஆன குட்டிக் குட்டி அறைகளில் ஒவ்வொரு தனி மனிதனும் தன் வாழ்வில் நிகழ்த்திய எது ஒன்றை முன்னிறுத்தியும் அது சட்டத்துக்குப் புறம்பாக இருக்கையில் அங்கே அடைக்கப்படுகிறார்கள். பத்துக்குப் பத்து அறையை விட குறைவான அறை. ஒரு கட்டில். நிற்க அமர ஒரு நாற்காலி. கழிவறை பிளேட். கம்பிகளின் வழியே அவர்களின் தூரம்... மீறிப் போனால் ஆறடிக்குள்தான். கிட்ட தன் முகம் மட்டும்தான்.

கரையில் இருந்து தீவுக்கு வருவதற்குப் போட் போன்ற சாகசத்தில் வந்தால் *15* நிமிடங்கள் ஆகும். நீந்திக் கடப்பதோ... செத்து மிதப்பதற்குச் சமம். அது ஒரு நீரால் ஆன சூழ்ச்சி. சூழப்பட்டதின் நோக்கத்தில் மரண பயமே ஆயுதம்.

தப்பிக்க முயற்சி செய்தோரெல்லாம் செத்தொழிந்தார்களே தவிர, வாழ வழி இல்லாத கூடாரம் அது. ஒரு வேளை தப்பித்தால் கூட உப்புத்தன்மை அதிகம் இருக்கும் கடலில் நீந்திக் கடப்பது என்பது சாத்தியம் இல்லாதது. உறைய வைக்கும் கடல் நீரின் அடர்த்தி. அதையும் மீறினால் கடலில் இருக்கும் திமிங்கலம் சுறாக்கள் என்று சாவின் குவிதல் சகட்டுமேனிக்குச் சங்கமித்துக் கிடக்கும் அந்த இரண்டு கிலோமீட்டர் கடல் வழி... இரு ஜென்மத்துச் சாபம். முன்பு தப்பிக்க முயற்சித்தோரெல்லாம் கடல் உண்டு மாண்ட கதை அறியப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழலில்தான் நமது ஹீரோ... அங்கே அடைபடுகிறான். அவன் விழியில் வாழ்வெனும் தீர்க்கம் தொடர்ந்து மின்னுவதை ஒரு மானுட ரகசியமாக நாம் உணர்கிறோம். அவன் தொடர்ந்து சிந்திக்கிறான். தன் வாழ்வில் இப்படி ஒரு முடிவை ஒப்புக்கொள்ள இயலாமல் தனக்குள் ஆயிரம் வழிகளில் யோசிக்கிறான்.

வேறு வழியே இல்லாதபோது மனிதன் ஆழமாய்ச் சிந்திக்கிறான். அதன் போக்கில்தான் அவன் அடுத்து ஒன்றைக் கண்டுபிடிக்கிறான். அப்படித்தான் அடுத்தடுத்த கட்டம் அவன் நகர்கிறான். அவனும்கூட அதன் போக்கில்தான்.

ஓர் இரவில் அவன் அறையில் இருக்கும் ஒரு சிறு சந்தின் வழியாக ஒரு கரப்பான் பூச்சி உள்ளே வருகிறது. காலம்காலமாய்ப் போர் என்ற பெயரிலும் பொய் என்ற பெயரிலும் மனிதன் கொத்துகொத்தாய்ச் செத்து வீழ்ந்தபோதும் தன் பரிணாமத்தைத் தன்னளவில் தொடர்ந்து நிகழ்த்திக்கொண்டே இருக்கும்... மனிதன் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய கரப்பான் அவனுள் எதையோ தோண்டுகிறது.

இத்தனை பெரிய கட்டமைப்பு கொண்ட... பாதுகாப்பு கொண்ட கட்டடத்தின் உள்ளே ஒரு கரப்பான் வருவதற்கு வழி இருக்கிறது என்றால்.. ஏன் மனிதன் வெளியே செல்வதற்கு வழி இருக்கக்கூடாது என்று யோசிக்கிறான்.

சின்னச் சின்ன கரண்டிகள், நக வெட்டிகூட அவனுக்கு ஆயுதங்களாக மாறுகின்றன. சக கைதிகளின் நட்பு, அது பற்றிய ரகசியப் பேச்சு என்று அது ஒரு நீண்ட நெடிய வழிமுறை.

மனிதனை மனிதன் ஒதுக்கும் மகா கூடம் அங்கே ஒரு கடல் நடுவே வீற்றிருக்கிறது. ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு நகர்வு. ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு புதிர். அவிழ்க்கஅவிழ்க்க தொடர்ப் போராட்டம். தன்னை வைத்துத் தன்னையே நிகழ்த்தித் தன்னையே காக்கும் காலப் போராட்டம். இது கத்தி மேல் நடப்பது அல்ல. கத்தி மேல் படுத்துக்கொண்டே நகர்வது. கீறல் இருக்கும். ஆனால் ரத்தம் கீழே சொட்டாமல் பிடித்துக்கொண்டே நகர வேண்டும். ஒவ்வொரு நகர்விலும் நாமும் மூச்சிழுத்து மூச்சிழுத்து... உடல் நடுங்க இதயம் ஒடுங்க... ஒரு கட்டத்தில் அவனுக்காக நாம் பிரார்த்தனையே செய்ய ஆரம்பித்துவிடுகிறோம். எதிர் முனை என்னவென்றே தெரியாத நிலையில் அவன் எடுக்கும் எல்லா முடிவுகளும் எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்பதைச் சுற்றித்தான். அது முழுக்க முழுக்கக் கண் கட்டிய நம்பிக்கையின் வழியே காலம் செதுக்கும் ஊமை ஓவியனின் குருட்டுப் பயணம்.

சிறு துளி கண்டிப்பாகப் பெரு வெள்ளம். அவன் சின்னச் சின்ன நகர்தலோடு மெல்ல மெல்ல எறும்புக் கால்களால் பயணிக்கிறான். துளித்துளியாய் ஓட்டை பெரிதாகிறது. அவன் மீது காவலாளிகளுக்குச் சந்தேகம் வராமல் இல்லை. அதுவுமில்லாமல் முன்பிருந்த சிறைகளில் இருந்து தப்பித்த மாதிரி இங்கிருந்து தப்பிக்க இயலாது கண்ணா என்று வார்டன் கிண்டலும் அடிக்கிறார். எல்லாவற்றுக்கும் பதில் தப்பிப்பதில்தான் இருக்கிறது என்று ஹீரோ அறிவார். ஒவ்வொரு முறையும் சக கைதிகள் ஹீரோவுக்கு அளிக்கும் சங்கேதக் குறியீடு மூலமும் சமிக்ஞையின் மூலமும் காக்கப்படுவது விதியின் கைகளிலும் வீணைச் சத்தம் போல.

பின்னணி இசையில் நாம் பரபரப்பின் மையத்தில் எந்த நேரமும் மாட்டிக்கொள்ளலாம் என்ற பரிதவிப்போடு பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

மிக நீண்ட திட்டமிடுதலின் வழியே அறைச் சுவரில் இருக்கும் இத்துனூண்டு வென்டிலேஷன் டன்னல்-ஐச் சாமர்த்தியமாக உடைத்துப் பிரித்தெடுத்து... ஆனால் அதே நேரம் அதே போல வென்டிலேஷன் டன்னல்-ஐ வரைந்து அந்த இடத்தை மறைத்து... ஹீரோ அண்ட் டீம் ஆடிய ஆட்டமெல்லாம் கொம்பில் பால் கறக்கும் வித்தை. சக கைதியான ஒருவன் ஓவியன் என்பது கூடுதலாக அவர்களுக்கு ஒத்துழைக்கிறது. சுவரைக் குடைந்து கிடைமட்ட ஆள் நுழையும் அளவுக்கான சந்தில் நுழைந்து நுழைந்து மிக தத்ரூபமாக வழி கிடைக்கப் பெற்றுவிடுகிறார்கள்.

தினமும் கைதிகளுக்கான இசைக் கச்சேரி நடக்கும் நேரத்தில்தான் இவர்களின் வேலை நடக்கும். அந்த இசைச் சத்தத்தில்

இவர்களின் வழி ஏற்படுத்தும் சத்தம் அடங்கிப்போகும் என்பது கணக்கு. தினமும் இரவு தூங்குவது போலத் தலையணையை அடுக்கி வைத்துவிட்டு ஒரு டம்மித் தலையை உருவாக்கித் தன் தலையைப் போலவே வைத்துவிட்டு... உள்ளே வழி செய்யும் வேலையைப் பார்ப்பது த்ரில் தில். அந்த டம்மித் தலையை எப்படிச் செய்கிறார்கள் என்பதெல்லாம் அறிவெனும் ஆயுதத்தின் ஆழம் காணும் அதிரி புதிரி ஆளுயர செஞ்சுரி.

இப்படியாக எல்லாம் கூடி வந்த ஓர் இரவில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பரபரவென மளமளவெனத் தப்பிக்கும்.. ஒருவர் கூட சொதப்பிவிடாமல் செய்யும் ஓர் ஆடும் கூத்தை நிகழ்த்த வேண்டும். துளி தப்பினால் தலை உருண்டுவிடும். உண்மையில் தப்பிக்க முயற்சிக்கும் நால்வர். அந்த இன்னொருவர் என்ன ஆனார் என்பது... அதுவா இதுவா என்று ஆயுசுக்கும் தடுமாறிக்கொண்டிருப்பவனின் வீழ்ச்சி.

சரி... இப்போது தப்பிக்க முயற்சிக்கும் மூவரில் மூவருமே ஹீரோ போல நடந்துகொள்ள வேண்டும். உடல் பலமும் உள்ள பலமும் கூடி மிருக வெறி ஏறி இருக்கையில்தான் இது சாத்தியம். சுவர் ஏறி வாட்ச் டவரில் இருக்கும் பெரும் ராட்சத சுழல் வெளிச்சத்துக்கு மாட்டாமல் டெர்ரசில் படுத்துக்கொண்டே நகர்ந்து, பெரும் கம்பிகளில் பல்லி போல ஏறி இறங்கி, எப்போதும் சத்தம் வந்துவிடாத சாமர்த்திய உடல் மொழியைத் தக்க வைத்துக்கொண்டே நடுங்கும் மூச்சை நிறுத்தி நிதானமாக அடக்கி ஆண்டு அங்கிருந்து குதித்து, ஒருவர் மீது ஒருவர் தொற்றி மேல் நோக்கிய கம்பிகளைப் பிடித்து அதன் சந்தில் மேல் நோக்கியே எக்கி மூச்சடக்கி நெளிந்து வளைந்து நிமிர்ந்து எழுகையில் சிறைச்சாலையின் உச்சியில் நிற்கிறார்கள். அதன் பிறகு, ஊர்ந்தபடியே பெரும் சுவர் ஒன்றில் தொற்றிக்கொண்டே கீழே இறங்கி சிறைச்சாலையின் மதிலைத் தாண்டி நிற்கையில் எதிரே திமிங்கலமாக இருள் போர்த்தி ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கும் கடல்.

கொண்டு வந்திருக்கும் மிதவை ஜாக்கெட்டுகளை அணிந்துகொண்டு அதன் பிறகுதான் நிஜப் போராட்டமே. இந்த நிகழ்வுக்குப் பிறகு இந்தச் சிறைச்சாலையை இழுத்து மூடிவிட்டார்கள் என்று தெரிய வருகிறது. அவர்கள் தப்பித்தார்களா இல்லையா என்பதும் ஏன் சிறைச்சாலையை மூடினார்கள் என்பதும் நீங்கள் தேட வேண்டிய இந்தப் படத்தின் இன்ன பிற நிழல் சாலைகள்.

பரிணாமத்தில் மானுடம் தன்னைப் பரிசோதித்துப் பரிசோதித்துப் பலி கொடுத்தே தன்னை அடுத்தடுத்து நகர்த்திஇருக்கிறது. எப்படியாவது கிடைத்த உயிரைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அடிப்படை விதி. அதன் போக்கில் இந்தச் சிறையில் இருந்து தப்பிக்க முயற்சிக்கும் ஹீரோ தன்னை ஓர் எலியாகப் பரிசோதனைக்கு உட்படுத்துகிறார் என்றே நாம் புரிந்துகொள்கிறோம். பொறியில் இருந்து தப்பித்துக்கொள்ளும் எலிகள்தான் சர்வைவல் ஆப் தி பிட்டஸ்ட் ஊர்ஜிதங்கள்.

எல்லாக் காலகட்டத்திலும் புத்திசாலிகள் கையில்தான் உலகம் இருக்கிறது. இயங்குதலின் வழியே புத்திசாலித்தனத்தை மிகுதியாக்கிக்கொண்டே இருப்பதில்தான் வலிமையுள்ள வல்லவனாகிறான்.

ஐம்பது வருடங்களுக்குப் பிறகு காவல்துறைக்கு ஒரு கடிதம் வருகிறது. அதுதான் மண்டையோட்டுக் கெத்துச் சிரிப்பு. அந்தக் கடிதத்தில் என்ன எழுதி இருக்கிறது, யார் எழுதி இருக்கிறார்கள் என்பதெல்லாம் ஒரு திரில்லர் நாவலின் கடைசிப் பக்கம். என்ன சட்டதிட்டம் இருந்தாலும் கோட்டைச் சுவர் கட்டுப்பாடு இருந்தாலும் மனித மூளையின் அடுத்த கட்ட லேயர் அவைகளை உடைத்தெறிந்துவிட்டு நகர்ந்துகொண்டே இருக்கும் என்று புரிகையில்... என்ன மாதிரி விளையாட்டை மானுடம் நடத்திக்கொண்டிருக்கிறது என்று மெல்ல புன்னகைக்கச் செய்கிறது.

படம் நெடுகிலும் தடதடக்கும் பூனைக் கால்களில் பதியப்பட்டுக்கொண்டே இருக்கிறது வாழ்தலின் தேவை. இரவுப் பூனைகள் எப்போதும் சுவாரசியம்தான். அதிலும் தாண்டிக் குதிக்க ஆளுயர மதில் இருக்கும்பட்சத்தில். ■

• ப.தனஞ்ஜெயன்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்,

கடைசி மனிதன்

மணல் தொடும் நுரைகளுக்குக் கொஞ்சம் உணர்வைத் தூண்டியது பின்வரும் அலை. அந்த அலையில் பூத்துப் பூத்து வெடித்தன நுரைகள். அப்படித்தான் ஏஞ்சலா தன் உதிரத்தைக் கடலில் கலப்பது போல உதிர்த்தாள். வயது பதினெட்டைத் தாண்டியது.

யாருமற்ற இந்த உலகில் பெருத்த எதிர்பார்ப்புகளோடு எந்தச் சடங்குகளையும் எந்தத் திட்டங்களையும் செய்ய வேண்டிய ஏமாற்றம் இல்லை அவளிடத்தில். இயற்கை தன் வேலையைச் செய்தது. உதிரம் சில நாட்களுக்குத் தொடர்ந்து, அதுவாகவே நிறுத்திக்கொண்டது.

வீட்டை விட்டு அடிக்கடி அவள் கடலுக்குச் சென்று விளையாடுவாள். கடல் அருகில் அவள் வீடு. யாருமற்ற பொழுதை எப்படிக் கழிப்பது. கடலலைதான் அவளுக்கு எல்லாமும். அலையோடு பேசுவாள். தன் காலடித் தடங்களை ரசிப்பாள். இந்த உலகத்தில் செயற்கைத்தனங்கள் அனைத்தும் அழிந்து போயிருந்தன, ஒரு சிலவற்றைத் தவிர.

தனக்கான உணவிற்காக மரங்களிலிருந்து கொஞ்சம் பழங்கள் மற்றும் மீன்களைச் சுட்டுச் சாப்பிடுவாள். கடைசித் தீப்பெட்டி முடியும் தறுவாயில் நிரந்தரமாகக் கட்டைகளை அடுக்கிக் கொஞ்சம் தீயை மூட்டிவைத்தாள். அவள் வீட்டில் எப்பொழுதும் கனந்து கொண்டேயிருந்தது தீ.

கடல் முழுவதும் ரசாயனக் கலவைகள், பூமியின் தோல்கள் முழுவதும் ரசாயன வாசனை. அதில் பல குணங்கள் அடங்கிக் கிடக்கின்றன. முதல் மனிதன் எப்படி வந்தானோ அப்படி கடைசி மனிதர்களைப் பெற்றுவிட்டது பூமி.

அன்று விளையாடிக் கொண்டிருக்கும்போது தனித்த கப்பல் ஒன்று தென்பட்டது. அவள் அந்தக் கப்பலையே பார்த்துக்கொண்டிருந்தாள். அலையில் குளித்து முடித்த ஈரத்தோடு அமர்ந்திருந்தாள். அவள் அமர்ந்திருந்த இடத்தில் அலை அப்படியே அவளை உள்ளிழுத்துச் சென்றது. அலை சில நேரம் அவளிடம் விளையாடும். ஏஞ்சலா சற்றுத் தடுமாறி எழுந்தாள். கரையில் அமர்ந்து அப்படியே அந்தக் கப்பலையே பார்த்து அமர்ந்திருந்தாள். அவளுக்கு ஆர்வம்.

எப்படியாவது அந்தக் கப்பலில் மனிதர்கள் இருந்தால் அதிலேறி அவர்களோடு சென்றுவிடலாம் என்று நினைத்தாள். அந்தக் கப்பல் தூரத்தில் அப்படியே நின்றிருந்தது. தன் பயணங்களை முடித்துக்கொண்டு போதும் என்கிற அளவிற்குக் களைத்துப் போயிருந்தது அதன் உருவத்தில் தெரிந்தது. அவ்வளவு பழையது அந்தக் கப்பல். அந்தக் கப்பலில் உள்ள நங்கூரம் அறுந்து போய்விட்டதால் அங்குமிங்கும் அலைமோதிக் கிடந்தது.

அது கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து ஏஞ்சலாவின் அருகில் கரையைத் தேடிவருவது தெரிந்தது. ஏஞ்சலாவிற்கு ஆர்வம் அதிகமானது.

கப்பல் கரையைத் தட்டி அமைதியாக மணலில் நின்றது. தனித்திருந்த ஏஞ்சலாவிற்கு அதற்கு மேல் ஆர்வம் தாங்க முடியவில்லை. தன் மொழியை மறந்திருந்தாள். அடிக்கடி அதைப் பேசியும் எழுதியும் கடல் மணலும் அலையும்தான் உயிர்ப்போடு வைத்திருந்தன அவள் மொழியை .

நீண்ட நாட்களுக்குப் பிறகு சப்தமாக முதல் குரலை எழுப்பினாள். “யாராவது இருக்கிறீர்களா” என்று. எந்தவித மறு பதிலும் வரவில்லை. அந்தக் கப்பலின் கைப்பிடியைப் பிடித்து ஏறினாள். அது உப்புக் காற்றும் உப்பு நீரும் அளவிற்கு அதிகமாகப் பட்டு சில ஆண்டுகள் பயணத்தில் துருப்பிடித்து உதிர்ந்திருந்தது. அதன் மேல் அவள் பிடித்து ஏறவும் அது உடைத்துக்கொண்டு அலையில் வீழ்ந்தாள். மீண்டும் ஈர உடல்.

மீண்டும் கப்பலில் தட்டுத் தடுமாறி ஏறினாள். உள்ளே சுற்றிப் பார்த்தாள். நிறைய எலும்புக்கூடுகள் கிடந்தன. அவர்கள் அருகில் கிடந்த உடைகளை எடுத்துத் தன் திறந்த மார்பில், கிழிந்து தொங்கிய பழைய உடையை மறைத்தாள்.

மேல் தளத்திற்குச் சென்று கத்தினாள். “யாராவது இருக்கிறீர்களா” அவள் கடைசி நம்பிக்கையும் போய்விட்டது. தார்ப்பாய் குவியல் மட்டும் மட்காமல் இருந்தது. அதனுள் ஒரு சலசலப்பு கேட்டது. பயத்தோடு சென்று பாலீத்தின் தார்ப்பாயை விலக்கினாள்.

அதனுள் நாற்பது வயதுள்ள ஒருவன் படுத்துக் கிடந்தான். அவன் பைத்தியக்காரத்தனமாக உளறினான். அவன் சொற்கள் முழுமையாக எதுவும் புரியவில்லை இவளுக்கு. அரை மயக்கமாக இருந்தான். அவனுக்குப் பயம் இவளைப் பார்த்ததும். ஏஞ்சலா அவனை மெல்லக் கப்பலை விட்டுத் தூக்கி எழுப்பி, மெல்லக் கரைக்கு அழைத்து வந்தாள்.



கரையில் சிறிது நேரம் இருவரும் அமர்ந்தார்கள். அவனுக்குப் பசி. கடல் பயணத்தில் கப்பலில் கிடைக்கும் மீன்களைக் கொஞ்சம் பச்சையாகச் சாப்பிட்டு உயிர் பிழைத்தான். இதற்கு முன் கப்பலில் இருந்த உணவுப்பொருட்களைப் பச்சையாகச் சாப்பிட்டுப் பீப்பாய்களிலிருந்த நீரைக் குடித்து உயிர் பிழைத்துக்கொண்டதையும் சில மாதங்களாக உணவு இல்லை என்பதையும் அவளிடம் சொன்னான்.

வழக்கமாகக் கரையொதுங்கும் சில மீன்களைப் பிடித்துக்கொண்டு அவள் அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அங்கு அடுப்பில் நெருப்புத் தணல் தகதகவென்று இருந்தது. கொஞ்சம் பழங்களையும் சுட்ட மீன்களையும் அவனுக்குப் பரிமாறித் தானும் சாப்பிட்டாள். அருகில் பழைய கிணற்றில் தண்ணீர் எடுத்தாள். இருவரும் அருந்தினார்கள்.

சற்று மயக்கம் தெளிந்த அவன், “என் தீவில் ஏற்பட்ட மிகப்பெரிய பேரழிவில் கடல் நீர், காற்று, மழை என ஒருசேர சூழ்ந்து எங்கள் தீவையே அழித்துவிட்டது. அதிலிருந்து தப்பிக்க அந்தத் தீவின் வழியாக வந்த கப்பலில் ஏறினேன். என்னுடைய தீவில் யாருமே பிழைத்திருக்க மாட்டார்கள் என நினைக்கிறேன். நான் கப்பலில் ஏறி எங்கள் தீவைத் திரும்பிப் பார்க்கும்பொழுது தீவு முழுவதும் நீரில் மூழ்கிப்போயிருந்தது. அதே நிலை கப்பலுக்கும் ஏற்பட்டிருக்கும் என நினைக்கிறேன்.

கப்பல் முழுவதும் சடலங்களோடு பெரும் சுழற்சியில் அடிபட்டு மாலுமிகள் இல்லாமல் கப்பல் வந்துகொண்டிருப்பதை உணர்ந்தேன். நான் தைரியத்தோடு கப்பலில் ஏறினேன். கப்பல் சென்ற திசையெல்லாம் சென்று சில கண்டங்கள் நீரில் மூழ்கிப்போயிருப்பதைப் பார்த்தேன். எரிபொருள் தீர்ந்துவிட்டது.

என்னால் எதுவுமே செய்யமுடியவில்லை. அப்படியே கப்பலை அதன் போக்கில் விட்டுவிட்டேன். எவ்வளவோ சடலங்களைக்

கடலில் தூக்கி வீசினேன். அப்படித் தூக்கி வீசும் சடலங்களைச் சாப்பிட மீன்கள் போட்டி போட்டுக்கொண்டு வரும்.

அதில் சில கப்பல் மேல் வீழ்ந்து கிடக்கும். அதைக் கத்தியால் கீறிச் சில நாட்களுக்குச் சாப்பிடுவேன். இப்படியே சென்ற நாட்களில் சில சடலங்களை எனக்குத் துணைக்கு வைத்துக்கொண்டேன்'' என்றான்.

சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு, ''இந்த இடத்திற்குக் கரையொதுங்கி உன்னைப் பார்ப்பேன் என்று துளியளவும் நம்பிக்கை எனக்கு இல்லாமல் இருந்தது'' என முடித்தான்.

''ஏறக்குறைய அதே நாள்தான் என்று நினைக்கிறேன். பெருத்த வெப்பக் காற்றோடு மணலும் நீரும் சூழ்ந்தது. எங்குப் பார்த்தாலும் பிணக்குவியல். அப்பொழுது எனக்கு வயது பதினைந்து. அன்று கூட இந்தக் கடலில்தான் விளையாடிக்கொண்டிருந்தேன். மணல் குவியல் மேல் தூக்கி வீசிவிட்டது என்னை இந்தக் கடல். குவியலிலிருந்து தடுமாறி நீண்ட நேரச் சரிவிற்குப் பிறகு என் பெற்றோர்களை எங்குத் தேடியும் காணவில்லை.''

காற்றும் மணலும் அனைவரையும் தூக்கி வீசி குவியல் குவியலாகக் கொன்று குவித்திருந்தது. கண்களுக்கு எட்டிய தூரத்தில் இருந்த மணல் மேடுகளைக் காண்பித்தாள். அவை பிரமிடு போன்ற அளவிற்குப் பிரமிப்பாகக் காட்சி தந்தன. ஆங்காங்கே திட்டுத்திட்டாக அந்தக் குவியல்கள்.

''சில ஆண்டுகளாகத் தனிமையான வாழ்க்கை. எவ்வளவோ தூரம் இந்த மணல் குவியல்களுக்கு இடையில் நடந்து தேடினேன். எவ்வளவு தூரம் நடந்தும் ஒருவர் கூட தென்படவில்லை என் கண்களுக்கு. அப்பொழுதே முடிவு செய்துவிட்டேன். இந்த உலகம் அழிந்துவிட்டது என முடிவு செய்துவிட்டேன்'' என்றாள்.

''ஆமாம்... உன் பெயர் என்ன'' என்றாள்.

''என் பெயர் ஆதவன்'' என்றான். இருவரும் அருகில் அமர்ந்தார்கள். ஏதோ பரிமாறிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது இருவருக்கும். முதலில் காதல் பிறந்ததா, காமம் பிறந்ததா என்று ஏஞ்சலா கேட்டாள். அவள் உதடு ஆப்பிள்களாக மாறின. ஆப்பிளைக் கடித்தான் ஆதவன்.

''ம்...'' என்று முனகிச் சாய்ந்தாள். அது அவளுக்கு வேண்டும் வேண்டும் என்றிருந்தது.

ஆதவன், ஏஞ்சலாவின் முதுகின் மீது ஏறி கடற்கரைக்குப் போனான். அவர்கள் உடுத்தியிருந்த அழுக்காய்ப் போன அடையாளங்கள் மிகுந்த பழைய உடைகளைக் கழற்றி எறிந்தார்கள். ஏஞ்சலாவின் நிர்வாணம் ஆதவனுக்குக் கதிர்களைத் தூண்டிப் பிரகாசிக்கச் செய்தது. ஆயிரம் ஒளி பொருந்திய கண்களோடு இருவரும் தம் உடலைப் பொருத்திக் களித்தார்கள். அன்று முதல் அலைகள் ஓயவே இல்லை. அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த உலகத்தில் எதை ஸ்தாபிப்பது என.

அவள் தீ மூட்டிய நெருப்பு கனிந்துகொண்டேயிருந்தது. எப்பொழுதும் ஈருடலாய்ப் பின்னிப் பிணைந்தே கிடந்தார்கள். கடல் அளவு காதல் வளர்ந்தது. காமம் அதில் அலை அளவு நிற்காமல் இருந்தது.

இப்படியே ஐந்து வருடம் கழிந்தது. ஏஞ்சலா மணல் மீது படுத்துக்கொண்டு ஆதவனைப் பார்த்துக் கேட்டாள். ''இந்த ஐந்தாண்டுகளில் பலமுறை உறவு வைத்துக் கொண்டாடினோம். இன்னும் வயிற்றில் ஏதும் இல்லையே'' என உதட்டைக் கடித்தாள். ''இங்கு மனிதர்கள் இருந்திருந்தால் இந்தக் கேள்வியைக் கேட்டே நம்மை உயிரோடு கொன்று இருப்பார்கள். அவர்கள் இல்லாத உலகம் எவ்வளவோ பிரச்சனைகளைத் துறந்து கிடக்கிறது'' என்றாள்.

''ஆம்'' என்று முனகியவாறே இந்த முறை நிச்சயம் என்ற உணர்வோடு அவளைக் கூடிக்களித்தான் ஆதவன். இப்படியே இன்னும் ஐந்தாண்டு சென்றது. அவள் கர்ப்பம் தரிக்கவேயில்லை. அதே சிலை அழகு ஏஞ்சலாவாகவே இருந்தாள்.

ஆதவனும் பிரகாசமான ஒளியோடு இருந்தான். ஆதவனும் ஏஞ்சலாவும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். எப்படியாவது இந்த உலகத்தை மீண்டும் மனிதர்கள் வாழும் இடமாக உருவாக்க வேண்டும் என்று.

கடல் மணலில் கடவுள் சிற்பங்கள் சிலவற்றைச் செய்து வழிபட்டார்கள். அவை நீண்ட நாட்களுக்குச் சரியான வடிவங்களைப் பெற்று நிலைத்திருக்க முடியவில்லை.

ஏன் உலகத்தின் கடைசி மனிதராக நாம் இருந்துவிடக்கூடாது என முடிவெடுத்து வாழத் தொடங்கினார்கள். முன்பைவிட தினம் கொண்டாட்டம், ஆடல் பாடல் என ஆடிக் களித்தார்கள். கடல் இசைத்துக்கொண்டே இருந்தது. சில ஆண்டுகளில் ஏஞ்சலா சற்று வயதான தோற்றத்தில் அந்த மணல் ஆட்டத்தில் ஆவேசமாக ஆடினாள். காமம் காணாமல் போயிருந்தது அவள் உடலில். அதே இரவு, அதே இருவர் நிலையில் அவள் கடல் மணல் மேல் இறந்துபோனாள்.

ஆதவனுக்குத் தன் காதலியை இழந்துவிட்டது உச்ச வேதனையைத் தந்தது. அவள் தொலைந்து தூரம் போய்விடவே அழுது தீர்த்தான். அவள் உதடுகளில் முத்தம் பதித்தான். அவள் நினைவுகளோடு நெடிய அஞ்சலியைச் செலுத்தினான். கடல் மணலை வாரி இறைத்தான். அவளை, அவள் விரும்பும் அதே கடல் மணலில் புதைத்தான். ஆதவன் தனித்து நின்று வானம் பார்த்து ஏஞ்சலா எனக் கத்திக்கொண்டே இறுதியாக மணலைத் தள்ளி மூடினான். அந்தக் கணத்தில் படுக்கையை விட்டுத் திடீரென்று எழுந்தாள் ஏஞ்சலா. சுற்றிலும் பார்த்தாள். வீட்டில் விளக்குகள் மங்கலாக எரிந்தன, அருகில் அவள் கணவன் படுத்திருந்தான்.

நாளை கருத்தரிப்பு மையத்திற்குச் செல்ல வேண்டும் என்று சிந்தனையில் இருந்தாள்.

“பெண், இந்தச் சமூகம் மற்றும் உளவியல் சிக்கலைச் சமாளிக்கவே தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டிய கொடுமையான காலம் இது. இல்லை இல்லை இதுதான் பரிணாம வளர்ச்சியா?” என்று மனதில் முணுமுணுத்தாள்.

இந்த முறையாவது குழந்தை வந்துவிடும் என்ற ஆசையோடு விழித்துப் பார்த்தாள். அந்தக் கருத்தரிப்பு மையத்தை விட்டுவிட்டு வேறு ஒரு கருத்தரிப்பு மையத்திற்குச் செல்லலாமா என்று யோசித்தவாறே ஆதவனை நினைத்தாள். ஜன்னல் வழியாக இந்த முறை அவளைச் சந்திரன் பார்த்தான். சந்திரன் அவளுக்குக் கரு இந்தமுறை உறுதி என்று சொல்வதாக நினைத்தாள்.

தெருவெங்கும் கருத்தரிப்பு மையங்கள் இருந்தன. மக்கள் தொகை குறைந்துகொண்டே வந்தது.

ஏஞ்சலா திடீர் என்று ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றாள். அலை மணலில் அப்படியே மல்லாந்து படுத்திருந்தாள். அவள் தொடையிடுக்கில் கடல் தண்ணீர் தொட்டது. அவளுக்கு ஆதவனைப் பிடித்திருந்தது. கடைசி உலகத்திற்கும் கடைசி மனிதனிடமும் சென்றாள். ■

● கோ.லீலா

கும்பகோணம்னா கொம்பா?



பிளிறும் கொம்பு

ஆதிமனிதன் வேட்டையாடிய விலங்கின் மாமிசங்களைத் தின்றபின் காட்டிலேயே விட்டு வந்த எலும்புகளைச் சிறிதுகாலம் கழித்துப் பார்க்க நேர்கையில், எலும்பில் இருந்த மஜ்ஜைகள் கரைந்து, சிறு வண்டினங்களோ, எறும்புகளோ ஓட்டையிட அதன் வழியே காற்று பயணிக்கும்போது ஏற்பட்ட ஒலியைக் கண்டே ஊதுகருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறான்.

அதன் தொடர்ச்சியாக, விலங்குகளின் கொம்புகளில் இசைக்கருவியை அல்லது செய்தி தொடர்புக் கருவியைச் செய்ததால் கொம்பு என்னும் ஊதுகருவி உருவாகியுள்ளது. வணக்கம் வைக்கும் யானையின் துதிக்கையைப் போன்ற அமைப்புடைய கொம்பின் இசையும் யானையின் பிளிறலை ஒத்திருக்கும்.

●●

அமைப்பு

'S' என்ற ஆங்கில எழுத்தை ஒத்த வளைவுகள் கொண்ட இந்த இசைக்கருவி ஐந்து பாகங்களால் ஆனது. சுமார் 5 கிலோ எடையுள்ளது. தற்போது புழக்கத்தில் இருக்கும் கொம்புகள் ஐம்பொன்னால் செய்யப்பட்டவை. இதன் ஊதும் பகுதி சிறுத்தும், அடிப்பகுதி சற்றே விரிந்தும் காணப்படும். "C" என்ற ஆங்கில எழுத்தின் வடிவத்தையுடைய கொம்புக்கருவி கேரளத்திலும் வட இந்தியாவிலும் உண்டு.

●●

குறிப்பு

பழந்தமிழகத்தில் பகுத்தறியப்பட்ட நிலத்திணைகளில் முல்லை நிலத்துக்குரிய இசைக்கருவி இது. முருகக்கடவுள் இக்கருவியை விருப்புடன் இசைப்பதாகக் கந்தபுராணம் கூறுகிறது. இலக்கியங்களில்

‘கோடு’ என்ற பெயரால் குறிக்கப்படும் இக்கருவியை இசைப்பவர்கள் கோடியர் எனப்பட்டனர்.

கற்காலத்தில் விலங்குகளை வேட்டையாடிப் புசித்த மனிதன், அவற்றின் எலும்புகளில் ஓட்டையிட்டு ஊதிச் சத்தம் எழுப்பிய தருணத்தில் உதித்த கருவி இது. காலப்போக்கில் எலும்புகளை விடுத்து விலங்கின் கொம்பை வைத்து ஊத, அதுவே இன்றளவுக்கும் பெயராக விளங்குகிறது.

சோழ மாமன்னன் ராஜராஜன் காலத்தில் இந்த இசைக்கருவி செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. ஆலயங்கள் அனைத்திலும் கொம்பு இசைப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். தமிழகத்தில் குரும்பர் இன மக்கள் கொம்பைத் தங்கள் குலதெய்வ வழிபாட்டில் இசைக்கிறார்கள். கேரளாவில் பஞ்ச வாத்தியங்களில் ஒன்றாகச் செண்டை மேளத்தோடு இணைத்துக் கொம்பு இசைக்கப்படுகிறது.

தமிழர்களாகிய நாம் தொலைத்த / மறந்த பல இசைக்கருவிகள் கேரளத்தில் சிறப்புடன் போற்றப்பட்டு வருகின்றன. நேபாள நாட்டில் நர்சிங்கா என்றும் வடஇந்திய மாநிலங்கள் சிலவற்றில் சிருங்கா என்ற பெயரிலும் இக்கருவி இசைக்கப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் கம்பளர் இனத்தவர் இக்கருவியைப் புனிதமாகக் கருதி இசைக்கிறார்கள்.

மகாராஷ்டிரத்தில் இக்கருவி மாநில அரசின் சின்னமாக உள்ளது. துத்தாரி என்று அழைக்கப்படுகிறது.

மேற்குத் தமிழக பகுதிகளில் பெரிய சலங்கையாட்டம், கடவு மத்தாட்டம் ஆகிய கலைகளில் மண் மேளத்துடன் சேர்த்து கொம்பும் இசைக்கப்படுகிறது.

••

புழக்கத்தில் உள்ள இடங்கள்

திருவையாற்றை அடுத்துள்ள திருப்பழனம் (பிரகாசம், ரத்தினசாமி, துரைராஜ், மதிப்புராஜன் ஆகிய கலைஞர்கள் ஐந்தாம் தலைமுறையாக இக்கருவியை வாசிக்கிறார்கள்).

தஞ்சையின் தெற்கே உள்ள வாழைமரக்கோட்டை.

குரும்பர் இனப் பழங்குடி மக்களின் விழாக்கள்.

தஞ்சையருகே உள்ள சுந்தரபெருமாள் கோயில்.

தென் தமிழகச் சுடலைமாடன் கோவில்களில் தப்புடன் சேர்த்துக் கொம்பு இசைக்கிறார்கள்.

வள்ளியூர், சமுகரெங்கபுரம் திருநெல்வேலி மாவட்டம்.

மேற்குத் தமிழகம் மற்றும் திருப்பூர் மாவட்டம் நெருப்பெரிச்சல் கிராமம்.

காஞ்சிபுரம் மாவட்டம் பாலாற்றங்கரை கிராமங்கள்.

••

இலக்கியத்தில் கொம்பு

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவா் அடிபேணுதல் தவமே

– திருமுறை 1.10.1 1

வெல் படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டம் தோறும்
கொல் எறி குத்து என்று ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும் சிறு கண் ஆகுளியும் கூடி
கல் எனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும்

– திருமுறை 12.0654

கோடி யம்பியும் வேய்ங்குழல் ஊதியுங் குரலால்
நீடு தந்திரி இயக்கியும் ஏழிசை நிறுத்துப்

பாடி யுஞ்சிறு பல்லியத் தின்னிசை படுத்தும்
ஆடு தும்விளை யாடுதும் இவ்வரை அதன்கண்

– க பு – வள்ளியம்மை திருமணப் படலம்

கொம்பு துத்தரி கோடு அதிர் பேரிகை
பம்பை பம்பு படையினன், பல்லவத்து
அம்பன், அம்பிக்கு நாதன், அழி கவுள்
தும்பி ஈட்டம் புரை கிளை சுற்றத்தான்.

– கம்பராமாயணம்

திமிலை, மத்தளம், இந்தளம், உடுக்கை, கொம்பு, குடமுழா, துந்துபி, பாரிநாயனம், சங்கு, பிரம்மதாளம், குட்டத்தாரை, திருச்சின்னம், எக்காளம், நெடுந்தாரை, தாரை, கொம்புத்தாரை, சேமக்கலம், தப்பு, களணா, குழித்தாளம், உறுமி, கொக்கரை, தவண்டை, கொடுகொட்டி, நகரா, யாழ், உயிர்த்தூம்பு, குறும்பரந்தூம்பு, மொந்தை, தகுணிதம், தாளம், வீணை, கரடிகை, சச்சரி, தக்கை என 70 வகை இசைக்கருவிகள், திருவாரூர் ஆழித்தேர் முன் பங்குனி உத்திரத்தில் வாசித்தே தேர் இழுக்கப்பட்டிருக்கிறது.

காரைக்கால் அம்மையார் 11ஆம் திருமுறையில் இக்கருவிகள் பற்றிப் பாடியுள்ளார்.

பல பக்தி இலக்கியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் எனப் பலவற்றிலும் கொம்பு பற்றிய குறிப்புகள் இருக்கின்றன.

திருக்கயிலாய இசைக்கருவிகள் எனச் சில கருவிகளை வகுத்துள்ளனர். அதில் கொம்பும் இடம் பெற்றுள்ளது.

எனினும், அனைவராலும் கொண்டாடப்படும் பொதுவுடைமை இசை என்பதைச் செயல்படுத்த இன்றைய இளைஞர்கள் பலரும் பயிற்சி பெற்று இக்கலையை வளர்க்க முயன்று வருவது பாராட்டுக்குரியது.

••

இசையும் கூத்தும்

கூட்டும் இசையும் கூத்தின் முறையும் வகுத்தவன் தமிழன். பறையோடு கொம்பு சேர கிளர்ந்தெழுந்த மனவெழுச்சியும் உடலின் அசைவும் உயிரின் நாதமானது *(Rhythm of life).*

உற்சாகமூட்டக்கூடிய இசையான பறையும், கொம்பும் முழங்கியே மகேசனின் வருகையென்றாலும் மன்னனின் வருகையென்றாலும் அறிவிக்கப்பட்டது.

தாரை தப்பட்டை என்ற சொற்றொடர் கொம்புத்தாரை மற்றும் தப்பினை (பறை) குறிக்கும். கொம்பு வாசிப்போருக்கு முதல் வரிசை அளிக்கப்பட்டிருந்ததும் இக்கருவியின் உயர்வைச் சொல்கிறது.

யானையின் பிளிறலை ஒத்திருக்கும் இக்கொம்பின் இசை, போர் அறிவிப்பு, தேர் வருதல், சாமியை இறக்குதல், ஏற்றுதல் என எந்தச் செய்தியையும் அறிவிக்கும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உயரமான இடத்தில் நின்றுகொண்டு இந்தக் கொம்புத்தாரையை வாசித்தால் எட்டு மைல் வரை இதன் ஒலி செல்லும் தன்மையைக் கொண்டுள்ளது.

போருக்குப் புறப்படும் முன் முதலில் கொம்பு ஊதப்படுகிறது, பின் முரசொலிக்க வீரர்கள் அணிவகுத்து இருக்கின்றனர் என்கிறது வரலாறு.

••

இசைக்கும் முறை

இக்கருவியைத் தொடர்ந்து வாசிக்க முடியாது. காற்றை உள்ளிழுத்து அதைக் கொம்பு வழியாக வெளியிடுதலே இசையாகிறது. இப்படி உள்ளிழுக்கப்படும் காற்றை 15 நிமிடம் வரை வாசிப்பர். பின் 5 நிமிட இடைவெளியில் மீண்டும் காற்றை உள்ளிழுத்து வாசிப்பர். ஏட்டுல எழுதவில்லை எழுதி வச்சுப் படிச்சதில்லை என்ற வரிகளுக்கு இவ்வகையான தொல்லிசைக் கருவிகளே பெருமை சேர்க்கும் சான்று.

இப்படி காற்றை முழுதும் உள்ளிழுத்து வெளியிடுவது ஆயுளைக் கூட்டும் முறை என்றும் பல கொம்பு ஊதும் கலைஞர்கள்

நூறாண்டு வாழ்வதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

கேரளத்திலே ஜெண்டை வாசிப்பில் திமிலையோடு கொம்பு வாசிக்கப்படுகிறது. ஏகஸ்வரமாகக் காற்றை உள்ளிழுத்து வெளியிடுவது மாத்திரமே என்றாலும் உதடுகளுக்குள் பொருத்தப்படும் கொம்பில் த்தா த்தேர என்ற தாளக்கட்டை நாவின் அசைப்பினால் உருவாக்குகின்றனர்.

திமிலையின் ட்ரே ட்ரே என்ற வாசிப்பிற்கு ஈடுகொடுக்க த்தே த்தேரா என்பது உச்சாஸ்தாயிலும் வாசிக்கப்படுவது கவனித்துக் கேட்போரை சபாஷ் போட வைக்கும் கொம்பு இசை.

••

கும்பகோணம்னா கொம்பா?

அட ஆமாங்க! ஆமா! கும்பகோணம்னா கொம்புதான்... இந்தக் கொம்பு இசைக்கருவி கும்பகோணத்தில்தான் தயாரிக்கப்படுகிறது. கும்பகோணத்தின் பல பித்தளை, தாமிர, செம்பு பாத்திரம் விற்கும் கடைகளிலும், தற்போது சுவாமிமலையிலும் மட்டுமே விரும்பிக் கேட்பவர்களுக்குச் செய்து தரப்படுகிறது. விலை சுமார் ரூ8000/- வரை ஆகும்.

உயிரும் உடலும் போலத் தமிழருக்கு மொழியும், இசையும் இருந்திருக்கின்றன என்பதை இதன் மூலம் உணரலாம்.

தமிழிசைக் கருவிகளை இசைக்க கங்கைகொண்டசோழபுரத்தில் கற்றுத் தருகிறார்கள் என்பது மகிழ்ச்சியான செய்தி.

தற்சமயம், பல இளைஞர்கள் தொல்லிசையினைக் குறிப்பாக பறை மற்றும் கொம்பினைக் கற்றுவருகின்றனர். இன்றும் மாப்பிள்ளை அழைப்பிற்குக் கொம்பு ஊதுவது பெரும் மரியாதையாக, கௌரவமாகத் தஞ்சை மாவட்டத்தில் கருதப்படுகிறது. இத்தகைய சிறப்பு மிக்க கொம்பு மீண்டும் மீண்டு முன்வரிசைக்கு வரவேண்டுமென்பதே அனைவரின் ஆசையாகவும் இருக்கிறது...

தமிழே இசை! தமிழை இசைப்போம்!! தமிழிசை இசைப்போம்!!!

● ஆதிரன்

மனநிலைக் குறிப்புகள்-17

தத்துவ மனநிலை

சுயமோகம் (narcissism) என்று ஒரு கருத்துரு (concept) இருக்கிறதா என்ன என்று கேட்டார் நண்பர் ரமேஷ் வைத்யா. தத்துவப் புலத்தில் அதைப் பற்றித் தேடினேன். மறுபடியும் ஒரு கடலுக்குள் மாட்டிக்கொண்டேன். உளவியல் துறையில் நார்சிசிஸம் பற்றிய தனித்துறையே இயங்கிக்கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்தமான மனித உளவியல் சிக்கல்களுக்கு நார்சிசிஸக் குணமே ஆதாரமாக இருக்கிறது என்று புளியைக் கரைக்கிறார்கள். வெறும் சுயமோகம் மட்டுமே அல்ல அது. அது மிக ஆழமான உளவியல் பிரச்சனை. கடவுளே உனக்குக் கருணையே இல்லையா என்று ஒருவர் கேட்கத்தொடங்கினால் அவருக்கு நார்சிசிஸ நோய்க்கூறு இருக்கிறது என்று சத்தியம் செய்கிறது உளவியல் மருத்துவம். நார்சிசிஸம் ஒரு நோய் என்பதில் அவர்களுக்குச் சந்தேகமே இல்லை. பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் இந்த மனக்கூறு இரண்டு வகையில் உருவாகிறதெனலாம். அகவயமான நார்சிசிஸம் உருவான சம்பவமாக கிரேக்க தேவதையின் கதை ஒன்று இருக்கிறது. அவளின் பெயர் நேமிசிஸ் (or Rhamnose). அவள் விரோதத்தின் தேவதை. ஒரு அழகான இளைஞனை நீர்ச்சுனைப் பிம்பத்தைப் பார்த்துத் தன்னைத் தானே விரும்பச்செய்து விடுகிறாளென்று ஆரம்பமாகிறது அந்தக் கதை. ஆழமான தத்துவ விசாரணைக்கு அழைத்துச் செல்லும் அந்தக் கதை இணைய வெளியில் கிடக்கிறது. தேடிப் படியுங்கள். அகவய நார்சிசிஸம் ஏறக்குறைய உடல் மற்றும் பால்முறை (sexuality) அடிப்படையிலானது. போலவே புறவயமான நார்சிசிஸம் என்பது சூழலில் தன்னை எவ்வாறு வெளிப்படுத்துகிறோம் என்பதைச் சார்ந்து அமைகிறது. அடிப்படையாக நான்கு விதமாக இதைப் பிரிக்கிறார்கள். ஒன்று, பெருமை/செருக்கு கொண்ட மனம் (நான் உன்னைவிட மேல்... அது எனக்குத் தெரியும்). இரண்டாவது வீரியமான மனம் (என்னவானாலும் எனக்கு வேண்டியதை அடைந்தே தீர்வேன்). மூன்றாவது, மறைமனம் (நான் ஒரு அறிவுஜீவி, எனது திறமையை உலகத்தார் யாரும் உணரமறுக்கின்றார்கள்). நான்காவதாக சாதி/மத/நிற மனம் (இதுபற்றி நம் எல்லோருக்கும் ஒரு புரிதல் இருக்கிறது). எனக்கு முதல் மூன்று குணங்களும் இருக்கின்றன. எனவே மருத்துவரீதியாக நான் ஒரு நார்சிசிஸ்ட். 'ஒரு நார்சிசிஸ்ட் தன்னை ஒரு பாதிக்கப்பட்ட நபராகவோ அல்லது அப்பாவியாகவோ புறவுலகில் முன்நிறுத்துகிறார். உண்மையை அவர் மறைக்கிறார். அதற்காக அவர் என்ன வேண்டுமானாலும் செய்வார்' என்று வரையறை செய்கிறார்கள். 'நார்சிசிஸம் வீரியத்தன்மை அடையும்போது ஒரு தனிமனிதரின் பிடிவாதக்குணம் அதன் உச்சத்திற்குச் செல்கிறது. சுயவிமர்சனத்திற்கு ஒத்துப்போகாமல் முதிர்ந்த மற்றும் நேர்மறையான விமர்சனத்தை முற்றிலும் நிராகரிக்கும் நிலைக்குச் சென்றுவிடுகிறார். உண்மையில் அதைக் கண்டு அதீத பயம் கொள்கிறார் மேலும் தனது தனிமையான சுயத்தை அது அழிக்கும் என முடிவு செய்துகொள்கிறார்' என்று நார்சிசிஸம் பற்றிய புத்தகமொன்றில் எரிக் ஃப்ரோம் எழுதிச் செல்கிறார். மேலும் மற்றொரு எழுத்தாளர் Sandy Hotchkiss தான் எழுதிய *Why Is It Always About You? "Seven Deadly Sins of Narcissism"*

என்றொரு படுசுவாரஸ்யமான புத்தகத்தில் இந்த ஏழு குணங்களை விவாதிக்கிறார். 1. வெட்கமின்மை *(Shamelessness)*, 2. மாயவகைச் சிந்தனை *(Magical thinking)*, 3. மூர்க்கம் *(Arrogance)*, 4. பொறாமை *(Envy)*, 5. உரிமைகோரும் தன்மை *(Entitlement)*, 6. சுரண்டல் குணம் *(Exploitation)*, 7. மோசமான முந்தீர்மானங்கள் *(Bad boundaries)*. மேலோட்டமாக இவையனைத்தும் அனைவரிடமும் சாதாரணமுறையில் இருக்கும் குணங்கள்தான் என்றாலும் விகிதாச்சாரத்தின் அளவில் இது எந்த நிலை நோய்க்கூறாக இருக்கிறது என்பதை உளவியல் மருத்துவம் கணக்கில் கொள்ளும். எனவே மனமே ஒரு பூடகத்தன்மை மிக்கதென்பதாலும் நடத்தையின் அடிப்படையில் நார்சிசிஸம் என்பதை இயங்கியல் உண்மையாக உளவியல் மருத்துவம் ஏற்றுக்கொண்டதாலும் நார்சிசிஸம் என்ற ஒன்று இருக்கிறது என்பதை நான் நம்புகிறேன் நண்பர்களே.

*

இலக்கிய மனநிலை

சென்னையில் நாற்பத்தைந்தாவது புத்தகத் திருவிழாவையொட்டி ‘என்னைச் செதுக்கிய நூல்கள்’ என்கிற ஒரு உருட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. என்னைப் புத்தகங்கள் செதுக்கியதா என்று கேட்டால்.. புத்தகங்களைத் தவிர என்னைச் செதுக்கியது - சில துரோகங்களின் அனுபவம் தவிர– வேறெதுவும் இல்லை என்பேன். ஆனால் ஒன்றை மட்டும் நான் சொல்வேன். புத்தகம் என்பது வெறும் புத்தகம் மட்டுமல்ல அது ஒரு மனிதனின் பிரதி, எனவே நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரும் குறைந்தது ஒரு புத்தகம். அந்த வகையில் புத்தக அலமாரியாகத் திரிந்த, புத்தக நூலகமாகத் திரிந்த ஒற்றை மனிதர்களை நான் சந்தித்திருக்கிறேன். இதுவொரு தொடர் நிகழ்வும் கூட. இருந்தாலும் சில நூல்களை இப்போது நினைவுகூர்கிறேன். பள்ளிக்காலங்களில் அம்புலிமாமாக் கதைகள் முதல் இரும்புக்கை மாயாவி வரை கூடவே துப்பறியும் சங்கர்லால் வரை ஒரே கதம்பமாக இருந்தவேளையில் ஒட்டுமொத்தமாக எனது சிந்தனைப் போக்கை மாற்றிய புத்தகம் பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதிய நீ மட்டும் நிழலோடு என்கிற நாவல். எனது அப்பாவித்தனத்தை நிர்மூலமாக்கியது என்றே சொல்வேன். இரவு நேரத்தில் இராணுவம் ஒன்று தொலைதூரக் கிராமத்தில் புகுந்தது போலப் பதினேழாவது வயதில் எனது மூளைக்குள் நுழைந்தது இந்த நாவல். அதே வேகத்தில் இந்துமதியின் தரையில் இறங்கும் விமானங்கள் நாவலும் சுஜாதாவின் எப்போதும் பெண்ணும் மனதுக்குள் ரகளையைக் கிளப்பின. கல்லூரிக் காலங்களில் ஏறக்குறைய மூன்று வருடம் பாலகுமாரதாஸனாகவே இருந்தேன். எனது பழக்கவழக்கங்களில் ஆதிக்கம் செய்தது பாலகுமாரனின் மேய்ச்சல் மைதானம் என்கிற நூல். தினமும் பாதங்களை இரண்டு நிமிடம் தேய்த்துக் குளிக்கும் பழக்கத்தை உருவாக்கிய அளவுக்கு என்னுள் அது பாதிப்பை ஏற்படுத்தியது. பிறகு ஒரு சிறிய புத்தகம் என்னை ஒட்டுமொத்தமாக ரஷ்ய இலக்கியங்களின் பக்கம் இழுத்துவிட்டது. எனது காதலைப் பாலகுமாரனிடமிருந்து மீட்டெடுத்த அந்த நாவலின் பெயர் ஜமீலா. நான் ஏதோ ஒருவகையில் எழுத்தாளனாக என்னை உணரச்செய்தது இந்த நாவல்தான். பிறகு, புத்துயிர்ப்பு நாவலை ஒரே அமர்வில் படித்த நாட்கள் எனது மனதில் உறைந்துபோன காட்சி. கடவுள் அல்லாத ஆன்மீகத்தேடலுக்கு அந்தப் புத்தகம் என்னை இட்டுச் சென்றது. அந்தத் தேடல் சூனியசம்பாதனை, தத்துவமஸி போன்ற நூல்களைக் கடந்து இந்தியத் தத்துவத்தில் அழிந்தவையும் நிலைத்திருப்பதும் என்ற அதிஅற்புத நூலில் சென்று முடிந்தது. தத்துவப்பித்து அங்கிருந்து தொடங்கிற்று. இந்தப் புத்தகம் என்னைத் தத்துவக் கிறுக்காக்கியது. ஹெர்மன் ஹெஸ்ஸேவின் சித்தார்த்தாவும்

அனந்தமூர்த்தியின் சம்ஸ்காராவும் எனதான தேசிய புத்தகங்களாகின. அவை எனக்கு நான்கு ஆங்கில நாவல்களை அறிமுகப்படுத்தின. *Jonathan Livingston Seagull & Illusions (Richard Bach), Spartacus (Howard Fast), Memoirs of a Geisha (Arthur Golden).* இதில் ஸ்பார்டகசும், சீகலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தன. எனக்கான மானுட அறிவினைப் பற்றியதொரு திறப்பை வால்காவிலிருந்து கங்கைவரை என்ற நூல் உருவாக்கியது. தத்துவத்தின் புனைவாக நான் இன்றுவரை பிரதான நூலாகக் கருதுவது அந்நியன் நாவல். இந்த நாவல் படிக்கும் வரை நான் ஜேஜே சில குறிப்புகளைக் கடுமையாய்க் கொண்டாடிக்கொண்டிருந்தேன். ஒரு காலகட்டத்தில் பஷீர் ஒரு புயல்போல என்னுள் புகுந்தார். இவ்வாறாகப் பல்வேறு புத்தகங்கள் எனது சிந்தனைப் போக்கை மாற்றி மாற்றி உருவேற்றிக்கொண்டிருக்கின்றன. தற்சமயம் சுற்றுச்சூழல் தொடர்பான புத்தகங்களை ஆர்வமாய் வாசித்துக்கொண்டிருக்கிறேன். தமிழின் மிகச் சிறந்த நூல் என்று என்னைக் கேட்டால் நாவலில் வெங்கட்ராமனின் காதுகள் என்பேன். அதற்குப் பின்புதான் புயலிலே ஒரு தோணி வரும். தமிழின் மிகச்சிறந்த எழுத்தாளர் என்கிற வரிசையில் நான் முதலில் வைப்பது ஜி நாகராஜனையும் கோபிகிருஷ்ணனையும்தான். இங்கு சொல்லப்பட்டிருக்கிற புத்தகங்களைவிட நிறைய அற்புதமான புத்தகங்களை வாசித்திருக்கிறேன். காட்டாக மஹாஸ்வேதா தேவி, சில்வியா, சுகந்தி, மாண்ட்டோ, கொர்தஸார், கால்வினோ, குந்தேரா, மார்குவெஸ் உம்பர்தோஈகோ, உமர்கயாம் எனப் பெரும் பட்டியல் மற்றும் பெண் எழுத்தாளர்களின் நீண்ட பட்டியல் என இருந்தாலும் மேலே சொன்ன புத்தகங்கள் அவ்வந்தத் துறை சார்ந்து முதலில் படித்த நூல்கள் என்பதால் ஒரு இனிய ஈர்ப்பு. அந்நியன் நாவலை ஒன்றரை மணி நேரத்தில் படித்துவிட்டு (திண்டுக்கல்லில் இருந்து மதுரை செல்லும் பேருந்தில்) நேராக ஒயின்ஷாப் சென்றது ஒரு குதூகலமான நினைவு. ஆக என்னைச் செதுக்கிய புத்தகங்கள் என்ற இந்த உருட்டில் நான் எனது மிகக்குறைந்த நினைவை இங்கு பகிர்ந்திருக்கிறேன். விடுபடல்கள் நூற்றுக்கு மேல் இருந்தாலும், இதை எழுதும்போது எனக்குள் எழுந்த நெகிழத்தக்க நினைவுகள் எந்தவொரு வகைமைக்குள்ளும் அடங்காத மகிழ்ச்சியான அனுபவம். நன்று.

*

ஓவிய மனநிலை

கடந்த வருடம் அக்டோபரில் *'The Electrical Life of Louis Wain'* என்ற திரைப்படம் வெளியாகி உலகளவில் பரவலான கவனத்தைப் பெற்றது. டாக்டர் ஸ்ட்ரேஞ்சர் புகழ் பெனடிக்ட் கும்பர்பாட்ஷ் நடிப்பில் இந்தப் படம் ஒரு காவியத் தன்மையைப் பெற்றிருந்ததாகத் திரைரசிகர்கள் கொண்டாடினார்கள். இந்தத் திரைப்படம் ஆங்கில ஓவியர் லூயி வைன் என்பவரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. மின்னல் வேகத்தில் இரண்டு கைகளாலும் ஒரே நேரத்தில் ஓவியம் வரைவதில் நிபுணர். ஆயிரத்து எண்ணூற்று அறுபதில் லண்டனில் பிறந்த வைன் உலக ஓவிய வரலாற்றில் *Anthropomorphism* வகைமை ஓவியங்களின் ஒரு திருப்புமுனையாக அறியப்படுகிறார். மிகவும் குழப்பமான வாழ்க்கை முறையில் அவரது பத்து வயது மூத்த மனைவியிடம் வந்து சேர்ந்த பூனை ஒன்றை (அவர் அதற்குப் பீட்டர் என்று பெயர் வைத்திருந்தார்) பலவிதமாக வரைந்துகொண்டிருந்தார். அவரது மனைவி புற்றுநோயால் அவதியுற்றபோது இந்த ஓவியங்கள் அவருக்கும் அவரது மனைவிக்கும் பெரிய ஆறுதலை அளித்தன. விரைவிலேயே அவர் மனைவியை இழந்தார். பூனைகள் வரைவதைத் தொடர்ந்தார். பின்னாளில்

அது *Anthropomorphism* வகை ஓவியத்தின் உலகளாவிய உச்சத்தைத் தொட்டது. கடைசி நாட்களில் மனநோயினால் அவதிப்பட்டதாக மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கேயே தன் வாழ்நாள் முழுவதும் கழித்தார். இன்றளவும் அவருக்கு மனநோய் இருந்ததா இல்லையா என்ற விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. அவர் எழுதிய கவிதைகளும் மிகவும் பிரசித்தி பெற்றவை. அவரது ஓவியங்களில் மிகவும் பிடித்த இரண்டு ஓவியங்களைப் பகிர்ந்திருக்கிறேன்.

*

பொதுவான மனநிலை

உலகின் மிக அழகான இடங்கள் என்று அறியப்பட்ட மூன்று நாடுகளில் இன்றைத் தினத்தில் போர் நடந்துகொண்டிருக்கிறது. உலக ஊடகங்கள் உக்ரைன் – ரஷ்யப் போரை முழுவதுமாகக் கவனப்படுத்துகின்றனர். பாலஸ்தீனம், யேமன் ஆகிய இடங்களில் நடக்கும் போர் குறித்து மிகவும் அரசியல் வன்மத்தோடு ஊடகங்கள் மறைத்துவருவதைப் பொருளாதார/போர் அரசியல் நிபுணர்கள் கவனப்படுத்திவருகின்றனர். மனித குலம் தொடங்கியது முதலே போர்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். தமிழ் மரபில் போர் பற்றிய பல்வேறு வரையறைகள் இருக்கின்றன. அது ஒரு சுவாரஸ்யமான அதே சமயம் மிக நுட்பமான இலக்கணத்துடன் காணப்பட்டது. குழந்தைகளையும் பெண்களையும் போர்கள் எவ்வளவு அலைக்கழிக்கும் என்று வெறும் வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது. என்னைப் பொறுத்தவரை போரின் மிகமிக மோசமான விளைவு என்பது, அது குழந்தைகளின் அப்பாவித்தனத்தை அழித்துவிடுகிறது என்பதாகும். பல்வேறு ஆப்பிரிக்க நாடுகளில் பயங்கரவாதிகளிடம் சிக்குண்டு போர் புரியும் பதின்ம வயதுக் குழந்தைகள் பற்றிய செய்திகளைச் சகிக்க நமக்கு மிகக் கடுமையான மனம் வேண்டும். பத்து வயது மனிதன் இயந்திரத் துப்பாக்கியை உபயோகப்படுத்தும்போது அவன் கண்ணில் பயம் தெரிவதைவிட குரூரம் தெரிவதைப் பார்க்கும்போது வேதனையின் உச்சமடைவோம். ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய தண்டனை குழந்தைப் பருவத்தில் அப்பாவித்தனத்தை இழக்கச் செய்வது. காலந்தோறும் ஏதோவொரு வகையில் இந்த நிகழ்வு நடந்துகொண்டே இருக்கிறது. ஆயிரம் ஆயிரம் வருடங்களாக நாம் குழந்தைகளுக்குக் கதை சொல்லியும் பழகி வந்திருக்கிறோம். கதை சொல்லல் மரபு ஏறக்குறைய அழிந்துவிட்ட நிலையில் மனிதத் தன்மையிலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டோம். கதை சொல்வதை, படிப்பதை நாம் விடாது பழக்கப்படுத்த வேண்டும். அந்த வகையில் உலகின் மிகப் புகழ்பெற்ற தொகுப்பு நூலான ஆயிரத்தோரு அரேபிய இரவுகளை அருமையாக மொழிபெயர்த்துள்ளார் எனது இனிய நண்பர் முகமது ஃஸபி அவர்கள். குழந்தைகளுக்கு மிகச் சிறந்த வாசிப்பனுபவத்தையும் சிறந்த கற்பனை வளத்தையும் உருவாக்கவல்ல இந்த நூல் இரண்டு தொகுதிகளாக உயிர்மை பதிப்பகம் மூலம் வெளிவந்திருக்கிறது. பரவலாக இதைக் கொண்டு சேர்ப்பது வாசகரின் கடமை.



● நிலாகண்ணன்

தவறவிடக்கூடாத ஒரு தரிசனம்

கரும்பேழைக்குள் ஒரு வயலினைப் போல நான் எடுத்துச் செல்லப்படுகின்றேன் என் நிழலுக்குள் வைத்து. தோமஸ் டிரான்ஸ்ட்ரோமரின் இந்த வரிகளில் உள்ள "நான்" பெறும் முக்கியத்துவமும் தேடலும்தான் நிழலற்ற தூரம் என்ற கவிதை நூலுக்குள் இருக்கின்ற கவிதையின் ஆத்மாவாகவும் அது அடைகின்ற தரிசனமாகவும் இருக்கின்றது. கவிதைத் தொகுப்புகளும் பதிப்பகங்களும் மண்டிவிட்ட இக்காலகட்டத்தில் அமிர்தாலயம் என்னும் பதிப்பகம் தஞ்சை தவசி அவர்களை அடையாளம் காட்டியிருக்கிறது. அவர் சொல்லாத நிழல் அல்லது அவர் காட்டாத நிழல் ஞானத்தைப் போதிக்கின்றது. நிழலின் நினைவாகவே நம்மைக் நடக்க வைக்கிறது சமீபத்தில் எனக்கு வாசிக்கக் கிடைத்த நிழலற்ற தூரம் எனும் கவிதை நூல்.

புத்தகத் திருவிழா நிகழும் காலகட்டத்தில் இந்த நூல் மீதான எனது பார்வையும் வாசிப்பு அனுபவமும் பயனுள்ளதாக இருக்கும் என நம்பினேன். அந்த நம்பிக்கையைத்தான் நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள். அனுபவத்திலிருந்தும் தனிமையின் உள்ளார்ந்த மன இடுக்குகளிலிருந்தும் எழும்பிய நினைவின் நறுமணமிக்க கவிதைகள் நிறையவே தன்னகத்தே கொண்டுள்ளது இந்தத் தொகுப்பு. நான் வாசித்தவரை யார் சாயலும் சிறிதுமற்றுப் புது வகையான எழுத்து கவிஞர் தஞ்சை தவசி அவர்களுடையது. அனுபவத்தை வைத்துக்கொண்டு அவர் எல்லை இன்மைக்குள் நீட்டும் மொழியின் நாவானது ஞானத்தைத் துளாவிச் சுவைக்கிறது. அவரிடம் உள்ள மொழி அல்லது ஒவ்வொரு வார்த்தையும் அவருடைய தனிமையின் கதவினைத் திறப்பதும் மீண்டும் தனிமையின் வெறுமையைப் பெறுவதும் அதைத் திறப்பதும் ஆக இருக்கிறது. இப்படியே மொழிக்குள் ஒரு பித்து நிலையை அடைகிறார்.

அவர் எழுப்பும் அமைதியற்ற மனதின் அலைகளின் தொடர்ச்சியாக வாசகனை ஈரம் தீண்டாமல் இல்லை. அம்மாவின் சிரிப்பை இருப்பின் பூத்தல் என்றும் "என்னை அடைகாத்த ஒற்றை விளக்கு" என்றும் கூறுகிறார். ஆன்மாவின் கடைசிப் பாடல் என்ற கவிதையில் மொழி ஒரு இறப்பின் பிறகான ஒற்றையடிப் பாதையில் கைபிடித்து அழைத்துப் போகிறது.

பிரேத பயமும் மீதமுள்ள தனிமையும், யாருடைய மனதிற்குள் பயணிக்கிறோம் என்ற நடுக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக

இருக்கின்றன. ஆத்மார்த்தமான அன்பும் ஞானப் பித்தும் இணைகின்ற புள்ளியை இவரது கவிதையாக வகைப்படுத்தலாம்.

"ஒத்தையில் ஊதிப் பெருத்த

பிணம் மாதிரி

யாருடைய வருகைக்குக்

காத்திருக்கிறோம்" எனும் வரிகள் நினைவு உதிர்காலத்தின் வெள்ளி மின்னல் வெட்டுக்கள்.

ஒவ்வொரு வார்த்தையையும் தனித்தனி கவிதையாக்கி இணைக்கும் இவரது புதிய யுத்தியைத் தொகுப்பு முழுக்கக் கையாண்டிருக்கிறார். மனம் சமகாலத்தோடு பொருந்தாத வாதையை, அன்பின் மீது நம்பிக்கை இழக்கும் தருணத்தை, பூலோக வலி என்னும் கவிதையில் பாடியிருக்கிறார். அக்கவிதையை நான் வெகுவாக ரசித்தேன். பிரமாதமாக வந்திருக்கிறது பூலோக வலி எனும் கவிதை. மற்றொரு கவிதையில்,

"எல்லோரிடமும் இருந்தென்ன

அன்பு குற்ற முத்திரை.

ஏற்றப்படாத மெழுகுவர்த்தி..

வேற என்ன மனித வாழ்வு" என்கிறார். குற்ற முத்திரை என்னும் சொற்சேர்க்கையில் சொக்கிக் கிடந்தேன்.

"தொடமுடியாத அண்மை

அமைதியைக் குலைக்கும் அறிவு

அமிலம் ஊற்றுகிறது"

என்ன மாதிரியான மனநிலையில் இந்த வேருக்கு வேர் இல்லை என்ற கவிதையை அவர் எழுதி இருக்கக்கூடும் என யோசித்துப் பார்த்தேன். பிரமிப்பாக இருந்தது.

ஞானத்தை மையத்தில் வைத்து அர்த்தத்தால் சுற்றப்படும் ஆன்ம வலை இந்தத் தொகுப்பு.

இந்த வலையானது ஆன்ம விடுதலை.

சில கவிதைகளுக்கு நடுவே வரும் மேற்கோள்களும் ரசிக்கும்படியாக இருந்தன. உதாரணம்..

"வழியற்றதை

வழிகளில் தேடுகின்றோம்

போர் முறை தவறு

கட்டை கோணல் எல்லாம்

அடுப்பில் நிமிர்ந்துவிடும்

நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள்

இதுதான் நம் பாடு".

ஒரு சில கவிதைகளில் எந்த இடத்திலிருந்து ஒரு வார்த்தை உருவி எடுத்தாலும் கட்டுக்குலையாத மொழிக்கோட்டையைக் கவிஞர் கட்டியிருக்கிறார்.

கவிதைகளைப் போலவே தலைப்புகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறார் கவிஞர். கடவுளைக் கைவிடுதல், புத்தரின் வாசனை, நினைத்தூட்டும் நல்லாள், பிரசவ ஈரம், மறதியின் கடல், துறவி மடம், தோன்றிக்கரைவது, மௌன பீடம், அசலின் ஞாபகம், நிழலற்ற தூரம் இன்னும் இன்னும்.. தவறவிடக்கூடாத ஒரு தரிசனம். அவசியம் வாசிக்கப்பட வேண்டிய கவிதை நூல்.

பழனிபாரதி அண்ணனும் எஸ் சண்முகம் அவர்களும் வாசித்து கூராய்வு செய்து அணிந்துரை வழங்கி இருக்கிறார்கள்.

நூல் : நிழலற்ற தூரம்

ஆசிரியர் : கவிஞர் தஞ்சை தவசி

வகைமை : கவிதை

வெளியீடு : அமிர்தா ஆலயம்

விற்பனை உரிமை : தமிழ்வெளி

அலைபேசி : 90 9400 5600

● கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

நூலகமும் இடுகாடும்

உங்களுக்கு நூலகம் செல்லும் பழக்கமிருக்கிறதா? நான் ஒவ்வொரு முறை நூலகம் செல்லும்போதும் ஒருவித அச்சவுணர்வுடனேயே செல்கிறேன்.

எத்தனை எத்தனையோ மனிதர்கள் எப்படி எப்படியோ வாழ்ந்துகொண்டும் சாதனை செய்துகொண்டும்தானே இருக்கிறார்கள். யாரோ ஒருவருடைய சாதனை என்ன செய்கிறது நமக்கு என்று சிந்தித்தால் நாம் சாதிக்கும் வரை நம்முடனேயே இருக்கிறது. நம்மைச் சாதிக்க வைக்கிறது. அதற்குப் பின்?

சாதித்தபின் நாம் என்ன செய்கிறோம் அல்லது நமக்குள் கனன்றுகொண்டிருந்த, பிரவாகமெடுத்த சாதனை புரிய வேண்டும் என்கிற வெறி எப்படி அணைந்துபோகிறது என்று எனக்கு இன்னும் தெரியவே இல்லை. இதை நான் இப்படித்தான் புரிந்துகொள்ள முயற்சிக்கிறேன்; ஒரு பொருள் மீது நீங்கள் ஆசை கொள்கிறீர்கள்.. அதை வாங்கிவிடும் வரை அல்லது அதைப் பெற்றுவிடும் வரை என்னென்னமோ செய்கிறோம். குணம் மாறுகிறது. சூழல் மாறுகிறது. பேச்சு மாறுகிறது. எல்லாமும் மாறியபின் எப்படியோ ஒரு கட்டத்தில் அதைப் பெற்றுவிடுகிறோம் இல்லையா? பெற்ற பின்பு எங்கே போகிறது அந்தப் பொருள் மீதான ஆர்வம்.. அதைப் பெற்றுவிடவேண்டும் என்கிற வேகம்.

இந்த உலகில் உங்களைப் பிடிவாதக்காரர்களாக மாற்றும் அனைத்துமே அடங்கிவிடும் விரைவிலேயே. ஆனால் தீராப்பசியோடு ஒரு ராட்சசனாக என் கண்முன் தெரியும் ஒரேயொரு பொருள் நூலகம்தான்.

அது எப்போதும் பசி கொண்டே இருக்கிறது. வாசகன் என்ற இரையை வேட்டையாட அது ஒரு புலியைப் போலப் பொறுமையாகக் காத்திருக்கிறது. ஒற்றைக்காலில் நிற்கும் ஒரு நாரையைப் போல அது எப்போதும் மவுனத்தையே சுமந்து நிற்கிறது. எப்போது இரை அதை நோக்கி வருகிறதோ அந்த நொடியில் அது தன்னை வெளிப்படுத்தி அந்த இரையை மிகக் கச்சிதமாக நெருங்கி அதன் மூளைக்குள் சென்று அமர்ந்துவிடுகிறது.

நூலகம் ஒரு இடுகாடு போல. அங்கு பிணங்களல்ல உயிர்கள் விதைக்கப்படுகின்றன அல்லது வீசப்படுகின்றன அல்லது போட்டு வைக்கப்படுகின்றன அல்லது அடுக்கிவைக்கப்படுகின்றன.

அங்கு நூல்களெனும் பெயரில் உலவும் பேய்கள் இந்த வாசகனுக்குள் சென்று அமர்ந்த பிறகு, அவனை ஆட்டுவிக்கின்றன. அதனிடம் நுகர்ந்த அனைத்தையும் செய்து பார்க்க அல்லது பின்பற்ற அது அவனைக் கட்டாயப்படுத்துகிறது.. ஆட்டுவிக்கிறது.

அது மிகக் கொடூரமானதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. அடுத்தவருடைய வாழ்வில் செயல்பாட்டில் குறுக்கிடுவதை அல்லது நுழைவதையே பொறுக்க மாட்டாத நம்மிடத்தில் அது நம்முடைய சிந்தனையையே சரி தவறெனப் பிரித்தறிய வற்புறுத்துகிறது. நம்முடைய அனுமதி இல்லாமலேயே நம்மின் எல்லாப் பிம்பங்களிலும் அது வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

நாம் சிந்திப்பதில் அதனுடைய ஆளுமையை உணர்கிறேன். நாம் நூலகம் செல்லாவிட்டால், நாம் நூல்களைத் தழுவாவிட்டால் நாம் சரியாகத்தானே சிந்திப்போம். நம் சிந்தனையை ஆளுமை செய்ய யாரும் இருக்கமாட்டார்கள் அல்லவா? ஆனால் நீங்கள் அல்லது நான் இந்த இடுகாட்டிற்குள் நுழைந்ததால், நூலெனும் பேய்கள் நமக்குள் புகுந்துகொள்கின்றன. அது அதோடு மட்டுமில்லாமல் தத்துவம், பகுத்தறிவு, உரிமை, சமதர்மம் எனச் சகலவிதமான ஆன்மாக்களையும் ஆவிகளையும் நமக்குள் புகுத்திவிடுகிறது அல்லது ஏற்றிவிடுகிறது இல்லையா? அப்போது நாம் நாமாக எப்படி வாழ்வோம்? உடல் மறைந்தாலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார் அவருடைய படைப்புகள் வழியாக, நூல்கள் வழியாக என்று கூறிக்கொண்டிருக்கிறார்களே. இவர்களுக்குத் தெரியவில்லை அதன் விளைவு. இந்த உயிர்களெல்லாம் அவரவருக்குள் சேர்ந்து வாழுகிறது என்று. ஒரு உடல் ஒரு ஆன்மாவுக்காக மட்டுமே என்கிற நிலையில் ஒரு உடலில் ஆயிரமாயிரம் என, வாசிப்பதற்கு ஏற்ப ஆன்மாக்களை ஏற்றிக்கொண்டு திரிகிற வாசகன் என்ன பாடுபடுவான். ஒரு ஆன்மா கொண்டு வாழ்கிற வாழ்க்கையிலேயே துன்பம், துவையல், துரோகமென வருத்திக்கொண்டும் சிலர் வாழ இயலாமல் தற்கொலை செய்துகொண்டும் இருக்கையில், நூலக இடுகாட்டுச் சகவாசத்தில் ஒன்று எனத் தொடங்கி எத்தனை பேரைச் சுமந்துகொண்டிருக்கிறான் இந்த வாசகன்.

இந்தப் பேய்கள் உள்ளே குடிபுகுவதோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு நொடியும் செயல், மனம், சிந்தனை என யாவற்றிலும் மூக்கை நுழைத்துக்கொண்டு முன்னே வருகையில் அப்பப்பா நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள்.

விக்கிரமாதித்தன் போல வேதாளத்தைச் சுமப்பது என்பது கடினமென்றால் இங்கு வேதாளம் செய்யும் அத்தனையையும் சேர்த்தல்லவா சுமக்க வேண்டியிருக்கிறது.

எப்படியோ நல்ல வாசகனை வணங்குவது, அவனைத் தொந்தரவு செய்யாமல் இந்தப் பேய்களுடனே வாழவிடுவது, அவற்றுடனேயே குடும்பம் நடத்திக்கொள்ள அனுமதிப்பது என இந்தச் சமூகம் கொஞ்சம் வாசகனை வழக்கமான வாழ்க்கையைப் போலல்லாமல் வாழவிடுவது என இருந்துகொண்டால் பேய்ப்பாடுகளுடனே அவனது துன்பங்கள், சோர்வுகள், மனச்சுமைகள் குறைந்துவிடலாம். அல்லது இருந்துவிட்டுப் போய்விடலாம் இல்லையா?!.

சரி நான் விசயத்திற்கு வருகிறேன். நான் ஏன் பய உணர்வோடு செல்கிறேன். இன்னும் நிறைய பேய்கள் ஏறிக்கொண்டு விடலாம் என்பதாலா? இல்லை. இந்தப் பேய்கள் வந்தேறிக்கொள்வதை விரும்புகிறவனாக அல்லவா மாறிவிட்டேன். போதாக்குறையாக, இந்த இடுகாடுகளில் இல்லாத அல்லது கிடைக்காத அல்லது இன்னும் வந்து இணைந்துகொள்ளாத அல்லது இன்னும் வந்து சேராத பேய்களைச் சொந்தச் செலவில் அல்லவா வாங்கி வந்து ஏற்றிக்கொள்கிறேன்.

அவற்றில் நிறைய பேய்களில்லை. இன்னும் வாழ்பவைதான். குடியேறிய உடம்பிலிருந்து உரியவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவனை எழுத்தாளன் என்ற தன்னைத்தானே நகலெடுக்கும் அல்லது சதகூறிடும் (பேய்களை) வேலையாளாக மாற்றிவிட்டு அவனாலேயே அவனைப் பகுத்து வெவ்வேறு உடம்புகளுக்குள் வாழச் செய்கிறது.

இப்படி இந்தப் பேய்களின் அட்டகாசம் தாங்க ஒன்னாதது என்றாலும், இவைகளெல்லாம் நல்ல பேய்கள் என்பதாலும், இவைகள் கெட்ட பேய்களை(அறியாமை) போல, இரத்தம் குடிப்பதில்லை, உழைப்பைத் திருடுவதில்லை, அறிவைக் கொள்ளையடிப்பதில்லை, உருண்டால், உலோகம் உடல்புகுந்தால், இழந்தால், இரந்தால், விழுங்கினால், விழுங்காமலிருந்தால் என்று படுத்துவதில்லை என்பதால் விரும்பி ஏற்றிக்கொள்ள, சொந்தக் காசிலேயே அழைத்துவந்து கொள்ள அல்லது வரவழைத்துக் கொள்ளத் தோன்றுகிறது.

மனதுக்குள் உட்கார்ந்தாலும் மனதுக்கு நெருக்கமாகிவிட்டதால் அதன் சுமை ஒரு சுமையாகத் தெரியவில்லை. இது பிடித்தவர்கள்

அன்பிற்கு உரியவர்கள் என்பாரிடத்தில் அவர்பொருட்டு எதையும் வாங்கிக்கொண்டு மீண்டும் வாலாட்டும் நாய் போன்ற நிலை. ஆளுமைக்குள் அடங்கி வாழ்ந்திடினும் மகிழ்வாய் இருக்கும் நிலை.

சரி அச்சத்திற்குக் காரணம் சொல்லவில்லையே.. ஆனால் அது என் கையில் இல்லையோ என்றுதான் தோன்றுகிறது.

அலமாரிகள் அரவமற்றுத் தூங்கும் யாவும் எத்தனை காலங்களை எத்தனை மனிதர்களைப் பிரதிபலிப்பவை. எப்படி ஆயிரமாயிரமாய் நிறைந்து வழிகின்றன. அல்லது இந்த நூலக இடுகாட்டிற்குள் வந்தேறிப் படுத்துக்கொண்டன.

மலைப்புதான் மிஞ்சுகிறது. எழுத வேண்டும் எழுத வேண்டும் என எழுதத் துடித்த கரங்களின் வலிகளின் ஓலமாய் வந்தல்லவா படுத்திருக்கின்றன புத்தகங்கள்.

புகழ்பெற ஒரேவழி எழுதுவது. எழுதினால் புகழ் வரும் என்று எழுதத்துடித்த எத்தனை கரங்களின் உற்பத்திகள் அல்லது பிள்ளைகள் இங்கு உறங்குகின்றன. எழுத வேண்டும் எழுத வேண்டுமென ஏங்கி ஏங்கியே ஒருவழியாய் ஒரேயொரு நூலொடு அணைந்துபோயிருக்கிற எத்தனை பேராசைகள், கனவுகள், ஏக்கங்கள் இங்கு உறைந்துகிடக்கின்றன.

எண்ணியதெல்லாம் எழுதிவிட வேண்டுமென எழுதி ஓய்ந்த கைகளின், மனங்களின் ஓலங்கள் எத்தனை எத்தனை இங்கு ஒளிந்துகொண்டிருக்கின்றன? எழுதியும் புகழ்பெறாத நிராசைகளின் நித்திரைகள் எத்தனை எத்தனை இன்னும் துயிலெழுப்பப் பெறாமல் கிடக்கின்றன.

எழுதியும் தந்தும் இன்னும் அடங்காச் செய்திகளோடு தரவில்லையே தரவில்லையே இதை இதை என்று பட்டியல் வைத்துக்கொண்டு இடம் கிடைக்குமெனக் காத்துக்கிடப்பவை எந்த எத்தனை!

எத்தனை எத்தனை பேரன்களைச் சென்றடையாத பாட்டிகள், எத்தனை எத்தனை குழந்தைகளின் தீண்டல்களே உணராத குட்டி முயல்கள், மான்கள், இழுத்துப் பார்த்து விளையாடும் பூனையின் மீசைகள் புலிகளின் மீசைகள். எத்தனை எத்தனை சின்ரல்லாக்கள் தேவதைகள் சிந்துபாத்கள்.. இப்படி இத்தியாதி இத்தியாதி என இன்னும் கிடைப்பவை எத்தனை எத்தனை.

எழுதியவை எவனின் மனதுக்குள்ளாவது இன்னும் புகுவதற்கான வாய்ப்பே கிடைக்கவில்லையே என ஏங்கித் தவிக்கும் நிலையில் எத்தனை எத்தனை.

இன்னும் கையிலேந்திப் புரட்டிப் படித்துவிட்டுக் கொண்டாடிட நூல்கள் எத்தனை எத்தனை இருக்கும்?

யாவும் தாண்டி நான் தேர்வு செய்வேன் என்று நுழையுமொருவனை நானே தேர்வு செய்வேன் என வரிந்து கட்டிக்கொள்ளும் நூல்பேய்களைக் கண்டுதான் அச்சமே.

நாமாய்த் தேடிக்கொண்டால்கூட சாதுப்பேய்களைச் சங்கடப்படுத்தாத பேய்களை அடங்கிப்போகிற அமைதியான நமக்கேற்றபடி செவனேனு கிடக்கும் பேய்களைப் பிடித்துக்கொண்டு வந்துவிடலாம்.

ஆனால், பேய்கள் நம்மையல்லவா தேர்வு செய்கின்றன. எந்தப் பேய் நம்மை எப்படி வசீகரிக்குமோ.. பேயாகிட விருப்பம் கொண்டிருக்கும் வாசகன் எதை ஏற்றிக்கொண்டு செல்வானோ.. ஒருவேளை அவன் பேயாவதை இவை இன்னும் கொஞ்சம் நீட்டிப்போடலாம்.

இந்தப் பேய்க்கதையை விட்டொழித்தால், கல்வி கரையில என்று கூறி அறம் அளிக்கும். இல்லையேல் உருக்குழைத்து வாசித்துக்கொண்டிருக்கிறோம்; நிறைய்ய வாசிக்கிறோம் வாசிக்க வேண்டும் என்கிற வேட்கையொழித்து நம்பும் கையை நையப் புடைத்தழிக்கும்.

இன்னும் வாசிக்கவேண்டும் என்கிற வேட்கையை விரும்பி இழப்பானேன். பேயாகிவிடுவேன் என்ற நம்பிக்கையை ஒழிப்பானேன். நாமும் இப்படி அலமாரியில்தானா என ஐயப்படுவானேன்.

கிறுக்கித் தள்ளிவிட்டுப் போகலாம். ஆறுதலுக்காய்...

■

நேர்காணல்
சென்ற இதழ் தொடர்ச்சி

● வீரசோழன் க.சோ.திருமாவளவன்

தமிழில் நவீன இலக்கியப் படைப்புகளின் வடிவங்கள் மொழிபெயர்ப்புப் படைப்புகளின் தாக்கத்தினால் உருவானவை..



திறனாய்வாளர் ந.முருகேசபாண்டியனுடனான நேர்காணல்

தற்போது என்ன எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்?

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் எனது இருப்பு முடங்கியுள்ளது. கடந்த நாற்பதாண்டுகளாக இலக்கியத்தை முன்வைத்துக் கூட்டங்களுக்குப் பேசுவதற்காகச் செல்லுதல், நண்பர்களுடன் இரவுப் பேச்சுகள் இல்லாத சூழலில் சோர்வு ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் அவ்வப்போது பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுகிறேன்.

அந்திமழை இணையதளத்தில் எனது கல்லூரி அனுபவங்களையும் ஆனந்த விகடன் இணையதளத்தில் மதுரை மாநகர வெளியில் என்று சமகால மதுரை நகரைப் பற்றியும் தொடர் எழுதிட ஒப்புக்கொண்டு, எழுதிக்கொண்டிருக்கிறேன். விரைவில் அவை பிரசுரமாகும். 1971 முதல் 2020 வரை வெளியான தமிழ் நாவல்கள் குறித்த வரலாறும் விமர்சனமும் என்ற 600 பக்க அளவில் புத்தகம் எழுதும் பணியைத் தொடங்கியுள்ளேன்.

தமிழ்நாட்டிலுள்ள தனியார் நூலகங்களுக்குச் சென்று அங்குள்ள தமிழ்ப் புத்தகங்கள் பற்றியும், அந்த நூலகங்கள் பற்றியும் கையேடு தயாரிக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் ரொம்ப நாட்களாக இருக்கிறது. ம்... பார்க்கலாம்.

தமிழில் வெளிவந்திருக்கும் இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றித் தாங்கள் மேற்கொண்ட முனைவர் பட்ட ஆய்வு, நூலாக வெளிவந்துள்ளது. பொதுவாகத் தமிழில் மொழிபெயர்ப்பு நூல்கள் எந்த இடத்தைப் பெறுகின்றன?

தமிழில் சங்க இலக்கியமான புறநானூற்றில் புத்தரின் தம்ம பதம் நூலின் கருத்து பாடலாகியுள்ளது. சிலப்பதிகாரம்,

மணிமேகலை தவிர பிற காப்பியங்கள் எல்லாம் தழுவல்கள்தான். தமிழுக்கும் மொழிபெயர்ப்புப் படைப்புகளுக்குமான உறவு பல நூற்றாண்டுகளாகத் தொடர்கிறது. தமிழில் நவீன இலக்கியப் படைப்புகளின் வடிவங்கள் மொழிபெயர்ப்புப் படைப்புகளின் தாக்கத்தினால் உருவானவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்கூட தமிழில் பாண்டித்தியம் பெற்றிருந்த புலவர்களுக்கு உரைநடையில் எழுதுவது சாத்தியமற்றிருந்தது. தமிழில் உரைநடை வடிவத்தை அறிமுகப்படுத்தியதில் மொழிபெயர்ப்பு நூல்களின் பங்கு மகத்தானது. எழுபதுகளில்கூட நவீன இலக்கியத்தின் போக்குகளைத் தீர்மானிப்பதில் மொழிபெயர்ப்பு நூல்கள் கணிசமான அளவில் செல்வாக்குச் செலுத்தின.

எண்பதுகள் தொடங்கி இன்றுவரை தமிழ் இலக்கியச் சூழலில் இயங்கிவருபவர் நீங்கள். தொழில்நுட்பப் புரட்சிக்குப் பின்பான காலகட்டத்தை, தமிழ் இலக்கியத்தின் மீதான வலைத்தளங்கள், பேஸ்புக்கின் தாக்கத்தை, எப்படிப் பார்க்கிறீர்கள்?

எல்லாக் காலகட்டத்திலும் இலக்கியப் படைப்புகள் வாசிப்பின்மூலம் மனதுக்குள் ஏற்படுத்துகிற அழுத்தமான மாற்றங்கள் முக்கியமானவை. அறிவியல் தொழில்நுட்பம் காரணமாகப் புறத்தில் கண்டுபிடிப்புகள் பெருகுகின்றன. ஆனால் மனித வாழ்க்கை? பெரிய மாற்றம் இல்லை.

1800 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றதாகக் கருதப்படுகிற கண்ணகி கதை இன்றைக்கு ஏன் மீண்டும் வாசிக்கப்படுகிறது? முன்னர் ஓலைச்சுவடி, பின்னர் காகிதம் அப்புறம் அச்சு ஊடகம். எழுதுவதில் மாற்றம் வந்தாலும் மனிதர்களின் அடிப்படை வாழ்க்கையில் சின்ன அளவில்தான் மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. பசியும் பாலுணர்வும் எல்லோரின் மனதிலும் உடம்பிலும் இயற்கையாகப் பொதிந்திருக்கின்றன.

வன்மம், வெறுப்பு, விரோதம், கசப்பு, அன்பு, நட்பு, காதல் எல்லாம் கலந்ததுதான் மனித வாழ்க்கை. எல்லாம் கதைகளாகச் சொல்லப்படுகிற காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்கூட வாய்மொழி மரபில் கதைகள் சொல்லப்பட்டன; பாடல்கள் பாடப்பட்டன. கர்ணபரம்பரைக் கதைகள், செவிவழிக் கதைகள், நாட்டார் பாடல்கள் இன்று அச்சு ஊடகத்தில் பதிவாகியுள்ளன. என்றாலும் அவற்றின் சாரம் மாறவில்லை. மாறிவரும் சமூகச் சூழலுக்கேற்ப கதைசொல்லல் மாறுகிறது. அவ்வளவுதான்.

சிறுகதைகள், தொடர்கதைகளுக்கு முக்கியத்துவம் தந்த குமுதம், ஆனந்தவிகடன் போன்ற வெகுஜனப் பத்திரிகைகள் இன்று துணுக்குகள், ஒரு பக்கக் கதைகள், சினிமா செய்திகளை வெளியிடுவது ஏன் என்று யோசிக்க வேண்டியுள்ளது. நீங்கள் சொல்கிற மின்னணு ஊடகம்மூலம் வெளியாகிற சமூக வலைத்தளங்கள், முகநூல்கள் ஒருவகையில் தமிழுக்கு அவசியமானவை.

தமிழ்மொழி சங்க காலத்திற்குப் பின்னர் அரசியல் மேலாதிக்கம் காரணமாகச் சமஸ்கிருதம் தொடங்கி, உருது, தெலுங்கு, மராட்டி, ஆங்கிலம் போன்ற மொழிகளுடன் போராடித்தான் தன்னுடைய இடத்தைத் தக்க வைத்துள்ளது. இன்றைய சூழலிலும்

தமிழ் தாக்குப் பிடிக்குமா? என்ற கேள்வி தோன்றுகிறது. இந்நிலையில் சமூக வலைத்தளம் தமிழர் வாழ்க்கையில் அவசியமாகிவிட்டது. எல்.கே.ஜி. வகுப்பில் இருந்து ஆங்கிலவழியில் கல்வி பயிலும் தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் இலக்கியத்தை அறிமுகம் செய்திட, வலைத்தளங்களை விட்டால், வேறு வழியில்லை.

ஆங்கிலத்தில் வெளியாகிற பல்ப் நாவல்களை வாசித்துக்கொண்டிருந்த இளைய தலைமுறையினர், தகவல் தொழில்நுட்பத் துறையினர் தமிழிலக்கியம் மீது ஆர்வம் காட்டுவது தற்செயலானது அல்ல. இலங்கை, மொரிஷியஸ், மலேசியா, சிங்கப்பூர், கனடா என உலகமெங்கும் தமிழர்கள் பரவியிருந்தாலும், சர்வதேச மொழியாகத் தமிழ் மொழி அறியப்பட்டாலும், யதார்த்தத்தில் தமிழின் வேர்கள் பலவீனமாக இருக்கின்றன.

இந்தச் சூழலில், வலைத்தளங்கள் விழுதுகளாகத் தமிழைத் தாங்கிப் பிடிக்கின்றன. 2001ஆம் ஆண்டில்கூட நூலகங்களுக்குப் போய்ச் சிரமப்பட்டுத் தேடிக் கண்டறிந்த தமிழ்ப் படைப்புகள், இணையத்தில் எளிதாகக் கிடைப்பது அருமையான விஷயம் அல்லவா?

தமிழிலக்கியப் போக்குகள் உலக இலக்கியத்துடன் இயைபுடையதாக மாறிக்கொண்டிருக்கின்றன. இன்னொருபுறம் சாதி, மதம் எனப் பிளவுண்டிருந்த தமிழ்நாட்டு இளைஞர்கள் இப்பொழுதுதான் தங்களைத் தமிழர்கள் என உணர்ந்துள்ளனர்.

2017இல் சென்னை மெரினாவிலும் மதுரை தமுக்கத்திலும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக இளைஞர்கள் நடத்திய போராட்டம் தமிழர் வரலாற்றில் முக்கியமானது. அந்தப் போராட்டத்தை ஒருங்கிணைத்தவை சமூக வலைத்தளங்கள்.

கையில் ஸ்மார்ட் போன் மூலம் கேளிக்கை, வம்பில் மூழ்கி, ஆன்-லைனில் பொருட்களை வாங்கியவாறு, அமெரிக்கா செல்கிற கனவுடன் சமூகப் பிரச்சினைகள் குறித்து அக்கறை இல்லாமல் திரிந்த ஐ.டி.இளைஞர்கள் இன்று தமிழ் அடையாளம் பற்றிப் பேசுவதுடன் தெருவில் இறங்கிப் போராடியது பெரிய மாற்றம் இல்லையா? நவீனத் தமிழ் இலக்கியம், பண்பாடு மாற்றத்தில் சமூக வலைத்தளங்களின் பங்கு காத்திரமானது. டிஜிட்டல் ஊடகம் ஆளுகை செலுத்துகிற இன்றைய சூழலில், அதற்குரிய பலமும் பலவீனங்களும் இருப்பது தவிர்க்க இயலாதது.

வலைத்தளங்கள் மூலம் வெளியாகியுள்ள எழுத்துக்கள், தமிழிலக்கியப் போக்கில் ஏற்படுத்துகிற மாற்றங்கள் என்னவென்று கருதுகிறீர்கள்?

நவீனத் தமிழிலக்கியப் படைப்புகளை மின்னணு ஊடகத்திற்கு முன்னர், பின்னர் என்று பிரிக்கிற நிலை ஏற்பட்டுள்ளது. இன்று யார் வேண்டுமானாலும் படைப்பாளியாக மாறுவதற்கான தளமாக வலைத்தளம் விளங்குகிறது. சில படைப்பாளிகள் இணையத்தில் தங்களுடைய படைப்புக்களைத் தொடர்ந்து பதிவேற்றுகின்றனர். இத்தகைய இணையப் படைப்பாளர்கள் எதிர்காலத்தில் ஆளுமையுடன் வெளிப்படுவார்கள். இன்னும் சிலர் பத்திரிகைகளில் பிரசுரமாகாத தங்களுடைய படைப்புகளை இணையத்தில் பதிவேற்றுகின்றனர். அந்தப் படைப்புகள் பற்றிய விமர்சனங்களை உடனடியாக வாசிக்க முடிகிறது அருமையான விஷயம் இல்லையா?

சிலர் தினமும் ஏதாவது ஒரு நாவல் அல்லது சிறுகதைத் தொகுதி அல்லது கவிதைத் தொகுதி பற்றிய தங்களுடைய கருத்துகளை முகநூலில் பதிவேற்றுகின்றனர். சிலர் யூ டியூப்பில் தங்களுக்குப் பிடித்த புத்தகங்கள் பற்றிப் பேசுகிற வீடியோக்களைத் தினமும் வெளியிடுகின்றனர். இவைபோன்ற பேச்சுகள், ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் புத்தகங்களை அறிமுகம் செய்கின்றன.

அச்சு ஊடகங்களின் வாசகர்களையும் சமூக வலைத்தளங்களின் வாசகர்களையும் ஒரே டிரம்மில் போட்டுக் குலுக்க முடியாது. டிஜிட்டல் வாசகத்தளம் பெரிதும் கேளிக்கையை மையமிட்டது. இருந்தாலும் காலப்போக்கில் தொடர்ச்சியான வாசிப்பின் வழியாகச் சிறந்த படைப்புகளை டிஜிட்டல் வாசகர்களால் கண்டறிந்திட முடியும்.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் எண்பதுகளில்கூட இலக்கியம் என்பது சீரியஸானது என்ற கருத்து நிலவியது. எழுத்து பத்திரிகை மரபில் வெளியான அஃக், கசடதபற, நடை, மீட்சி, பிரக்ஞை போன்ற சிறுபத்திரிகை உலகில் இளம் படைப்பாளிகள் நுழைவது சிரமம். ஒருவிதமான இலக்கியக் கண்காணிப்பு அரசியல் நிலவியது. இன்னும் சொன்னால் எழுபதுகள் காலகட்டத்தில் கொண்டாடப்பட்ட பெரும்பாலான இலக்கிய ஆளுமைகள் பார்ப்பனர், பிள்ளைமார் போன்ற உயர்சாதியினர்தான்.

எண்பதுகளில் தலித் இலக்கியம் அறிமுகமானபோது தலித் பிரச்சினையைத் தலித்தால்தான் படைப்பாக்க முடியும் என்ற குரல் ஒலித்தபோது இலக்கியத்தில் சாதியமா? என்று கொந்தளித்த மூத்த படைப்பாளிகளை எனக்குத் தெரியும். 90களில் `அவன் தலித்துத்தான். ஆனால் பரவாயில்லாமல் கவிதை எழுதறான்பா` என்று சீனியர் கவிஞர் ஒருத்தர், என்னிடம் சொன்னார்.

அதுபோலத்தான் பெண்கள் உடலை முன்வைத்துக் கவிதைகள் எழுதியபோது பதறினார்கள். பெண்ணியப் புரிதலுடன் எழுதிய பெண் கவிஞர்களை ஆண்டாளுக்கு அப்புறம் தமிழில் கவிதை இல்லை என்று அடாவடியாக மறுத்தனர். இந்தப் போக்குகள் கருவிலே திருவுடையான் என்று உயர்சாதியினர் காலங்காலமாகக் கட்டமைத்த புனைவின் தொடர்ச்சிதான். எல்லோரும் கதைசொல்லிகள், விமர்சகர்கள் என்று கட்டுடைத்தலைப் பின் நவீனத்துவம் அறிமுகப்படுத்தி இருந்தாலும் டிஜிட்டல் ஊடகம் வரும் வரை எழுதுவதற்கான களம் இல்லாமல் இருந்தது.

இன்று ஸ்மார்ட் போன் வைத்திருக்கிற யார் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் எதைப் பற்றி வேண்டுமானாலும் எழுதிப் பதிவேற்றிட முடிகிறது. அந்தப் படைப்புகள் இலக்கியத் தரத்துடன் இருக்கின்றனவா? என்ற கேள்வி தோன்றுகிறது. ஆற்றில் புதுவெள்ளம் பாய்ந்தோடி வருவது போலத்தான் இன்று சமூக வலைத்தளங்களில் பெருகியுள்ள படைப்புகள். எல்லாம் கலந்த ஆற்று நீர், காலப்போக்கில் தெளிவடைவது போல இன்றைக்குக் குப்பையாக எழுதுகிறவர்கள், அனுபவரீதியில் இலக்கியத்தைப் புரிந்துகொண்டு, எதிர்காலத்தில் சிறந்த படைப்புகளை எழுதிட வாய்ப்புண்டு.

அச்சு ஊடகம் பரவலான 1930களில் ஆரணி குப்புசாமி முதலியார், வை.மு.கோதைநாயகி அம்மாள், வடுவூர் துரைசாமி ஐயங்கார்

போன்றவர்கள் எழுதிக் குவித்த நாவல்கள், பரவலாக வாசிக்கப்பட்டாலும் இன்று அவற்றை யாரும் பொருட்படுத்துவது இல்லை. அந்தக் காலகட்ட இலக்கியச் சூழல் டிஜிட்டல் ஊடகத்தில் வெளியாகிற படைப்புகளுக்கும் பொருந்துகிறது.

கலைஞர் பொற்கிழி விருது உங்களுக்கும் உங்களது நண்பர் ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆர். பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் வழங்கப்பட்டு உள்ளது. வாழ்த்துக்கள். உங்கள் இருவரின் தோழமை பற்றியும், இலக்கியச் செயல்பாடுகள் பற்றியும் பகிருங்கள்.

நானும் நண்பன் ஆர்.பாலகிருஷ்ணனும் 1978-80ஆம் ஆண்டுகளில் மதுரைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. தமிழ் படித்தோம். வகுப்பறைத் தோழன். ஒருவரையொருவர் மாமா என்று கூப்பிட்டுக்கொள்வோம். இப்பவும் மாமாதான்.

அன்றைய காலகட்டத்தில் இருவரும் இலக்கியம் தொடர்பான புத்தகங்களை வாசித்துவிட்டு, கொஞ்சம் தெனாவெட்டுடன் வகுப்பில் பேராசிரியர்களுடன் விவாதித்துக்கொண்டிருந்தோம். எஸ். வையாபுரிப் பிள்ளையின் இலக்கிய அபிப்ராயங்களுக்குச் சார்பாகப் பேசியதால்,

சக மாணவர்கள் எங்களைத் தமிழ்த் துரோகி என்றனர்.

பேச்சுப் போட்டிகளில் பேசி, நிறையப் பரிசுகள் வாங்கி இருந்த பாலகிருஷ்ணனை நவீன இலக்கியப் படைப்புகளின் பக்கம் திருப்பினேன். தமிழ்த்துறையில் இருவரும் சேர்ந்து செய்த செயல்களை இப்பொழுது நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. அளவற்ற நினைவாற்றல் காரணமாகப் பாலகிருஷ்ணன் பல்கலைக்கழகத் தேர்வுகளில் முதலிடம் பெற்றார். தமிழில் இன்னும் நிறைய எழுதுவதற்கான ஆகிருதி மாமாவிடம் உண்டு. ஒரே வகுப்பில் பயின்ற இருவர் ஒரே மேடையில் பப்பாசி வழங்கிய கலைஞர் பொற்கிழி விருது பெற்றது ஒருவகையில் சாதனைதான்.

உங்களுடைய நாற்பதாண்டு கால இலக்கிய வாழ்க்கையில் எதை முக்கியம் என்று கருதுகிறீர்கள்?

நட்பு. இலக்கியத்தை முன்வைத்து அறிமுகமான நண்பர்களை முக்கியமானவர்களாகக் கருதுகிறேன். சொந்த வாழ்க்கையிலும் சரி, கல்லூரிப் பணியிலும் சரி இலக்கிய நண்பர்களால் எனக்கு ஏற்பட்ட ஆதாயங்கள் ஏராளம். தமிழ்நாடு மட்டுமின்றி உலகமெங்கும் வாழ்கிற நண்பர்களின் தோழமை எனக்குக் கிடைத்த பேறு.

இலக்கியப் படைப்புகள் சார்ந்து உருவாகிற அபிப்ராயங்கள்தான் நட்பை வலுப்படுத்துகின்றன. இதனால்தான் நான்கைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் சந்திக்கிற நண்பருடன் நேற்றிரவில் சந்தித்து போன்று இருவராலும் பேச முடிகிறது. உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல் என்ற வள்ளுவரின் வாக்கும் நண்பர்களுடன் இலக்கிய சல்லாபம் என்ற உ.வே. சா.வின் எழுத்தும் நிஜமானவை.

அசலான நண்பர்களுடன் பேசிக் கொண்டாட்டத்துடன் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இணையாகுமா முகநூல் நட்பு? தெரியவில்லை. ■

● கரிகாலன்

தேநீர் சாலை

பூமி திருத்தி உண்!

~

சென்னையில் பிள்ளைகள் தங்கியிருப்பது வாடகை வீடுதான். அதன் பால்கனியில் பசுமை வளர்க்கிறார் மூத்த மகள் சிந்து.

குருதியும் நிணமும் நிரம்பிய தினப்பாடுகளிலிருந்து விலகிச் சிறிது சாந்தமடைய அவள் துளசி, கீழாநெல்லி, ஆடுதொடா, சித்தரத்தை நிழலைச் சரணடைகிறாள்.

இந்தத் தொட்டிச் செடிகளில் நிரப்ப மண் தேவைப்பட்டது. எந்த மண் புழுதி எங்கள் வாழ்வில் விலகாதிருந்ததோ.. எந்த மண்கவுச்சியில் முகம் சுளித்து நகரத்து மாந்தர் எங்களை விட்டு விலகிச் சென்றார்களோ.. அந்த மண். பிடியளவு கிடைக்கவில்லை தலைநகரில்.

மண் இல்லாதவரைத்தான் அகதிகள் என்கிறார்கள். மால்களில் நுழைந்து பிளாஸ்டிக், எலக்ட்ரானிக் குப்பைகள் அள்ளி வருபவர்களைப் பார்த்திருக்கிறேன்.

ஒருநாள் விடியற்காலை. மருங்கூருக்குச் சென்றேன்.

செம்பிடுப்பில் ஒரு கை. மோர்சார் கொல்லையில் ஒரு கை. கத்தரி மேட்டில் ஒரு கை. நோட்டன்காரன் வயலில் ஒரு கை. கருப்பேரியில் ஒரு கை. கூழையர் கொல்லையில் ஒரு கை. அம்மன் கோவில் மேட்டில் ஒரு கை. எங்கள் வயக்காட்டு மண்ணை ஒரு சணல் சாக்கில் நிரப்பினேன்.

அதை எங்கள் பழைய வாகனமான டாடா விஸ்டாவின் டிக்கியில் ஏற்றினேன். மணிமுத்தாறின் வெள்ளாறின் ஊற்றால் ஈரமான மண்.

மறைந்த எங்கள் குழந்தைவேலு தாத்தாவின் வேர்வைக்கவுச்சி வீசும் மண். கோவிந்தராசு, குப்புசாமி, தனபால் , பூராசாமி, ராசலிங்கம், குமாரசாமி, சின்னச்சாமி பெரியப்பாக்களும் சித்தப்பாக்களும் கீழ்ப்பாய்ச்சி கட்டி ஏருழுத மண்.

இதன் வரப்புகளில் கடவுள் போட்ட விதைகளில் செழித்த வேம்பு, வன்னி, வாகை வளர்த்த அணி நிழலில், எம் மூதாதைகள் காதல் வளர்த்த மண்.

எப்படி பிள்ளைகளுக்கு டால்ஸ்டாயும், தாஸ்தாயேவ்ஸ்கியும் ஆசைஆசையாக வாங்கிக் கொடுத்தேனோ அப்படி எங்கள் மண்ணை, ஒரு பைத்தியம்போல் சென்னைக்குச் சுமந்து சென்றேன்.

அந்த மண்ணில்தான் தன் தாவரங்களை உயிரெழுப்பினாள் மருத்துவ உழத்தி சிந்து.

எங்கள் தெருக்களில், எங்கள் பெரிய பாட்டனுக்கும் சின்னப் பாட்டனுக்கும் சண்டை நடந்ததென்றால் அது இந்த உள்ளங்கை மண்ணுக்காகத்தான்.

எங்களுடைய பூசையறையில் இருக்கும் விபூதி என்னவென்று நினைக்கிறீர்கள்? அது எங்கள் நடுதெய்வம் வீரன் எழுந்த அம்மன்கோவில் மேட்டு வயற்காட்டு மண்தான்.

நேற்று பழமலைநாதர் கோவிலில் இருந்து ஜெய்சாய் கிருஷ்ணா தியேட்டருக்குச் சென்றோம். கடைசி விவசாயி.

எங்கள் தமிழ் சினிமா தன் இத்துப்போன துப்பாக்கிகளைத் தூக்கிப்போட்டுவிட்டு, முதன்முறையாக எங்கள் மச்சுகளில் நாங்கள் சாத்தியிருந்த கலப்பைகளைக் காட்டியிருக்கிறது.

எங்கள் தமிழ் சினிமா முதன்முறையாகக் கார்களையும் விமானங்களையும் தவிர்த்து, கோழிகளையும் ஆடுகளையும் மாடுகளையும் அதன் காதலையும் காட்டியிருக்கிறது.

எங்கள் தமிழ் சினிமா முதன்முறையாக இளம் நாயகர்கள் இல்லாமல், எழுபதைக் கடந்த கிழவரான மாயாண்டியை நாயகனாகக் காட்டியிருக்கிறது என்று சொல்லமாட்டேன். அது எழுபது வயதுக் கிழவர்களான ரஜினியை, கமலை நாயகர்களாகக் காட்டிக்கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும் அவர்களின் வயோதிக சருமங்களுக்குக் கிராஃபிக்ஸில் வனப்பு பூசியது. வழுக்கைத் தலைகளில் விக்கை ஒட்டி, போலி இளமையைக் கொண்டு வந்தது. தங்கள் பேத்தி வயதொத்த பெண்களோடு வெட்கமில்லாமல் அவர்கள் காதல் செய்ததை, கூச்சமே இல்லாமல் என் தமிழர் கலையென மயங்கிக் களித்தனர்.

இது எனக்குச் சற்று தூரத்தில் இருக்கும் உசிலம்பட்டி வாழ்வு. அந்த ஊர் கலப்பை, அந்த ஊர் உழவு, அந்த ஊர் நீர்ப்பாசன முறை எங்கள் ஊர் உழவு நாகரீகத்திலிருந்து சற்றே வேறுபட்டதுதான்.

நிலத்தின் நிறத்திலும் குணத்தாலும் தட்ப வெப்பத்தாலும் விளைந்த சிறு சிறு மாற்றங்கள் அவை. மற்றபடி மாயாண்டிக் கிழவருக்கும் எங்கள் பாட்டன்களுக்கும் பூட்டன்களுக்கும் பெரிய வித்தியாசமில்லை.

குலதெய்வம் பூசைக்கு ஒரு மரக்கால் நெல் தருவதைத் தவிர லட்சியமறியாத தலைக்கட்டுகள் அவர்கள். கோர்ட், போலீஸ் ஸ்டேஷன் படியேறாதவர்கள். அதிகாரத்தின் மொழியறியாதவர்கள்.

இவர்களை எப்படி கையாள்வது? தெரியாமல் அதிகாரம் கைபிசைந்து நின்றது.

'மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்பானே, எங்கள் மூத்த விவசாயக்குடி வள்ளுவன்! அப்படி அதிகாரத்தைத் தங்களுக்குப் பின்னால் வரவழைத்தவர்கள்.

கடைசி விவசாயியின் கதையை நான் இங்கு சொல்லப்போவதில்லை. ஏனென்றால் கிராமத்து மனிதர் ஒவ்வொருவரின் கதையிது.

கருவேல மரமும், வெய்யிலும், மயிலும், முருகனும் நிறைந்த கிராமத்து வாழ்வில், நானும் நீங்களும் நம் அஞ்சலைகளிடம் காதலைச் சொன்னபோது, 'நீ சரியான போக்கிரிப்பயலாமே! எங்க அப்பத்தா

சொல்லிச்சி. இதெல்லாம் சரிப்படாது!' என்று காதலைப் போலியாகக் கலைத்தெழுதிய அஞ்சலைகளின் கதையிது.

மொத்தத்தில் நம் பாட்டனின் பூட்டனின் கதை இது. மூத்த மகள் சிந்துவின் பிஞ்சுக்கரத்தால் விளைநெல் எடுத்துத்தரச் சொல்லி எங்கள் செம்பிடுப்பு நாற்றங்காலில் விதையள்ளி விட்டாரே எந்தை. அவரொத்த உழுகுடித் தந்தைகளின் கதை இது.

இது என் தமிழ்க்குடிகளின் கதை. சாதிகளாகப் பிளவுண்ட அவர்கள், தங்கள் திணை நிலங்களில் குடிகளாக இணைந்து வாழ்ந்த காலத்தின் கதை இது.

தம் நடுகல் உறவுகளுக்காக ஒரு குடி மண்குதிரை செய்தது. ஒரு குடி பறையடித்தது. ஒரு குடி தெய்வங்களுக்கு உடுத்த ஆடை கொண்டு வந்தது. மருதக்குடி மரக்காலில் நெல் கொண்டு வந்தது.

இந்திய விவசாயிகளின் எழுச்சிமிகு போராட்டத்துக்குத் தமிழ் விவசாயிகள் நியாயம் செய்யவில்லையே? வருந்தினேன். இதோ, எங்கள் மாயாண்டிக் கிழவர் அந்தக் கவலையைப் போக்கினார்.

உழுகுடிகள் அதிகம் பேசியவர்களில்லை. அவர்கள் இந்த மண்ணைப் பேச வைத்தவர்கள். அவர்கள் மொழி கம்பு, வரகு, நெல். அவர்களைப் பேசுகிறது கடைசி விவசாயி. எங்கள் மாயாண்டிக் கிழவர் முன்னால் போலீஸ், கோர்ட், அனைத்தும் குற்ற உணர்வோடு நிற்கின்றன.

இன்று எம் உழவரிடம் விதை நெல் இல்லை. அவர்தம் ஆறு இல்லை. மலை இல்லை. இவற்றையெல்லாம் விற்றவர்கள், வாங்கியவர்களுக்கு நெஞ்சில் ஈரமில்லை. இவர்கள் குற்ற உணர்வடையும் காலமும் வரும்.

நம் மனக்காயத்துக்கு மருந்து தந்திருக்கிறார் மணிகண்டன்.

கடைசியாக தம்மிடம் உள்ளங்கை மண் இருக்கும்வரை மாயாண்டி போன்ற மூடக்கிழவர்கள் பூமி திருத்தி உண்பார்கள். உண்ணக் கொடுப்பார்கள்!

●●

ஸ்பெஷல் ஹீரோ!

~

நேற்று வகுப்பறையில் நுழைந்ததும் ஒரு பிரச்சனை. முதல் நாள் மாலை. எனது வகுப்பு மாணவன், ஆறாம் வகுப்பு சிறுமியைச் சிறு கல்லால் அடித்திருக்கிறான். நெற்றி வீங்கிவிட்டது. அந்தப் மாணவியிடம் அவனை மன்னிப்பு கேட்கச் சொன்னேன். சிறிது தயங்கி, பின் கேட்டான்.

கோபம் ஒரு இயல்பூக்கம். பதின் பருவத்து மாணவர்கள் பெரும்பாலோரிடம் *bullying* குணம் மிகுந்து காணப்படுகிறது. இது சமூகம் மற்றும் உளவியல் சார்ந்த விசயம்.

இந்த முரட்டுத்தனத்தை வீரமாக மடைமாற்றம் செய்ய வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலேயே விளையாட்டு மைதானம் இல்லாத சூழல். நடுநிலைப் பள்ளியில் எதிர்பார்க்க முடியாது. துருதுருவென்று இருக்கும் வயது. அரை மணி நேரமாவது கைப்பந்தை, கால்பந்தை, கூடைப்பந்தை உதைக்கும் வாய்ப்பைப் பள்ளி உருவாக்க வேண்டும். இல்லையேல் பூஞ்சையான சக மாணவர்களை ஃபுட்பாலாக, வாலிபாலாக மாற்றிவிடுகிறார்கள்.

எதிர்பாரா வகையில் அம்மாணவனின் அப்பா, சிறிது நேரத்தில் வந்தார். அவர் கையில் ஒரு சோடி ரப்பர் செருப்பு. அனுமதி கேட்டு மகனிடம் கொடுத்தார்.

மெல்ல, அவரிடம் நேற்றைய அவனது செயல் குறித்து கூறினான். அதேவேளை அவன் எப்போதும் இதுபோல் நடப்பவன் அல்லன்! என்பதையும் கூறினேன்.

‘பெண் பிள்ளையிடம் இவனுக்கு என்ன வேலை? தயங்காதீங்க. நல்லா அடிங்க சார்!’ என்றார். அவனைக் கண்டித்தார்.

அந்த மாணவியை அழைத்து வரச் சொன்னார். அச்சிறுமியிடம் கையெடுத்துக் கும்பிட்டு மன்னிப்பு கேட்டார்.

அந்த மாணவன் கண்களில் கண்ணீர். ‘இனி இப்படி செய்யமாட்டேம்பா!’ தேம்பித் தேம்பி அழுதான்.

அந்தத் தந்தை அவன் அருகே அமர்ந்தார். கட்டியிருந்த நாலு முழ வேட்டியை எடுத்து அவன் கண்களைத் துடைத்தார். தலையை விரல்களால் கோதித் திருத்திவிட்டார். “நல்ல பையன் சார். தெரியாம செஞ்சிட்டான். மன்னிச்சிக்கங்க சார்!” உள்ளுக்குள் நான் அவிழ்ந்திருந்தேன்.

“துள்ளித் திரியும் பருவத்திலே

என் துடுக்கடக்கி

பள்ளிக்கு அனுப்பிலனே

என் தந்தையாகிய பாதகனே!”

எனப் புலம்பும் நிலையை எனக்கு உருவாக்காதவர் எந்தை.

என் தவறுகளுக்காக வார்டன் தாமஸிடம், என் தந்தை இப்படித்தான் ஒருநாள் மன்னிப்பு கேட்டார். ‘நீங்க ஒரு பிஜி கிராஜுவேட். ஹெச்.எம். நீங்கபோயி என்கிட்ட மன்னிப்பு கேட்கலாமா?’ எந்தையின் கையைப் பற்றிக்கொண்டார் தாமஸ் சார்.

அன்று நானும் இப்படித்தான். இரவெல்லாம் இவனைப்போல் அழுதேன்.

“துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குப் புரியவையுங்கள்!” ஆப்ரகாம் லிங்கன் தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுவார்.

தவறுக்காகக் கண்ணீர் சிந்தத் தெரிந்தவர்கள் என்றாவது ஒருநாள் திருந்துவார்கள்.

அந்த மாணவனின் அப்பா விடைபெற்றார். வகுப்பின் மத்தியில் அழுகையைக் கட்டுப்படுத்த சிரமப்பட்டேன். பாத்ரூம் சென்று முகம் கழுவி வந்தேன்.

“When I was a baby,

you would hold me in your arms.

I felt the love and tenderness,

keeping me safe from harm”

அப்பா பற்றி *Christina M. Kerschen* எழுதிய *Special Hero* ஆங்கிலப் பாடலை நடத்தத் தொடங்கினேன்.

There is something special

about a father’s love.

Seems it was sent to me

from someplace up above.

பாடலை நடத்தி முடித்து வெளியே வந்தேன். வானத்தை அண்ணாந்து பார்த்தேன். கதிர், எந்தையின் வெம்மையை என் மீது பொழிந்துகொண்டிருந்தது! ■

பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

நீ கோபத்தில்
இருக்கிறாயா
குழப்பத்தில்
இருக்கிறாயா
என்றபடியே
வெளியே வந்தான்
அவன்

முன்பெல்லாம்
மொழியைக் கேட்டவுடன்
முகம் மாறியது
இப்போதெல்லாம்
பெயரைக் கேட்டாலே
பலருக்கு
நெற்றி சுருங்குகிறது
அதனால்
ரௌத்திரம்
பழகிக்கொண்டிருக்கிறேன்
என்றேன்.

பாகுபாடு பார்ப்பது
மீண்டும் பரவலாகிவிட்டதைக் கண்டு
பயப்படுகிறாயா? இல்லையா? என்றான்

மொழியின் வழியே
எல்லோரும் ஓரினம்
எல்லோரும் சமம் இல்லையா? என்றேன்

மொழியே இல்லாமல் பூமிக்கு வந்த உயிரி
மனிதன்
என்பதை அறிவாயா?

எனினும்
உயிர்களின் முன்னிலையில் முதன்மையானவன்
மனிதன் என்றீர்கள்
மொழியும் மனிதமும் இணைந்தது

மனிதர்களின் முன்னிலையில் முதன்மையானது
மதம் என்றீர்கள்
மொழியும் மனிதமும் பிரிந்தது என்றான்

உன் கூற்று உண்மை...
மனிதனுக்குள் மனிதனையே பிரித்துவிட்டு
கடவுளுக்கு வெவ்வேறு பெயர் வைப்பது
வேடிக்கைதான்
என ரௌத்திரம் பழகிக்கொள்ளவா என்றேன்

இனி
எவன் எதை
சுருக்கிக்கொண்டாலும்
உரக்க உன் பெயரைச் சொல்...
அவனிடம் இதை சேர்த்தே சொல்...
பெயரே இல்லாமல்
குழந்தை எனப் பிறந்து..
கடைசியில்
வைத்த பெயரைக்கூட அழித்து
பிணம் என மரிப்பதே
மனித வாழ்வு
என்று சொல்லி மறைந்தான்.

– அவன் இன்னும் சொல்வான் ■

சு. சிவனேஸ்வரன்,
இளங்கலை தமிழ் இலக்கியம்,
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

சீரழிந்த சமுதாயத்தின் சாட்சி

வாஸந்தி எழுதிய "ஆகாசவீடுகள்" என்னும் புதினம் மிகச்சிறந்த பாத்திரப்படைப்புகளையும் ஆழமான கருத்துக்களையும் கொண்டது.

ஒரு ஆண்மகனானவன் தன் குடும்பத்தைப் பேணிக் காக்க வேண்டும் என்பது "கடமை". ஆனால் வாஸந்தி அவர்களுடைய "ஆகாச வீடுகள்" புதினத்தில் ஆண்மகன்கள் எல்லோரும் தமது கடமையிலிருந்து நீங்கிக் குடியும் குத்தாட்டமும் சூதாட்டமும் எனக் "குரூர" மனம் படைத்தவர்களாக இருக்கின்றனர்.



இப்புதினத்தின் அக்கரஹாரக் களத்தில் ஆண்கள் ஒழுக்கம் இல்லாதவர்களாகவும், தனது கடமைகளைச் செய்யாதவர்களாகவும், தனது மனைவியின் பேச்சுக்களைக் கேட்காதவர்களாகவும், அவர்களை மதிக்காதவர்களாகவும் விளங்குகின்றனர்.

இக்கதையில் வரும் "சபேசன்" என்பவர் ஒரு குரூர மனம் படைத்தவராக விளங்குகின்றார். தன்னுடைய மனைவியிடம் கூட அன்பாகப் பேசுவதில்லை. அவளை மகிழ்ச்சியாக வைத்திருக்கவில்லை. தன்னுடைய மகன் ராஜுவிடம் கூட அன்பாக நடந்துகொள்ளவில்லை. எப்போதும் கோபம் கொண்டவராகவும், சுளித்த முகத்தைக் காட்டுபவராகவும் விளங்குகின்றார். சபேசனுடைய குரூர மனத்தின் உச்ச காட்சியாகத் தன் வீட்டுப் பக்கத்தில் இருக்கும் சங்கரலிங்க ஐயருடைய வறுமையின் நிலையைக் கைக்கொண்டு அவருடைய நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கி... அவர் திரும்பக் கேட்கும்பொழுது கொடுக்கவும் மறுத்துவிடுகிறார்.

ஒரு ஆசிரியர் என்பவன் சமூகத்திற்கு நல்ல ஒரு சீர்திருத்தவாதியாக இருக்கவேண்டும். மாணவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். ஆனால் இக்கதையில் வரும் பாலு வாத்தியார் என்பவர் அதற்கு மாறாகத்தான் விளங்குகிறார். எந்நேரமும் குடியும், கூட்டமுமாகவே இருப்பதைத் தன் தொழிலாகக் கொண்டவர். இதனால் குடும்பத்தில் வறுமை வருகிறது. அவருடைய மனைவி ருக்மணி பிரிந்து செல்கிறாள்.

கோடை விடுமுறையின் காரணமாகத் தன்னுடைய அண்ணன் சபேசன் வீட்டுக்கு மீனு வருகிறாள். மீனு என்பவள் இக்கதையினுடைய

ஒரு முக்கியமான கதாபாத்திரம், ஒரு திருப்புமுனை. முதல் முதலாக ஒரு ஆணின் ஆதிக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பவளாக மீனு வந்திருக்கிறாள். தனது கடமையிலிருந்து தவறக்கூடிய எந்த ஆணையும் எதிர்த்துப் பேசக்கூடியவளாக ஒரு தைரியமான மனம் படைத்தவளாக விளங்குகின்றாள். தன் அண்ணனான சபேசன் லலிதா மீது எந்தவிதமான காரணமின்றிக் கோபப்படுவதும், அவளைத் திட்டுவதும் என்றும் இருப்பதை நினைத்துக் கோபம் கொள்கிறாள்.

திடீரென்று ஒருநாள் லலிதா வீட்டுப் புறக்கடையில் ஒரு பெண் வந்து நிற்கிறாள். அந்தப் பெண்ணின் அழுகையைக் கண்ட லலிதா அவளுக்கு ஆறுதல் கூறி அவளுக்குத் தேவையான பொருளைக் கொடுத்து அனுப்பிவிடுகிறாள். அதைக் கண்ட வேலைக்காரப் பெண் லட்சுமி "இதெல்லாம் சாமிக்குத் தெரிஞ்சா பெரிய பிரச்சனை ஆயிடும்" என்று கூறுகிறாள். இங்கு என்ன நடக்கிறது என்று மீனு கேட்டவுடன் அவள் பெயர் சரோஜா என்றும் நாணாவினுடைய மனைவி என்றும் கூறுகிறாள் லலிதா. நாணா எந்நேரமும் சீட்டாட்டமும், குடியும் குடித்தனமுமாக இருப்பவன். இதனால் வாழ்க்கையை வெறுத்துப்போன சரோஜா தூக்கிலிட்டுத் தற்கொலை செய்துகொள்கிறாள். இவ்வாறு கீழ்த்தனமான சமுதாயச் சீர்கேடுகள் உடைய ஆண்களாகச் சங்கரலிங்கமும் நாணாவும் இருக்கிறார்கள்.

இது ஒருபுறம் நடக்க மற்றொருபுறம் கிருஷ்ணன் தனது அப்பாவான பாலு வாத்தியார், தன் அம்மா பிரிந்து சென்ற பிறகு வேறு ஒரு பெண்ணுடன் அவர் பழகி இருப்பதைக் காண்கிறான். பொறுப்பற்ற அப்பாவை நினைத்து வருத்தம் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறான்.

மீனு படிக்கும் கல்லூரியில் தாவரவியல் பேராசிரியர் ஹரிஹரன். மீனுவுக்கும் இவருக்கும் நட்பா காதலா என்னும் கேள்வி எழும்பும் வகையில் ஒரு உறவு நீடித்துக்கொண்டிருக்கிறது.

சபேசன் வழக்கம்போல் ராஜுவைத் திட்டுவதும் அடிப்பதும் உதைப்பதுமாக இருக்கிறார். நீ இருப்பதற்குப் பதிலாகச் செத்துத் தொலை என்று கூறிவிடுகிறார். இதனால் தன் மனதிற்குள் பெரும் வேதனை அடைந்த ராஜு ஊருக்கு வெளியே உள்ள குளத்தில் விழுந்து தற்கொலை செய்துகொள்கிறான்.

ராஜு இறப்பதற்கு முன்பாக, மீனுவுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, `இந்தப் பூலோகத்தில் இருக்கும் வீடுகளில் கிடைக்கும் இன்பத்தையும், சந்தோஷத்தையும் விட, அந்த ஆகாயத்தில் நமக்கென்று ஒரு வீடு இருந்தால் எப்படி இருக்கும்.. யாருடைய தொந்தரவும் இல்லாமல் நாம் நிம்மதியாக இருக்கலாம்..` என்று கூறும்போது ராஜுவின் மனநிலையை எண்ணி மீனு வருத்தம் கொள்கிறாள்.

தன் மகன் தன்னால்தான் இறந்துவிட்டான் என்பதை உணர்ந்துகொண்ட சபேசன், மனைவி வீடு என்ற நிலையை இரவோடு துறந்து துறவு வாழ்க்கையை மேற்கொள்கிறார்.

நூலாசிரியர் வாஸந்தி அவர்கள், இப்பூமியில் இருக்கும் வீடுகளை விடவும் ஆகாயத்தில் ஒரு வீடு இருந்திருந்தால் அங்கு நிம்மதி நமக்குக் கிடைத்திருக்கும் என்பதை ஆகாச வீடுகள் புதினத்தின் மூலம், குறிப்பாக ராஜுவின் கதாபாத்திரம் மூலம் விளக்கியிருக்கிறார். இக்கதை சீரழிந்த சமுதாயத்தின் சாட்சியாக எழுத்தாளரால் எழுதப்பட்டிருக்கிறது. ■

● புதுமைப்பித்தன்

சிற்பியின் நரகம்

சூரியாஸ்தமன சமயம். காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் என்றையும்விட அதிக நெருக்கடி. கறுத்து ஒடுங்கிய மிசிர தேசவாசிகளும், வெளுத்து ஒடுங்கிய கடாரவாசிகளும், தசை வலிமையின் இலட்சியம் போன்ற கறுத்த காப்பிரிகளும், வெளுத்த யவனர்களும், தென்னாட்டுத் தமிழும், வடநாட்டுப் பிராகிருதமும் - எல்லாம் ஒன்றிற்கொன்று முரண்பட்டுக் குழம்பின. சுங்க உத்தியோகஸ்தர்கள் அன்னம் போலும், முதலைகள் போலும் மிதக்கும் நாவாய்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்களையும், வேலைக்காரர்களையும் பொற் பிரம்பின் சமயோசிதப் பிரயோகத்தால் தணிக்கை செய்துகொண்டிருந்தனர். அரசனுக்குக் கடாரத்திலிருந்து வெள்ளை யானைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்க்கத்தான் என்றுமில்லாத கூட்டம்!

அஸ்தமனச் சூரியனின் ஒளியே எப்பொழுதும் ஒரு சோக நாடகம். கோவில் சிகரங்களிலும், மாளிகைக் கலசங்களிலும் தாக்கிக் கண்களைப் பறிப்பது மட்டுமல்லாது, கடற்கரையில் கரும்பாறையில் நிற்கும் துவஜஸ்தம்பத்தின் மீது, கீழ்த்திசை நோக்கிப் பாயும் பாவனையில் அமைக்கப்பட்ட பொன் முலாம் பூசிய வெண்கலப் புலியின் முதுகிலும் வாலிலும் பிரதிபலிப்பது அவ்விடத்திற்கே ஒரு மயக்கத்தைக் கொடுத்தது.

இந்திர விழாவின் சமயத்தில் மக்களின் வசதிக்காக அமைக்கப்பட்ட ஸ்நான கட்டிடத்தின் படிக்கட்டில், பைலார்க்கஸ் என்ற யவனன் கடலை நோக்கியபடி உட்கார்ந்திருந்தான். நீண்ட போர்வையான அவனது டோகா காற்றில் அசைந்து படபடவென்றடித்து, சில சமயம் அவனது தாடியையும் கழுத்துடன் இறுகப் பின்னியது.

பெரிய அலைகள் சமயா சமயங்களில் அவனது பின்னிய தோல்வார்ப் பாதரட்சையை நனைத்தன. அவ்வளவிற்கும் அவன் தேகத்தில் சிறிதாவது சலனம் கிடையாது. மனம் ஒன்றில் லயித்துவிட்டால் காற்றுதான் என்ன செய்ய முடியும், அலைதான் என்ன செய்ய முடியும்?

பைலார்க்கஸின் சிந்தனை சில சமயம் அலைகளைப் போல் குவிந்து விழுந்து சிதறின. கனவுகள் அவனை வெறியனைப் போல் விழிக்கச் செய்தன.

திடீரென்று, “சிவா!” என்ற குரல். ஒரு தமிழ்நாட்டுப் பரதேசி!

••

“யவனரே! உமது சித்தம் உமக்குப் பிரியமான ஒன்றுமற்ற பாழ் வெளியில் லயித்ததோ? நான் நேற்றுச் சொன்னது உமக்குப் பதிந்ததா? எல்லாம் மூல சக்தியின் திருவிளையாடல், அதன் உருவம்! கொல்லிப் பாவையும் அதுதான்; குமரக் கடவுளும் அதுதான்! எல்லாம் ஒன்றில் லயித்தால்...?”

“உமது தத்துவத்திற்குப் பதில் ஒரு கிண்ணம் திராட்சை மது எவ்வளவோ மேலானது. அதுவும் ஸைப்பிரஸ் தீவின் திராட்சை... அதோ போகிறானே, அந்தக் காப்பிரியும் ஏதோ கனவை நம்புகிறான். உமது முதல் சூத்திரத்தை ஒப்புக்கொண்டால், உமது கட்டுக்கோப்பில் தவறு கிடையாதுதான்... அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஒவ்வொருவனுடைய மனப் பிராந்திக்கும் தகுந்தபடி தத்துவம்.. எனக்கு அது வேண்டாம்... நாளங்காடியில் திரியும் உங்கள் கருநாடிய நங்கையும், மதுக் கிண்ணமும் போதும்...”

“சிவ! சிவ! இந்த ஜைனப் பிசாசுகள் கூடத் தேவலை, கபாலி வெறியர்கள் கூடத் தேவலை... உம்மை யார் இந்த அசட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு யவனத்திலிருந்து வரச் சொன்னது?”

“உம்மைப் போன்றவர்கள் இருக்குமிடத்தில் நான் இருந்தால்தான் அர்த்தமுண்டு. எங்கள் ஜுபிட்டரின் அசட்டுத்தனத்திற்கும் உங்கள் கந்தனின் அசட்டுத்தனத்திற்கும் ஏற்றத் தாழ்வில்லை...” என்று சிரித்தான் பைலார்க்கஸ்.

“சிவ! உம்மிடம் பாசத்தை வைத்தான். அதுவும் அவன் விளையாட்டுதான்!” என்று தம் சம்புடத்திலிருந்த விபூதியை நெற்றியில் துலாம்பரமாக அணிந்துகொண்டார் பரதேசி.

“நாளங்காடிப் பக்கம் போகிறேன், வருகிறீரா?” என்றார் மீண்டும் அச்சந்நியாசி.

••

“ஆமாம்! அங்கே போனாலும் சாத்தனைப் பார்க்கலாம். அவனிடம் பேசுவதில் அர்த்தமுண்டு... அவனுக்குத் தெரியும் சிருஷ்டி ரகசியம்...”

“ஓஹோ! அந்தச் சிலை செய்கிற கிழவனையா? உமக்கு ஏற்ற பைத்தியக்காரன்தான்... ஏதேது! அவனே அதோ வருகிறானே!” என்றார் சாமியார்.

பைலார்க்கஸ் எழுந்து அவனை யவன முறையில் வணங்கினான்.

சாத்தனுக்கு எண்பது வயதிருக்கும்; தொண்டுக் கிழவன். ஆனால் வலிமை குன்றவில்லை; கண்களின் தீட்சண்யம் போகவில்லை. பிரமன் மனித வடிவம் பெற்றது போல் காணப்பட்டான். அவனும் கைகூப்பி வணங்கி, “பைலார்க்கஸ், உன்னைத்தான் தேடி வந்தேன்! வீட்டிற்கு வருகிறாயா? எனது லட்சியம் இன்றுதான் வடிவம் பெற்றது...!” என்று ஒரு குழந்தையின் உற்சாகத்துடன் கூவியழைத்தான்.

“இவரைத் தெரியுமா? பாண்டிய நாட்டு, உங்கள் பரதேசி... அவர் தத்துவங்களை எல்லாம் என்னுள் திணித்துப் பார்த்தார்... பைலார்க்கஸிடம் முடியுமா?” என்று கேலியாகச் சிரித்தான் யவனன்.

“சுவாமி வரணும், இன்று என் குடிசையில் அமுது படி கழிக்க வேண்டும்” என்று பரதேசியைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் சாத்தன்.

“என்ன, என்ன! நீயுமா?” என்றான் பைலார்க்கஸ்.

“பைலார்க்கஸ்! நீ நிரீசுவரவாதியாக இருப்பதில் எனக்கு வருத்தமில்லை; மற்றவரைக் கேலி செய்யாதே...”

“அதற்குத்தான் நான் பிறந்திருக்கிறேன், அப்பா! எனது வேலை அது...”

“சரி, வாருங்கள் போகலாம், சுவாமி வரணும்!” என்று இருவரையும் இரட்டை மாட்டு வண்டிக்கு அழைத்துச் சென்றான் சிற்பி.

••

வண்டியின் கதி மெதுவாகத்தான் இருக்க முடிந்தது. எதிரே யானைகளும், பொதி கழுதை, பொதி மாடுகளும், துறைமுகத்தை நோக்கிவரும் நேரத்தில் தீப்பந்தம் பிடித்துச் செல்லும் மக்களை விலக்கிக்கொண்டு வண்டி செல்வது கடினந்தான். திடீரென்று அரசாங்க உத்தியோகஸ்தர்களின் ரதம், யானை வந்துவிட்டால் தெருவே தூளிபடும். முரசொலி இருந்து என்ன பயன்? அந்த உப்பு வண்டி ஓட்டிச்செல்லும் பெண் சிறிது தவறினால் ரதத்தின் அடியில்தான்! சாத்தனின் வண்டி அதில் முட்டிக்கொள்ள இருந்தது.

“தெய்வச் செயல்!” என்றான் சாத்தன்.

“உன் சிருஷ்டி சக்தி!” என்றான் பைலார்க்கஸ், வேறு எதையோ நினைத்துக்கொண்டு.

“பைலார்க்கஸ், உனது பேச்சு எனது பெருமையைச் சாந்தி செய்யலாம். நான் எத்தனை நாள் கஷ்டப்பட்டேன்! அது உனக்குத் தெரியுமா? நீ நேற்றுப் பிறந்தவன்... கூத்து! அதில் எவ்வளவு அர்த்தம்! மனிதனுக்குத் தெரிந்ததெல்லாம், தெரியவேண்டுவதெல்லாம்... இந்தப் பிரபஞ்சமே, பைலார்க்கஸ், நீ நினைப்பது போல் வெறும் பாழ் வெளியன்று; அர்த்தமற்ற பேய்க் குழப்பம் அன்று... இருபது வயசிருக்கும்; அப்போ ஒருதரம் பாண்டிய நாட்டுக்குப் போயிருந்தேன்... சிற்பத்தைப் பார்க்க வேண்டுமானால் கொல்லிப் பாவையைப் பார்க்க வேண்டும்.

அங்கேதான், ஒரு மறவன், நாகன், ஒரு கூத்தில் அபிநயம் பிடித்தான். அந்தக் கால் வளைவு, அதை அதிலே பிடித்தேன்... உலகத்தின் அர்த்தத்தை... ஒவ்வொன்றாக, படிப்படியாக

வளர்ந்தது... அந்த மலையத்து நடிகைதான் முகத்தின் சாந்தியை, அந்த அபூர்வமான புன்சிரிப்பை, அர்த்தமற்ற அர்த்தத்தை - பைலார்க்கஸ், உனக்கென்ன! நீ கேலிக்காரன் - உபநிஷத்தில் தேடியலைந்தேன்... ஹிமயத்தில் தேடியலைந்தேன்... சாந்தி அந்த இரவு... என் மனைவி அங்கயற்கண்ணி இறந்த அன்று கிட்டியது... பிறகு வெண்கலக் கலப்பிற்கு என்ன பரீட்சை! என்ன ஏமாற்றம்! ஆசைதான் வழிகாட்டியது. அந்த ரூப சௌந்தரியம் பெறுவதற்கு எத்தனை ஆட்களைத் தேடினேன்! அதன் ஒரு சாயை... நீலமலைக் கொடுங்கோலன் - பத்து வருஷங்களுக்கு முன்பு சிரச்சேதம் செய்யப்பட்டானே - அவனுடைய இடை துவளுதலில் கண்டேன்... தெய்வம் ஒன்று உண்டு... அதன் அர்த்தத்தை என் சிலை உணர்த்த முடிந்தது எனது பூர்வ ஜன்மப் பலன்... இந்தக் கைகளால்... பின்னாலிருந்து ஓர் அர்த்தமுள்ள வஸ்து தூண்டாவிட்டால்... அதைச் சாதிக்க முடியும்?”

“நீதான் சாதித்தாய்! நீதான் பிரம்மா! உன் சாதனைதான் அது. சிருஷ்டி! மயங்காதே! பயப்படாதே! நீதான் பிரம்மா! சிருஷ்டித் தெய்வம்!” என்று பைலார்க்கஸ் அடுக்கிக்கொண்டே போனான்.

••

சாமியார் புன்சிரிப்புடன் வெளியே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

வண்டியும் நாளங்காடியை அடைந்து, கீழ்ச் சதுக்கத்தின் வழியாக ஒரு சந்தில் திரும்பி, ஒரு வீட்டின் முன்பு நின்றது.

மூவரும் இறங்கி வாசற்படியில் ஏறினர். ஒரு யவனப் பெண் வந்து காலைக் கழுவினாள். ஒரு காப்பிரி, மரியாதையாகக் குனிந்து, கலிங்க வஸ்திரத்தினால் துடைத்தான்.

“சுவாமி, வரவேண்டும்! பைலார்க்கஸ், இப்படி வா!” என்று இருவரையும் அழைத்துக்கொண்டு ஓர் அறைக்குள் சென்றான் சாத்தன்... அவன் வயதிற்கு அவ்வளவு துடிதுடிப்பு ஆச்சரியமானதுதான்!

“மூபாங்கோ, தீபம்!” என்று கத்தினான். அந்தக் காப்பிரி ஒரு கைவிளக்கை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். ஜன்னல் இல்லாத அந்த அறையிலும் காற்று நூலிழை போல் வந்து உள்ளத்தையும் உடலையும் மயக்கியது.

“இங்கு கூடவா விளக்கு இல்லை! திரையை ஒதுக்கு! ஸ்வாமி, பைலார்க்கஸ், இதுதான் என் வாழ்க்கை!” என்று திரையை ஒதுக்கினான்.

••

இருவரும் ஸ்தம்பித்து நின்றனர். அந்த மங்கிய தீபவொளியில், ஒற்றைக் காலைத் தூக்கி நடிக்கும் பாவனையில், ஆள் உயரத்தில் மனித விக்ரகம்! விரிந்த சடையும் அதன் மீது விளங்கும் பிறையும், விரிந்து சின்முத்திரைகளைக் காண்பிக்கும் கைகளும், அந்த அதரத்தில் தோன்றிய அபூர்வப் புன்னகையும் மனத்தில் அலைமேல் அலையாகச் சிந்தனைக் கற்பனைகளைக் கிளப்பின. மூவரும் அந்தச் சிலையேயாயினர். சிலையின் ஒவ்வொரு வளைவிலும், ஒவ்வொரு அங்கத்திலும் என்ன ஜீவத் துடிதுடிப்பு!

சந்நியாசி, தம்மையறியாமல் பாட ஆரம்பித்தார்...

பனித்த சடையும், பவளம்போல்
மேனியும், பால் வெண்ணீறும்,
குனித்த புருவமும், கொவ்வைச்
செவ்வாயும், குமிண் சிரிப்பும்,
இனித்தமுடன் எடுத்த பொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மா நிலத்தே!

“சுவாமி, அப்படிச் சொல்லக் கூடாது!”

“சாத்தா! அவர் சொல்லுவதுதான் சரி! இது கலையா! இது சிருஷ்டி! இதை என்ன செய்யப் போகிறாய்?”

“அரசன் கோவிலுக்கு... இதென்ன கேள்வி?”

“என்ன! இந்த அசட்டுத்தனத்தை விட்டுத் தள்ளு... அரசனுடைய அந்தப்புர நிர்வாண உருவங்களின் பக்கலில் இதை வைத்தாலும் அர்த்தம் உண்டு... இதை உடைத்துக் குன்றின் மேல் எறிந்தாலும் அந்தத் துண்டுகளுக்கு

அர்த்தம் உண்டு; ஜீவன் உண்டு..." என்று வெறி பிடித்தவன் போல் பேசினான் பைலார்க்கஸ்.

"சீ, பைலார்க்கஸ்! உனது வெறி பிடித்த கொள்கைகளுக்கு யவனந்தான் சரி! அகஸ்தூஸா - அந்த உங்கள் சாம்ராட் - அவனுக்குத்தான் சரி உன் பேத்தல்!"

"சாத்தனாரே! உமது இலட்சியத்திற்கு அரசன் கோரிக்கைதான் சரியான முடிவு. இனி ஏன் இந்த ஜைனர்கள் தலைதூக்கப் போகிறார்கள்...!" என்றார் சாமியார்.

"இந்த வெறிபிடித்த மனிதர்களை விட, அந்தக் கடலுக்கு எவ்வளவோ புத்தியிருக்கிறது..." என்று கோபித்துக்கொண்டு பைலார்க்கஸ் வெளியேறிவிட்டான்.

••

அன்றுதான் கும்பாபிஷேகம். சிலையைப் பிரதிஷ்டை செய்த தினம். சோழ தேசத்திலேயே அது ஒரு பெரும் களியாட்டம் என்று கூறவேண்டும். சாத்தனுக்கு இலட்சியம் நிறைவேறிற்று. அன்று பைலார்க்கஸ் தனது குதூகலத்தில் பங்கெடுத்துக்கொள்ள உயிருடன் இல்லையே என்ற வருத்தம் சாத்தனுக்கு அதிகம்.

புதிய கோவிலிலிருந்து வீடு சேரும்பொழுது அர்த்தஜாமமாகி விட்டது.

வயதின் முதிர்ச்சி அன்றுதான் அவனைச் சிறிது தளர்த்தியது. சோர்ந்து படுத்தான். அயர்ந்துவிட்டான்.

அப்பா! என்ன ஜோதி! அகண்டமான எல்லையற்ற வெளி! அதிலே சாத்தனின் இலட்சியம், அந்த அர்த்தமற்ற, ஆனால் அர்த்தபுஷ்டி மிகுந்த, ஒரு புன்சிரிப்பு! மெதுவான ஹிருதய தாளத்தில் நடனம்! என்ன ஜீவன்! என்ன சிருஷ்டி!

திடீரென்று எல்லாம் இருண்டது! ஒரே கன்னக் கனிந்த இருள்! ஹிருதய சூனியம் போன்ற பாழ் இருட்டு!

பிறகும் ஒளி... இப்பொழுது தங்கத்தினாலான கோவில்! கண்கள் கூசும்படியான பிரகாசம்! கதவுகள் மணியோசையுடன் தாமே திறக்கின்றன... உள்ளே அந்தப் பழைய இருள்!

சாத்தன் உள்ளே செல்லுகிறான். இருட்டின் கரு போன்ற இடம். அதில் மங்கிய தீபவொளி தோன்றுகிறது! என்ன! இதுவா பழைய சிலை! உயிரில்லை! கவர்ச்சிக்கும் புன்னகையில்லையே! எல்லாம் மருள்... மருள்...!

அந்தகார வாசலில் சாயைகள் போல் உருவங்கள் குனிந்தபடி வருகின்றன. குனிந்தபடி வணங்குகின்றன.

"எனக்கு மோட்சம்! எனக்கு மோட்சம்!" என்ற எதிரொலிப்பு. அந்தக் கோடிக்கணக்கான சாயைகளின் கூட்டத்தில் ஒருவராவது சிலையை ஏறிட்டுப் பார்க்கவில்லை! இப்படியே தினமும்...

••

நாட்கள், வருஷங்கள், நூற்றாண்டுகள் அலைபோல் புரள்கின்றன. அந்த அனந்த கோடி வருஷங்களில் ஒரு சாயையாவது ஏறிட்டுப் பார்க்கவேண்டுமே!

"எனக்கு மோட்சம்...!" இதுதான் பல்லவி, பாட்டு, எல்லாம்!

சாத்தன் நிற்கிறான்...

எத்தனை யுகங்கள்! அவனுக்கு வெறி பிடிக்கிறது. "உயிரற்ற மோட்சச் சிலையே! உன்னை உடைக்கிறேன்! போடு! உடை! ஐயோ, தெய்வமே! உடைய மாட்டாயா! உடைந்துவிடு! நீ உடைந்து போ! அல்லது உன் மழு என்னைக் கொல்லட்டும். அர்த்தமற்ற கூத்து...!" இடி இடித்த மாதிரி சிலை புரள்கிறது - சாத்தனது ஆலிங்கனத்தில், அவன் ரத்தத்தில் அது தோய்கிறது... ரத்தம் அவ்வளவு புனிதமா! பழைய புன்னகை!

சாத்தன் திடுக்கிட்டு விழித்தான். வெள்ளி முளைத்துவிட்டது. புதிய கோவிலின் சங்கநாதத்துடன் அவனது குழம்பிய உள்ளம் முட்டுகிறது.

"என்ன பேய்க் கனவு, சீ!" என்று விபூதியை நெற்றியில் அணிந்துகொள்கிறான்.

"பைலார்க்கஸ் - பாவம் அவன் இருந்தால்..." சாத்தனின் மனம் சாந்தி பெறவில்லை.

■

● முனைவர் மு.சாஹிரா பானு

பெண்ணியத்தை உயர்த்திப்பிடிக்கும் எழுத்து



நாவல் என்பது வரலாற்றையும் தத்துவத்தையும் உள்ளடக்கி வாழ்வு குறித்த முழுமையான தேடலை நிகழ்த்தும் ஒரு இலக்கிய வடிவம். மொழித் திறனும் வடிவ ஒழுங்கும் இருந்தாலும் கூட வாழ்வு குறித்த சுயமான தேடல் என்று வாசகனை மகிழ்விப்பதற்காக எழுதப்பட்ட படைப்புகள் பொழுதுபோக்குக்காக எழுதப்பட்டவையாகவே கருதப்படும். ஒரு சில நாவல்கள் பொழுதுபோக்கையும் மீறி எழுத்தாளரின் உள்ளக் கிடங்கை வாசகர்களின் மனங்களுக்குக் கடத்தும் முயற்சியைச் செய்கின்றன. அல்லி பாத்திமா எழுதிய செல்லக் கருப்பி எனும் நாவல் பொழுதுபோக்கிற்காக எழுதப்பட்டதாக அல்லாமல் பெண்ணிய நோக்கில் படைக்கப்பட்டிருப்பது கவனம் பெறுகிறது.

இவர் வாழும் பகுதி கேரள மாநிலத்தைச் சேர்ந்த மலைப்பிரதேசம் என்பதால் சூழலியல் சார்ந்த அக்கறையோடு தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் அவலங்களை நாவலின் முழுமைக்கும் காட்சிப்படுத்தியிருக்கிறார். தேயிலைத் தோட்டத்தில் மக்கள் படும் வேதனைகளை நேரில் சென்று மக்களோடு கலந்துரையாடி அம்மக்களின் வாழ்வியல் சிக்கல்களை நடப்பியல் பாங்கில் நாவலாகத் தந்துள்ளார்.

பேராசைக்காரர்களின் வார்த்தை ஜாலங்களை நம்பித் தேயிலைக் காட்டிற்கு அடைக்கலமாகச் சென்ற அம்மக்களில் செல்லக் கருப்பி என்ற பெண் கதாபாத்திரத்தை முதன்மைப்படுத்தி இந்நாவலில் உலவ விட்டிருக்கிறார். தன் கணவனின் கொடுமைகள் தாங்க முடியாமல் தங்களது எல்லா வசதிகளையும் நகரத்து வாழ்வையும் உதறிவிட்டுத் தன் மகனுடன் தேயிலைத் தோட்டமான தாய் வீட்டுக்கு வந்துவிடுகிறாள். உறவினர்கள் யாரும் இவளின் வாழ்வியல் குறித்த பிரச்சினைகளை என்னவென்று கேட்பதற்கு முன் வரவில்லை. ஆண்கள் என்றால் அப்படித்தான் இருப்பார்கள், நாம்தான் அனுசரித்துச் செல்லவேண்டும் என்று செல்லக் கருப்பியைக் கணவனுடன் சேர்த்துவைப்பதில் குறிப்பாக இருக்கிறார்கள். ஆனால் அவளின் கணவன் தினம் ஒரு பெண்ணுடன் தகாத உறவு வைத்துக்கொண்டு செல்லக் கருப்பியின்

வயிற்றில் குழந்தை இருப்பதைக் கூட பொருட்படுத்தாமல் எட்டி உதைத்து அதில் இரண்டாவது குழந்தை கலைந்துபோகிறது. இதனால் தன் கணவனுடன் சேர்ந்து வாழ்வதில்லை என்று தீர்க்கமான முடிவெடுத்து மணவிலக்கு பெறுகிறாள்.

மல்லான் அவளைக் காதலித்து ஏமாற்றுபவன். தேயிலைத் தோட்டத்தில் கூலி வேலை செய்யும் பெண்களை அடிமையாகவும் பாலியல் தேவைக்காகவும் பயன்படுத்தும் மாடசாமி கங்காணி போன்ற கதாபாத்திரங்களை ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாகப் புனைந்து இருக்கிறார். இவருடைய தாயார் மாலதி. போராட்டங்களில் உடன் பயணிக்கும் மேரி, பானு, சந்திரா போன்ற கதைமாந்தர்களும் மனதில் நிற்கின்றனர்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் நிலையையும் வசிப்பிடச் சூழலையும் மனக் கண் முன் நிறுத்துகிறார். லாயம் எனப்படும் தோட்டத் தொழிலாளிகள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட வீடுகளில் மூன்று நான்கு குடும்பங்கள் மட்டுமே வசிப்பதும் அவர்களுக்குக் கழிவறை வசதி கூட கிடையாது என்பதும் தொழிலாளிகளின் பரிதாப நிலையை உணர்த்தக் கூடியது.

தொழிலாளிகள் பெரும்பாலும் வாரநாட்களில் தம் மேல் ஒட்டிக்கிடக்கும் அட்டைப் பூச்சிகள், புதர்களுக்குள் ஒளிந்து கிடக்கும் காட்டுப்பன்றிகள், பாம்புகள், மலைக் குளவிகள் போன்றவற்றோடு ஒன்றி வாழ்வதாகக் கூறுகிறார். சனி ஞாயிற்றுக் கிழமைகளில் வாரச்சந்தையும் ஓய்வும்தான் அம்மக்களுக்கு ஆறுதலாக இருந்து இருக்கிறது என்று மலைவாழ் மக்கள் படும் துயரங்களை விவரிக்கிறார். கூலி உயர்வும் வருடத்திற்கு ஒருமுறை வழங்கப்படுகிற போனஸும அம்மக்களின் பெரும் எதிர்பார்ப்புகள் ஆக இருந்திருக்கின்றன.

அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் செல்லக் கருப்பி தலைமையில் போராட்டம் ஆரம்பிக்கிறது. பத்தாம் வகுப்பு வரை படித்து இருந்தாலும் தன் தந்தையைப் போல விவரம் அறிந்தவள். தலைமைத்துவம் மிகுந்தவள். சாதி மதம் பாராமல் அனைவருக்கும் உதவும் குணம் கொண்டவள் என்று கதையின் நாயகியின் குணாதிசயங்களைப் பல்வேறு அத்தியாயங்களில் காட்சிப்படுத்துகிறார்.

செல்லக் கருப்பி முன்னெடுக்கும் போராட்டம் ஆரம்பத்தில் கவனம் பெறவில்லை என்றாலும் போகப்போக மக்களின் கவனத்தை ஈர்க்கிறது. இதனால் அரசியல்வாதிகள் இப்போராட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள முயலும்பொழுது செல்லக் கருப்பி எதிர்க்கிறார்.

போராட்டக் களத்தில் பானு சுபைதா ஆகியோர் இஸ்லாமியர்களின் முக்கியப் பண்டிகையான ரமலான் நோன்பை வைப்பதற்கு அங்கேயே சமைத்து உண்டு நோன்பு நோற்றுப் போராட்டத்தில் பங்கேற்றார்கள் என்கிற பதிவு போராட்டத்தின் சாராம்சத்தை வீரியத்தை எடுத்துச் சொல்வதாக அமைந்திருக்கிறது. அர்ப்பணிப்பும் தியாகமும் இல்லாத எந்த ஒரு போராட்டமும் வெற்றி பெற முடியாது என்பதனை மேற்கண்ட இரண்டு கதாபாத்திரங்களின் வாயிலாக மெய்ப்பிக்க முயன்றிருக்கிறார்.

இரண்டு முறை பேச்சுவார்த்தை நடந்து தோல்வியில் முடிந்தாலும் மூன்றாவது முறை செல்லக் கருப்பியின் தலைமையில் நடைபெற்ற போராட்டம் வெற்றி பெறுவதாக இந்நாவல் பதிவு செய்கிறது. ஒரு பெண் முன் எடுத்த போராட்டம் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை, பெண்ணியத்தின் வீரியத்தை எழுத்து வாயிலாகப் பதிவு செய்து வைப்பதில் வெற்றி கண்டிருக்கிறார் அல்லி பாத்திமா.

இந்த நாவலின் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் மொழிநடை. சோர்வில்லாமல் வாசகர்களை மலைவாழ் மக்களோடு இரண்டறக் கலந்து பயணிக்கும் உணர்வை உருவாக்கியிருக்கிறார். தொழிலாளர்களின் போராட்டங்கள் குறித்து முன்னரே பல்வேறு படைப்புகள் தமிழில் வந்திருந்தாலும் இந்த நாவல் பெண்ணியம் சார்ந்து எழுதி இருப்பதன் வாயிலாகத் தன் இடத்தைத் தமிழ்ப் படைப்புச் சூழலில் தனியே நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறது. படைப்பின் நுண்தளத்தைச் சுட்டிக்காட்டி அதன்வழி வாசகர்களைத் தன் வசப்படுத்தும் ஆற்றல் நூலாசிரியருக்குக் கைவரப் பெற்றிருக்கிறது. ■

கவி : ஜெ.பிரான்சிஸ் கிருபா

பொறுமையான நறுமணம்

பொறுமையான நறுமணம்
அந்த அந்தி மாலைப் பொழுது
அணிந்திருக்கும்
மஞ்சள் வெயிலில்
ஆங்காங்கே அழகாகக் கிழிந்திருக்கின்றன
தைக்க முடியாத நிழல்கள்.
எங்கிருந்தோ தவழ்ந்து வருகிறது
ஒரு மரணத்தின் நறுமணம்.
குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள், ஆண்களென
அனைவரும் உலவிக்கொண்டிருக்கின்றனர்
வீதியில்
யாரோ ஒருவருக்காகத்தான்
சமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது
அந்தச் சாவு
என்றாலும்
எல்லோரையும் முகர்ந்து பார்க்கிறது
அதன் வாசம்!

(நட்சத்திரப் பிச்சைக்காரன் நூலிலிருந்து)

WRC மற்றும் படைப்பு குழுமம் இணைந்து நடத்தும்
மகளிருக்கான மாபெரும் சர்வதேச காணொளி பேச்சுப்போட்டி
பரிசு
50,000
இரு பிரிவுகளில்
Below Above 20
தலைப்பு
மாண்புமிகு மகளிர்
(மகளிர்/பெண் சார்ந்து எந்தக் கருவிலும் பேசலாம்)
நடுவர்: பேச்சாளர் கவிதா ஜவகர்
பதிவு செய்யப்பட்ட காணொளி வாட்சாப்பில் அனுப்ப :
7338897788
கடைசி நாள்: 05 - 03 - 2022
கால அளவு: மூன்று நிமிடங்கள்
முழு விவரம் அறிய:
padaippu.com
முடிவு அறிவிக்கும் நாள்:
15 - 03 - 2022
padaippu

WRC மற்றும் படைப்பு குழுமம் இணைந்து நடத்தும்
மகளிருக்கான மாபெரும் சர்வதேச கவிதை போட்டி
தலைப்பு
மாண்புமிகு மகளிர்
(மகளிர்/பெண் சார்ந்து எந்த கருவிலும் எழுதலாம்)
பரிசு
25,000
பங்குபெறுவோர்:
மகளிர் மட்டும்
நாள்: 22 - 2 -2022
முழு விவரம் அறிய:
padaippu.com
நடுவர்: கவிஞர் பெருந்தேவி
முடிவு அறிவிக்கும் நாள்:
08 - 03 - 2022
மகளிர் தினத்தன்று
padaippu